உ

முருகன் துணை

# சாளம்பையான்



மல்லாகம்

சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்

## இராஜகோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2014

உ

முருகன் துணை

# சாளம்பையான்



## இராஜகோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர்
## 2014

### மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்

ஜய வருடம் ஆனித்திங்கள் 16 ஆம் நாள்

30.06.2014

தலைப்பு : சாளம்பையான்
இராஜ கோபுர சிறப்பு மலர்

முகவரி : சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்
கோட்டைக்காடு, மல்லாகம்.

உரிமை : தேவஸ்தானம்

பதிப்பு : ஆனி 2014

வெளியீடு : சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்
கோட்டைக்காடு, மல்லாகம்

அட்டை வடிவமைப்பு : சு. சுகன்யன், செ. விதுர்சன்

அச்சுப்பதிப்பு : கரிகணன் (பிறைவேட்) லிமிட்டெட்
681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.




முருகன் துணை

# சமர்ப்பணம்




## "சாளம்பையான்" மலரை

கருணைமிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானக் கந்தனின் திருவடிகளுக்குச்
சமர்ப்பிக்கின்றோம்

மலர் வெளியீட்டுக்குழு,
சாளம்பை முருகன்,
தேவஸ்தானம்.

# கும்பாபிஷேக நிகழ்வுகள் - 2014





# கும்பாபிஷேக நிகழ்வுகள் - 2014







மூல மூர்த்தி

## ஆலய ஸ்தாபகர்



அமரர் திருவாளர் அழகர் சுவாமிகள்

## தேவஸ்தான பிரதம குரு



"ஸ்கந்தராதனா"

**சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள்**

# தேவஸ்தான குரு



பிரம்ம ஸ்ரீ சிவ யதுகரசர்மா

## சாளம்பையான் மலரின் உள்ளே....


*1. முன்னுரை* **01**

*2. மலரின் வெளியீட்டுக் குழு சார்பில்* **02**

*3. ஸ்தபதியை வாழ்த்துகின்றோம்.* **04**


**ஆசியுரைகள்**


*1. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்* **05**

*2. கலாநிதி ஆறு.திருமுருகன்* **06**

*3. பிரமச்சாரி சிவேந்திர சைதன்யா* **07**

*4. சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்* **08**

*5. சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள்* **09**

*6. பிரம்மஸ்ரீ சிவ. யதுகரசர்மா* **10**


**வாழ்த்துச் செய்திகள்**


*1. ஆலய பரிபாலன சபைத் தலைவர்* **11**

*2. ஆலய பரிபாலன சபைச் செயலாளர்* **12**

*3. ஆலய பரிபாலன சபைப் பொருளாளர்* **13**

*4. சிவானந்த வாரிதி சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்* **14**

*5. இ. ஆனந்தன்* **16**

*6. இ. கதிரமலைநாதன்* **17**

*7. முருகதாசன் - பொன்.கந்தசாமி* **18**

*8. திருமதி தர்ப்பணா - சுதர்சன்* **19**

*9. தி. பிரகாஷ்* **20**

*10. முத்துலிங்கம் நந்தகோபாலன்* **21**

*11. ச. இரத்தினவடிவேல்* **22**

*12. ஆறுமுகம் இரகுபதி* **24**

13. நா. தம்பிராசா 26
14. வே. ஜெயக்கொடி 27
15. ஐ. பாலசிங்கம் 28
16 தலைவர், சைவ வாலிபர் சனசமூகநிலையம் 30
17. கு. தெய்வேந்திரன் 31

கட்டுரைகள்

1. ஆலய வரலாறு 32
2. கதிர்காம முருகன் தொன்மையும் அடையாளமும் 37
3. கந்தபுராணம் காட்டும் முருக வடிவங்கள் 41
4. இழந்த நலம் 55
5. இந்து திருமணச் சடங்குகள் வெளிப்படுத்தும் வாழ்வியற் பண்பாடு 66
6. உதித்தனன் உலகம் உய்ய 71
7. கோபுர தரிசனம் 74
8. துடக்கும் தொந்தரவும் 77
9. யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு நிகழ்வுகளில் பொதுவாகத் தோன்றுகின்ற சில ஐயங்களுக்கான விளக்கங்கள். 83
10. வாழ்வு மிகுத்து வரும் 94
11. தமிழ்க் கடவுள் முருகன் 97
12. ஓம் எனும் மந்திரத்தின் அற்புத சக்தி 100

கவிதை

1. நாம் வழுத்தும் படிக்கே வரமானாய் எம் வாசலிலே சாளம்பைப் பதிகம் 104
2. சாளம்பையான் கோபுரமே கவிதை 107
3. சாளம்பை வேல்முருகப் பெருமான் திருவூஞ்சல் காப்பு 108
4. சாளம்பை முருகன் ஆலயத்தில் நடைபெறுகின்ற விஷேட விழாக்களின் உபயகாரர்களின் பெயர்ப்பட்டியல் 2014 116

# முன்னுரை



## பிறப்பெடுத்தோம் அவன் பணி செய்து கிடப்பதற்கே

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவமும் தமிழும் பூத்துக் கமழும் ஏழாலை பெருங் கிராமத்தின் மேற்கெல்லையோரமாகக் கோட்டைக்காடு எனும் குறிச்சியில் வீற்றிருந்து அருள்பாலித்திருக்கும் சாளம்பைக் கந்தன் தனது 89ஆவது வருடத்தினை இவ்வாண்டு நிறைவு செய்கின்றான்.



இக்கால எல்லைக்குள் இந்த ஆலயம் பல திருப்பணி வேலைகளைப் படிப்படியாக மேற்கொண்டு பரிவார மூர்த்திகள் உள்ளடங்கலாக தேவஸ்தானமாக விளங்குவதைக் கண்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். கடந்த 15 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் முக்கிய திருப்பணியாகிய சித்திரத்தேர்கள், தீர்த்தத்தடாகம் என்பன அமையப்பெற்றதுடன் இன்று பாரிய திருப்பணியான இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்ட நிலையில் கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு இம்மலர் வெளிவருவது சாலப்பொருந்தும். இம்மலர் ஆலய வரலாறு அதன் வளர்ச்சிப் பரிமானம், ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகளோடு சமயக் கட்டுரைகள், குறிப்புக்கள் என்பனவும் உள்ளடங்கியுள்ளது சிறப்பம்சமாகும். மேலும் எமது வருங்கால சந்ததியினருக்கு ஓர் வரலாற்றுப் பொக்கிஷமாகவும் அமையும் என்பதில் ஐயப்பாடு இல்லை எனலாம்.

கோபுர உச்சி நின்று கருணை மழை பொழியட்டும் கந்தன் - அதில் நனைந்திடுவோம் நலம்பெறுவோம்.

'வேலுண்டு வினை தீர்க்க மயிலுண்டு எமைக்காக்க'

'யாமிருக்க பயமேன்'

ஓம் சரவணபவ

**தா. பேரின்பநாதன்**
உபதலைவர், கோட்டைக்காடு,
சாளம்பை முருகமூர்த்தி ஆலய நிர்வாக சபை.



# மலர் வெளியீட்டுக்குழு சார்பில்

மல்லாகம் சாளம்பைப் பதியிலே வள்ளி, தெய்வானை சமேதரராய் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சாளம்பைக் கந்தனின் இராஜ கோபுர, கும்பாபிஷேக காட்சியைக் காண திருவருள் பாலித்த கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

கும்பாபிஷேக மலர் வெளியிட வேண்டும் என்று தேவஸ்தான நிர்வாகம் தீர்மானித்து என்னை முன்னின்று இப்பணியை செய்ய வேண்டுமெனப் பணித்தனர். இப் பாரிய பொறுப்பை என்னால் செவ்வனே நிறைவேற்ற முடியுமா என சற்றுச் சிந்தித்தேன். இறைவன் இட்ட கட்டளையாக இதனை ஏற்று, ஏனைய மலர்க்குழு உறுப்பினர்களின் உதவியோடு இம்மலரை வெளியிடுகின்றோம். இது சாளம்பை முருகனின் அருள். இம் மலர் நறுமணம் கமழுகிறதோ அல்லவோ என்பதை இதனை வாசிக்கும் அன்பர்களின் முடிவிற்கு விடுகின்றோம். அன்பர்கள் இம் மலரின் குறைகளை நீக்கி நிறைவைக் காணுமாறு வேண்டுகின்றோம்.



இம் மலர் எமது ஆலயத்தின் வரலாற்று ஆவணமாகப் பேணப்படக்கூடிய விதத்திலும், எதிர்கால சந்ததியினர் இம்மலரைப் படிக்கும் போது தமது மூதாதையர்கள் இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்கு எத்தகைய பங்காற்றியுள்ளனர் என்பதை அறியக்கூடிய விதத்திலும் உருவாகியுள்ளது. இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு ஆரம்பம் தொட்டு இன்றுவரை பங்காற்றிய அத்தனை பேரையும் நன்றியுடன் நினைவு

கூர்ந்து இம் மலரில் இடம்பெறச் செய்துள்ளோம்.



அற்புதம் நிறைந்த இவ் வாலயத்தில் நைமித்திய பூசைகள் அபிஷேகங்கள், திருவிழாக்கள், நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, மற்றும் விஷேட சமய விழாக்கள் ஆகிய உபயங்கள், பக்தி பூர்வமாக முன்னோராலும் அவர்கள் வழிவந்தோராலும் பேணப்பட்டு வருகின்றன. உபயகாரர் பட்டியல் ஆலய சொத்துக்களின் பட்டியல், வரவு செலவு அறிக்கைகள் என்பன ஆவணப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றன.

இராஜகோபுர திருப்பணிக்கு திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு இச்சபையின் அயராத முயற்சியினாலும் இவ்வூர் மக்களினதும் வெளிநாட்டில் வசிக்கும் எமது அன்பர்களினதும் பேருதவியினாலும் அழகான கவர்ச்சியான தோற்றமுடைய கோபுரம் எம் பெருமானுக்கு உருவாக்கப்பட்டது.

மேலும் இம் மலரிலே இடம் பெற்றிருக்கும் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் கட்டுரைகள், என்பவற்றைச் சேகரிக்கச் சென்ற போது என்னை அன்போடு வரவேற்று இப் பணியைப் பாராட்டி தங்களினுடைய ஆக்கங்களை உரிய காலத்தில் தந்துதவிய சான்றோர்கள் அத்தனை பேரையும் தலை வணங்குகின்றோம்.

ஆலயம் தொடர்பான இம் மலரில் இடம் பெற்ற அத்தனை தகவல்களும் ஆலய பதிவேட்டிலிருந்து பெறப்பட்டு நிரைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மலர் சிறந்த முறையில் அமைய வேண்டுமெனக் கருதி, சிவத்திரு குமாரசுவாமி ஐயா அவர்களிடமும், தேவஸ்தான ஆலோசகர் திரு. இ. ஆனந்தன் அவர்களிடமும் ஆலோசனை கேட்டபோது அவர்கள் நல்ல பல ஆலோசனைகளை வழங்கி உதவியிருந்தார்கள் அவர்கட்கும், இம்மலர் வெளிவர உழைத்த மலர்க் குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் இத் திருப்பணிக்கு நிதி உதவி செய்த அடியார்கள் அனைவருக்கும் எம் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

நன்றி

**டாக்டர் ஈ. சுந்தரேஸ்வரன்**
நிர்வாகசபை உறுப்பினர்
மலர்க்குழு உறுப்பினர்



# ஸ்தபதியை வாழ்த்துகிறோம்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் அராலி கிழக்கு திரு. வாலைமுத்துவின் பேரனாகிய தவபாலசிங்கம் தவவீரசிங்கம் அவர்கள் சிற்பக் கலையில் சிறந்து விளங்கும் சிற்பாசான். இவர் நல்லூர், கீரிமலை நகுலேஸ்வர இராஜகோபுரம், கல்வியங்காடு வீரபத்திரர் இராஜகோபுரம் இன்னும் பல ஆலயங்களின் மூலஸ்தான கோபுரங்களையும் வெளிநாடுகளிலும் ஆலயங்கள் அமைத்துப் பெருமை சேர்த்து விளங்கும் சிற்பாசான். எமது ஆலயத்திற்கும் இராஜகோபுரம் அமைத்து அடியார்களைக் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் பெற வைத்த கலைஞனுக்கு ஆசி கூறி எம்பெருமான் திருவருள் பெற்று மென்மேலும் பல திருப்பணிகளை நிறைவேற்ற எல்லாம் வல்ல சாளம்பை முருகனின் திருப்பாதங்கள் பற்றி வணங்குவதோடு சிற்பசிரோண்மணி என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவிக்கின்றோம்.

நன்றி.

**பரிபாலனசபை,**
திருப்பணிச்சபை,
சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்,
மல்லாகம்.





ஆறுமுக சுவாமி


# அருளாசிச் செய்தி



முருகன் அடியார்களுக்கு!

மல்லாகம், கோட்டைக்காடு பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்கு இராஜ கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். பல ஆலயங்களைக் கொண்ட மல்லாகம் பிரதேசத்தில் முருகப் பெருமான் முத்தமிழால் வைதாரை வாழவைக்கின்ற அருள்நிலை கொண்டவர். ஆலயத்தின் அமைப்பில் இராஜகோபுரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தூலலிங்கமாகிய கோபுரம் வழிபடுவோருக்கு கோடி புண்ணியம் வழங்குகின்றது. இதனை மையமாகக் கொண்டு முருகப் பெருமானுக்கு பஞ்சதளங்களைக் கொண்ட இராஜகோபுரம் அமைந்திருப்பது மல்லாகம் கோட்டைக்காடு வாழ் சைவத்தமிழ் மக்களுக்கு ஆன்மீக வளர்ச்சியை மேல் இருந்து செய்வதாக அமைகின்றது. இந்த அறப்பணியைச் செய்திருக்கும். உள்ளூர், வெளியூர் வாசிகளையும் ஆலய பரிபாலன சபையினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இப்புனிதப்பணியை சிறப்பித்து நூல் வெளியிடும் மலர்க்குழுவினை இறைவன் ஆசீர்வதிப்பாராக. நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீன குரு முதல்வர் இரண்டாவது குருமஹா சந்நிதானம்.
நல்லை ஆதீனம்.





# ஆசியுரை

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

மல்லாகம் அருள்மிகு சாளம்பை முருகன் திருக்கோவிலில் அழகான இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். மிகத்துரிதமாக வளர்ச்சிபெற்றுத் திகழும் இத்திருக்கோவில் சிறப்பினைக் கண்டு பூரிப் படைகிறேன். இவ்வாலய வளர்ச்சியில் மிகவும் அக்கறையோடு செயற்படும் அடியார்களையும் அறங்காவலர்களையும் வாழ்த்துகிறேன். சாளம்பை முருகனின் பேரருள் கண்டு மகிழ்ச்சியடையும் பக்தர்களின் ஆனந்தத்தை ஆண்டு தோறும் விழாக்களில் யான் நேரில் கண்டுள்ளேன். சிவாகம நெறிப்படி, சாளம்பை முருகன் ஆலயத்தின் திருப்பணிகள் யாவும் நிறைவு பெற்று வருகிறது. முருகப் பெருமானின் திருவருளால் பக்தர்கள் யாவரும் நிறைசெல்வத்தோடு வாழ்கிறார்கள். கருணை மழை பொழியும் கந்தப்பெருமான் எம் மண்ணில் அமைதியையும் நீதியையும் நிலை நாட்ட வேண்டி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
செஞ்சொற் செல்வர்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.






நடராஜர் சிவகாமி அம்மன்



வசந்தமண்டப விக்கிரகங்கள் (முத்துக்குமார சுவாமி)



# ஆசியுரை

சைவநெறி சார்ந்த சான்றோர் பலர் பிறந்த திருவூர் மல்லாகம். இத்திருவூரில் பழமைமிக்க கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி திருக்கோவிலில் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். எமது சனாதன தர்மத்தின் கருவூலங் களாக ஆலயங்கள் விளங்குகின்றன. மனிதர்களைப் புனிதர்களாக்கும் மாபெரும் தெய்வீக ஆற்றல்களைக் கொண்டு விளங்கும் எமது திருக்கோவில்களை காலத்திற்குக் காலம் செப்பனிட வேண்டிய கடமை அடியவர்களுக்குரியது. அவ்வகையில் இத் திருக்கோவிலை மிகவும் சிறப்பாகக் காத்து பேணிவரும் நிர்வாக சபையினர்களின் அயராத முயற்சியால் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் நிறைவேறுவது திருவருள் என்பது கண்கூடு. இவ்வரிய முயச்சியில் ஈடுபட்ட ஆலயப் பரிபாலன சபையினருக்கும் அவ்வூர் மக்களுக்கும் நல்லாசிவேண்டி எல்லாம்வல்ல சாளம்பை முருகப்பெருமானது திருவடியைப் பணிந்து குருதேவர் சுவாமி சின்மையானந்தரின் பாதக் கமலங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

**பிரமச்சாரி சிவேந்திர சைதன்யா**
யாழ் வதிவிட ஆச்சாரியர்.





# ஆசிச்செய்தி

கலியுக வரதன் கந்தப் பெருமானுடைய புகழ் சைவ உலகம் முழுவதும் பரவியது. அவனுடைய அருளோ அண்டங்களுக்கு அப்பாலும் நிறைந்தது. அங்கு எங்கும் நீக்கமற நிறைந்துள்ள முருகன் சாளம்பை அடியவர்க்கு எளியனாய் எழுந்தருளி உள்ளான். அவன் அருள் வெள்ளத் தில் அழுந்தி ஆனந்தம் அடைவோர் எண்ணில்லாதவர்கள் நேரில் தரிசித்தவர்களின் நெஞ்சை விட்டு நீங்காத கோலத்தவன் இந்தக் குமரன்; அழகன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது தமிழ் மூதாட்டியின் அறிவுரை திருநாவுக்கரசரோ, 'கோயில் இல்லாத ஊர் திரு இல் ஊர் என்றும் அடவி காடென்றும்' கூறினார். திரு இல் ஊர் என்பது திருமகள் இல்லாத ஊர். திருமகள் இல்லாத ஊரில் அவளுடைய தமக்கை எழுந்தருளி இருப்பாள். கோயிலுக்குப் போகாத மக்களைக் குறிப்பாக இழித்துச் சொல்கிறார். கோயில் இல்லாத ஊர் அடவி காடென்பதால் அங்கு குடியிருப்போர் கொடிய விலங்குகளாகக் கொள்ளப்படுகின்றனர். இதேபோல் திருவள்ளுவர் "இறைவனை வணங்காத தலை பயனில்லாத தலை" எனக் கூறுகிறார்.

இப்படி முன்னோர்களால் போற்றப்பட்ட முருக வழிபாடு இலங்கையின் வடபால் யாழ். வலி தெற்கு மல்லாகம் சாளம்பை முருகன் தேவஸ்தானம் திகழ்கிறது. இராஜகோபுர கும்பாபிஷேகமும் நடைபெறுகின்ற நன்னாளில் இப் புண்ணிய பணியில் ஈடுபடும் ஆலய அர்ச்சகர் பரிபாலனசபையினர், தொண்டர் அடியவர்கள், பக்தர்கள் அனைவருக்கும் குடமுழுக்கு நன்னாளில் பதினாறு பேறுகளும் பெற்று, பெரு வாழ்வு வாழ்வீர்களாக.

'லோகா சுகினோ பவந்து'

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**
ஆதினகர்த்தாவும், சிவாச்சாரியாரும்,
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில், மருதனார் மடம்.



மூலவர்



பிள்ளையார்



மகா லட்சுமி



சண்டேஸ்வரர்

# ஆசிச்செய்தி



ஒரு ஊரின் சிறப்பையும் மக்களின் வாழ்க்கையையும் பிரதிபலிப்பவற்றில் அவ்வூரில் அமைந்துள்ள ஆலயங்களே முக்கியஇடம் வகிக்கின்றன. இந்துசமய கலை, கலாசார பாரம்பரியங்களை எடுத்தியம்புவனவாக அமைந்துள்ளன. மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்ற முப்பெருமைகளையும் உடையது நம் சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம். இவ் ஆலயத்தில் விகிர்தி வருடம் சித்திரைத்திங்கள் 22ஆம் நாள் (05.05.2010) உத்தராட நன்நாளில் மஹா கும்பாபிஷேகத்தினைப் பிரதமகுருவாக இருந்து நடாத்தி வைத்தேன்.

கடந்த 2012ஆம் ஆண்டு இராஜகோபுரம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வுடன் ஆரம்பமாகி இன்றைய தினம் இராஜகோபுரக் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. மேலும் எம் முன்னோர்கள் ஒவ்வொருவரும் திரகரணசுத்தியுடன் செய்த திருப்பணிகளின் பயனாலும் பக்தியுடன் கூடிய மன எழுச்சியினாலும் அமையப் பெற்றுள்ளது.

இராஜகோபுரத்தின் அமைப்பைக் கவனித்தால் சில அதிசயங்கள் தோன்றும். கோபுரத்தில் சிற்பங்களை நம் இஷ்டப்படி வைத்துவிட முடியாது. இன்ன இடத்தில் இன்னஇன்ன தெய்வம் தான் வைக்கவேண்டும் என்ற நியதி உண்டு. கோபுரத்தின் பக்கங்களிலே தேவதைகள், ரிஷிகள், தேவர்கள், முனிவர்கள், பக்தர்கள், மனிதர்கள், பூதகணங்கள், பிராணிகள் என கணக்கற்ற சிற்பங்கள் இடம் பெற்றிருக்கின்றன. பிரபஞ்ச அமைப்பில் இவை யாவைக்கும் இடமுண்டு என்பதே கோட்பாடு. அண்டத் தினுள் இன்னது தான் இருக்கின்றது. இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது. இதைத்தான் கோபுர சிற்பங் கள் விளக்குகின்றன.

இவ் இராஜகோபுர கும்பாபிஷேகமானது சிறப்பாக நடைபெற பெரும் முயற்சியில் ஈடுபட்ட பரிபாலனசபை அங்கத்தவர்களுக்கும் திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி பொருளுதவி, சரீர உதவி செய்து கொடுத்த அடியார்கள் அனைவருக்கும் முருகப் பெருமான் திருவருள் கிடைக்கவும், மேலும் இந்தக் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு மலரவிருக்கும் மலர் சிறப்பாக அமைய வேண்டியும் எனது பிரார்த்தனையையும் ஆசியையும் அன்புடன் முருகப்பெரு மானின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

'வாழ்க சைவம் வளர்க இறை தொண்டு'<br>
'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

**சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள்**

'ஸ்கந்தராராதனாகி' பிரதமகுரு.

# ஆசியுரை



தெய்வீகத் திருவருள் நிறைந்த சாளம்பைப் பதியில் கதிர்காம கந்தனின் அவதாரமாகத் தோன்றி, கோயில் கொண்ட முருகப் பெருமான் ஆலயத்தில் புதிதாக அழகுற அமைக்கப்பட்ட ஐம்பொறிகளின் தத்துவமாக விளங்கும் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு சாளம்பைப் பதியின் பெருமையையும், கந்தக்கடவுளின் பெருமையையும் பல அருமையான கட்டுரைகளையும் மேலும் பல விடயங்களையும் தன்னுள் உள்வாங்கி 'சாளம்பையான்' என்ற நூல் அனைவரது கரங்களிலும் அழகுடனும் பெருமையுடனும் மிளிர்கின்றது.

ஒரு இராஜகோபுரம் எவ்வாறு இந்து மதம் உயர்வானது எனக் காட்டுகின்றதோ அதேபோல் இந்நூல் பல உயர்ந்த கருத்துக்களைத் தன்னுள் உள்வாங்கி அனைத்து மக்களுக்கும் தெய்வீக சிந்தனையையும் இந்து சமயத்தின் உயர்வையும் உணர்த்துகின்றது. இம் மலர்க்குழுவினர் ஒரு சிறந்த மலரை மலரவைக்க வேண்டும் என்பதற்காக தம் நலன்கருதாது சாளம்பைப்பதியின் சிறப்பையும் முருகனின் அளவுகடந்த கருணையையும் எடுத்துக்காட்ட இந்நூலை 'அவன் அருளாலே அவன்தாள் பணிந்து' என்பதற்கேற்ப முருகனுடைய அருளால் இந்நூலை 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்ற அப்பரடிகளின் வாக்கிற்கு ஏற்ப தமது தலையாய கடமையாகக் கொண்டு வெளியிடுகின்றனர். இந்நூலை உருவாக்குவது சுலபமானதல்ல. எனவே, எந்த நோக்கத்திற்காக இந்நூல் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் சிறப்பாக நிறைவேறவும் மேலும் பல நூல்கள் வெளிவரவும் சாளம்பைப் பெருமானின் திருவருளை வேண்டி அவன் திருப்பெரு வடிவத்தை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ சிவ. யதுகர சர்மா**
தேவஸ்தானகுரு





அம்மன்



சிவலிங்கம்



தம்ப பிள்ளையார்



நாகதம்பிரான்



உள் வைரவர்



வெளி வைரவர்



காளி அம்பாள்



தெட்சணாமூர்த்தி



# ஆலய பரிபாலனசபைத் தலைவரின்
# வாழ்த்துச் செய்தி

கதிர்காமக் கந்தனின் திருவுருவாய் மல்லாகம் சாளம்பைப் பதியினில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சாளம்பை முருகன் திருவடிகளைப் பணிந்து, இன்றைய இந்த இராஜகோபுர கும்பாபிஷேக நன்நாளிலே எனது குறுகிய வாழ்த்து ரையை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது ஆலயத்தில் மூலஸ்தானத்தில் முருகன் கை வேல் தங்கமயமாக ஒளி வீசிக்கொண்டிருந்து அடியார்களுக்கு அருள் ஒளியைப் பரப்பிக்கொண்டி ருக்கின்றது. சாளம்பை முருகன் திருவருட்கடலிலே குளித்து இன்பம் பெற்றவர்கள் பலர் தமது அனுபவங்களைக் கூறி மெய்சிலிர்க்கின்றனர்.



இவ்வாலயத்தில் திருப்பணி வேலைகள் காலத்துக்குக் காலம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இந்தவகையில் இராஜ கோபுரத் திருப்பணி வேலைகளும் திரு. இ. ஆனந்தன் (ஆலய பரிபாலனசபை முன்னாள் தலைவர்) அவர்களினால், இராஜகோபுர வரைபடம் திரைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அடியார்களினது மனமுவந்த அன்பளிப்புக்களின் மூலம் சுமார் ஒன்றரை வருட காலத்திற்குள் பூர்த்தியடைந்து இன்று கும்பாபிஷேகமும் சிறப்புற நிறைவேறியுள்ளது. தொடர்ந்தும் இவ்வாலயம் பலவழிகளிலும் வளர்ந்து சிறப்புறவும் சாளம்பை முருகன் அருள் அனைவருக்கும் பூரணமாகக் கிடைத்து அனைவரும் இன்பமாக வாழவும் எல்லாம்வல்ல முருகப்பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி லோகநாயகி இரகுபதி**
ஓய்வு நிலை அதிபர்.

# 'கோலமா முருகன்' அடியினைப் பணிந்து



"கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் வந்து உதித்தனன் உலகமுய்ய" என்கிறது கந்தபுராணம். இந்தவகையில் தோற்றம் பெற்ற முருகப் பெருமானை இந்து மக்கள் பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் தெய்வமாகப் போற்றி ஏற்றி வழிபாடு செய்து வருகிறார்கள். வேல் ஏந்தி வினை தீர்க்கும் வல்லமையுள்ள முருகப் பெருமான் இலங்கையில் வடபால் அமைந்த ஆன்மீகப் பணி புரியும் தொண்டர்களைத் தன்னகத்தே கொண்ட கோட்டைக்காடு, மல்லாகம் என்னும் சாளம்பைப் பதியிலே முருகன் ஆலயத்தின் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் - முருகன் அருளால் இனிது நிறைவேறத் திருவருள் பாலித்துள்ளமை மட்டற்ற மகிழ்வையும் புத்துணர்வையும் தருவதாக அமைந்துள்ளது.


இவ்வாலயம் 89 ஆண்டுகள் வரலாற்றுப் பெருமை பெற்ற ஆலயமாக எமது கிராமத்தில் அழகிய பெருமை மிக்க எழில் கொழிக்கும் ஆலயமாக மிளிர்கிறது. அவ்வப்போது எமது கிராமத்தில் தோன்றி மறைந்த கல்விமான்கள் - சைவப் பெரியோர்கள், சான்றோர்கள் ஆன்மீக சித்தர்கள் தொழில் வல்லுநர்களின் விடாமுயற்சியாலும் கடின உழைப்பினாலும் தன்னலமற்ற பெரும் சேவையாலும் பெருமை நிறைந்த இவ்வாலயம் இன்று இந் நிலைக்கு வளர்ந்து உயர்ந்துள்ளது. அந்தவகையில் எமது மூதாதையர்க்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம். அந்தவகையில் இன்று சிறப்புடன் மிளிரும் இவ்வாலயத்தில் கொடித்தம்பம், எழில்மிகு வசந்த மண்டபம், நவக்கிரக மண்டபம், பரிவாரமூர்த்திகளாக ஆறுமுகசாமி, பிள்ளையார், நவக்கிரகம், லக்சுமி, சிவன் - அம்மன், நடேசர், சண்டேஸ்வரர், வைரவர், காளி, நாகதம்பிரான், தேர்கள், தீர்த்தக்கேணி, இராஜகோபுரம் எல்லாமே சிறப்பாக அமையப் பெற்று எழில் ஓங்கி மேன்மையுற அமைந்துள்ளது.

இன்று நடைபெறும் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக அமைய எல்லாம் வல்ல சாளம்பை முருகப் பெருமானின் பாதார விந்தங்களில் பணிந்து பெருமானின் அருள் அனைத்து அடியார்களுக்கும் கிட்ட வேண்டுமென இந் நாளில் வாழ்த்தி வணங்குகின்றோம்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

**திரு. நா. கணேசமூர்த்தி,**
செயலாளர், சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்,
இளைப்பாறிய உத்தியோகத்தர் (சீமெந்து கூட்டுத் தாபனம்),
உரிமையாளர், சண்முகா மெடிக்கல், சுன்னாகம்.


சங்கிராந்தித் தீர்த்த நிகழ்வு


சங்கிராந்தித் தீர்த்த நிகழ்வு


சங்கிராந்தித் தீர்த்த நிகழ்வு


பஜனைக் குழு





# பொருளாளரின் உள்ளத்தில் இருந்து...

பண்பாடும் கலை கலாசார விழுமியங்களும் நிறையப் பெற்ற எம் மண்ணில் அருட்கடாட்சம் நிறைந்த ஆலயங்கள் பல அமைந்திருக்கின்றன.

அந்தவகையில் சைவசமயப் பாரம்பரியம் மிக்க மல்லாகம் சாளம்பைப் பதியினிலே, கதிர்காமத்தில் இருந்து வந்து கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் வேல் முருகப் பெருமானுக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலித்து ஊர் மக்கள் எல்லோரும் வாரி வழங்கிய நிதியைக் கொண்டு மிகக் குறுகிய காலத்தில் இப் பெரும் திருப்பணி நிறைவுபெற்றது அவன் செயல் என்பது உண்மை.

இப் பணியில் சாளம்பை முருகனின் அடியவனாக என்னை ஆற்றுப்படுத்தி இத் திருப்பணியிலே முன் நின்று பணி செய்ய வைத்த முருகப் பெருமானின் திருவடிகளை நெஞ்சிருத்தி வணங்குகிறேன்.

வட்டுக்கோட்டை சிற்பாலய கலைஞர் பிரதம சிற்பாச்சாரியார் திரு. தவவீரசிங்கம் தலைமையிலான கலைஞர்களின் எழில்மிகு கைவண்ணத்தில் அமையப்பெற்ற பஞ்ச தள இராஜகோபுர கும்பாபிஷேக விழா சிறப்பாக அமைய வேண்டும் என்பதுடன், நாட்டில் அமைதியும், சுபீட்சமும், மக்கள் எல்லோருக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க எல்லாம் வல்ல சாளம்பை முருகன் அருளை வேண்டிப் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.



**திரு. சுந்தரமூர்த்தி இராசநாயகம்**
பொருளாளர், சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்.



# வாழ்த்துச் செய்தி

மல்லாகம், கோட்டைக்காடு அருள்மிகு சாளம்பை முருக மூர்த்தி ஆலயத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற பஞ்ச தள இராஜகோபுர, கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறத் திருவருள் கைகூடியமை பெருமகிழ்ச்சியளிக்கின்றது. ஆரம்ப காலத்தில் சிறு ஆலயமாகத் தோற்றம் பெற்ற வேற்பெருமானின் இவ்வாலயம் இன்று ஆகம விதிக்கமைய சகல அமைப்புக்களுடனும் சிறப்புற விளங்குவதையிட்டு முருகனடியார்கள் அனைவரும் பேரானந்தமடைகின்றனர்.

யாழ்குடாநாட்டிலுள்ள பிரசித்திபெற்ற முருகஸ்தலங்களுள் ஒன்றாக எம்பெருமானுடைய ஆலயம் விளங்குவது பெருமைக்குரிய விடயமாகும். கதிர்காமக் கந்தப் பெருமானின் ஆலயத்துக்கும் இவ்வாலயத்துக்குமிடையில் வரலாற்றுத் தொடர்பு இருப்பதை நாம் ஆலயவரலாற்றுச் செய்தி மூலம் அறிகின்றோம். இவ்வாலய ஸ்தாபகராகிய வணக்கத்துக்குரிய அழகர்சுவாமிகள் கதிர்காம யாத்திரையின் போது கதிர்காமத்தில் முருகப்பெருமானால் அருளப்பெற்ற வேலாயுதப் பெருமானை இங்குகொண்டு வந்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததாகவும் ஆலய வரலாறு எடுத்தியம்புகின்றது.

ஆரம்பகாலத்தில் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த எம்பெருமான் ஆலயத்தில் மிகக்குறுகிய காலத்தில் (கிட்டத்தட்ட இருபது வருடகாலத்திற்குள்) கொடித்தம்பம், ரதம், தீர்த்தக்கேணி என்பன அமைக்கப்பெற்று மஹோற்சவம் நடைபெறுவது எம் குருநாதன் கந்தவேற் பெருமானின் கருணைத் திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனைத் தொடர்ந்து பஞ்ச தள இராஜகோபுரம் அமைக்கப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பது மேன்மேலும் முருகப் பெருமானின் அளவிறந்த பெருங்கருணையை வெளிப்படுத்துகின்றது. முருகப் பெருமானின் திவ்விய கருணையை நினைந்து நினைந்து உள்ளம் ஆனந்த சாகரத்தில் திளைக்கின்றது.

ஆலயவழிபாட்டுக்கு வருபவர்கள் முதலில் கைகால் கழுவித் தூலலிங்கமாகிய கோபுரத்தைக் கைகூப்பி வணங்கி உள்ளே செல்லவேண்டுமென்பது விதியாகும். வெகுதூரத்தில் உள்ளவர்களுக்கு ஆலயத்தின் இருப்பிடத்துக்கு வழிகாட்டியாகவும், காணும் தோறும் இறையுணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது. கோபுரத்தைத் தரிசிப்பதே இறைவனை வணங்கும் பலனைத் தரும் என்பது நம்பிக்கை. இராஜகோபுர வாயிலின்மேல், வாயில் போன்று மாடங்கள் ஒற்றைப் படையில் அமைந்திருக்கும். இவை தத்துவங்களை விளக்குபவை. பல கணக்கற்ற சிற்பங்கள் கோபுரத்தில் இடம்பெற்றிருக்கின்றன. தேவர்கள், மனிதர்கள், பிராணிகள் எல்லா உருவங்களும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். பிரபஞ்ச அமைப்பில் இவை யாவைக்கும் இடமுண்டு என்பதைக் கோபுரச் சிற்பங்கள் விளக்குகின்றன. கீழே அகன்றிருக்கும் கோபுரம் மேலே ஒடுங்கிச்



சென்று கலசத்தில் நிறைவுறும் மன ஒருமைப்பாடும், பரம்பொருள் ஒன்றையே பற்றி நிற்கும் மனத்திண்மையும், மேலான எண்ணங்களில் ஆழ்ந்து நிற்றலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதைக் கோபுரம் விளக்குகின்றது. கோபுரமுள்ள கோவிலுக்கு மகத்துவம் அதிகமென ஆகம நூல்கள் பகர்கின்றன.

இவ் இராஜகோபுரத் திருப்பணி சிறப்பாக நிறைவேற நிதியுதவி, சரீர உதவி வழங்கிய செம்மனச்செல்வர்கள், இப்பணியை முன்னின்று செயற்படுத்திய ஆலயப் பரிபாலனசபையினர், தொண்டர்சபையினர், கலையழகுமிளிரும் கோபுரமாக வடித்துத்தந்த சிற்பாசாரியார்கள் அனைவருக்கும் எல்லாம்வல்ல எம் குருநாதன் அருள்மிகு சாளம்பைக் கந்தவேற் பெருமானின் திருவருள் கிட்டப் பிரார்த்திப்பதுடன், இக்கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், கும்பாபிஷேக மலர் பக்தி மணம் கமழவும் எமது நல்வாழ்த்துக்களையும் இதயபூர்வமாக வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றோம்.

*'ஸ்கந்தஷ்ய கீர்த்திம் அதுலாம்*

*கலி கல்மஷ நாஷினீம்'*

**சிவானந்த வாரிதி**
**சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்**
(மயிலணி, காங்கேசன்துறை.)



# வாழ்த்துச் செய்தி



சரித்திரப்புகழ்மிக்க சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் ஏறக்குறைய நூறு ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. கடந்த கால் நூற்றாண்டு காலப் பகுதியில் இவ்வாலயமானது துரித வளர்ச்சி கண்டு வருவது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. இக்கால இடைவெளியில்தான் ஆலய உள்வீதி மண்டபங்கள் அன்னதான மண்டபம், தேர்த்திருப்பணி வேலைகள், தீர்த்தக் கேணி என்பன சிறப்புற அமையப் பெற்றன.

ஆனால் மிகவும் பாரிய திருப்பணியாகிய இராஜகோபுர வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் நிறைவு பெற்றிருப்பதை எண்ணும் கால் எனது உள்ளம் உவகையால் பூரித்து நிற்கிறது.

இத்திருப்பணி வேலைகள் யாவும் சிறப்புற நிறைவெய்தத் திருமதி லோகநாயகி இரகுபதி அம்மையார் அவர்களின் வழிகாட்டலின்கீழ் அயராது உழைத்த நிர்வாகசபை, திருப்பணிச்சபை, தொண்டர் சபை உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்குமுரியவர்கள் என்பதில் ஐயமில்லை. இவர்கள் எல்லோரினதும் தளராத செயற்பாட்டின் பயனாகவே நெடிதுயர்ந்த இந்த இராஜ கோபுரம் கண் கொள்ளாக் காட்சியாக அமையப்பெற்றுள்ளது.

இவ்வேளையில் எமது சமூகமக்களின் ஆன்மீக ஈடேற்றம் கருதி தூரநோக்கோடு, இவ்வாலயம் அமையக் காரண கர்த்தாவாக விளங்கிய ஆலய ஸ்தாபகர் வணக்கத்திற்குரிய அழகர் சுவாமி அவர்களை நினைவுகூர வேண்டியது எமது கடமையாகும்.

முன்னால் தலைவர் என்ற வகையில் இன்று நடைபெறவிருக்கும் இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற இடம்பெற எல்லாம்வல்ல சாளம்பை முருகன் திருவருள் வேண்டி வாழ்த்தி வணங்குகிறேன்.

**இ. ஆனந்தன்** (J.P.)
ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
முன்னாள் தலைவர்,
ஆலோசகர், சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபை.



இராஜ கோபுர வடக்கு பக்க தோற்றம்



ஆதிமூல வடக்குப்பக்க கோபுர தோற்றம்



ஆறுமுக சுவாமி வடக்குப்பக்க கோபுர வெளித்தோற்றம்



சிவன், பார்வதி வடக்கு பக்க கோபுர வெளித்தோற்றம்



வெளிவைரவர் தோற்றம்



தெற்குபக்க ஆதிமூல கோபுர தோற்றம்



ஆலய வடக்கு வீதி தோற்றம்



ஆலய நீர்த்தாங்கி தோற்றம்



# வாழ்த்துச் செய்தி

1920களில் மல்லாகம் கந்தசாமி கோயில் என்ற நாமத்துடன் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. வைத்திய கலாநிதி ஐ. பேரம்பலம் அவர்களினதும் தொடர்ந்து சட்டத்தரணி இரா. நம. சிவப்பிரகாசம் அவர்களினதும், ஆலோசனைகளிலும் தலைமையிலும் நிர்வாகம் வழி நடாத்தப்பட்டு வந்தது. திரு. இ. அழகர் சாமியார் அவர்கள் பூசகராகப் பணியாற்ற, திருவாளர்கள் குரு. மூத்தவி, குரு. இளையவி ஆகியோரிடம் நிர்வாகப்பொறுப்பு கொடுக்கப்பட்டது.

சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் என்ற திருநாமத்துடன் நிர்வாகசபை அமைக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்தது. அப்பொழுது தொடக்கம் இவ்வூர் மக்களின் இறை பக்தியாலும் செயற்பாடுகளினாலும் ஆலயத்திருப்பணிகள் அதிக முன்னேற்றம் கண்டது. இப்பொழுது சுற்றுப்பிரகார மண்டபங்கள் மணிக்கூட்டுக் கோபுரம், தேர்முட்டி, தீர்த்தக்கேணி மற்றும் இராஜ கோபுரம் போன்ற திருப்பணிகள் நிறைவேறியுள்ளன.

இவ்வாலயத்தின் செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வருவதைக் கண்டு, நான் பெருமகிழ்ச்சி அடைகின்றபோது, மேலும் சாளம்பை முருகனின் திருவருள் எம்மக்களுக்குத் தொடர்ந்து கிடைத்து, அனைவரும் கல்வியுடன் கூடிய இறை நம்பிக்கையும் சைவசமய கலாசாரத்துடன் கூடிய பண்புடை நற்பிரசைகளாகவும் வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

*வாழி! வாழி! வாழி!*

**இ. கதிரமலைநாதன்**
ஓய்வுபெற்ற அரச எழுதுவினைஞர், கச்சேரி.
ஆலய பரிபாலனசபை முன்னாள் தலைவர்.

# அடியேன் இதயத்தில் உதித்த...
# வாழ்த்துச் செய்தி



இன்று மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டு அங்குரார்ப் பணம் செய்யப்பட்ட சாளம்பை திருமுருகன் ஆலயத்தின் இராஜ கோபுர கும்பாபிஷேகத்தை அடுத்து வெளியிடப்படும் "கும்பாபிஷேக மலரிலே" வாழ்த்துரை வழங்கும் பொறுப்பை அடியேனுக்கு அளித்த மல்லாகம் சாளம்பை முருகன் ஆலயத்தின் பரிபாலன சபையினருக்கு என் மனமார்ந்த நன்றியை அர்ப்பணிக்கின்றேன்.

"தந்தைக்கு உபதேசம் ஈர்ந்த தனையனும்......", "ஒளவைக்குப் பழம் அளித்தவனுமாகிய " அழகப் பெருமான் திருமுருகன் அடிபணிந்து என் கடமையை ஆரம்பிக்கின்றேன். மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஆலய வழிபாடு அத்தியாவசியமான தாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு மல்லாகம், அழவாவோடை, கோட்டைக்காடு, மயிலங்காடு, சூராவத்தை ஆகிய கிராமங்களில் வாழும் எங்கள் சமுதாயத்தின் ஆன்மீக வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டதுதான் "சாளம்பை முருகமூர்த்தி" ஆலயமாகும்.

இந்த ஆலயத்துடன் மிக நெருங்கிய சம்பந்தமுடைய என் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால் தெரிகின்றது ஒரு சிறு ஆலயம். அன்று சிறிதாக அமைக்கப்பட்ட ஆலயம் இன்று மிகப்பெரும் வளர்ச்சியடைந்து ஒரு பரிபூரண ஆலயமாக விளங்குவதைப் பார்த்து என் உள்ளம் பெரும் மகிழ்ச்சியடைகின்றது. இந்த வளர்ச்சிக்கு எங்கள் சமுதாயத்தின் ஊக்க உணர்ச்சியே காரணமாகும். இன்று மல்லாகம், யாழ்குடாகத்தில் மட்டுமல்ல முழு இலங்கைத் தீவிலுமே சிறந்த பெரு ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது எங்கள் சமுதாயத்திற்குப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. மேலும், இவ்வாலயம் அபிமானத்துடன் பெரும்வளர்ச்சி அடைவதற்கு என் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

'சாளம்பை முருகன் ஆலயம் மேலும் மேலோங்கி வளர்க'

'எங்கள் சமுதாயம் சிறப்புடன் வாழ்க'

**முருகதாசன் பொன். கந்தசாமி**
போஷகர்,
கொள்ளுப்பிட்டி,
கொழும்பு.



ஆலய முருகன் தேர்



ஆட்டுக்கடா வாகனம்



அன்னப்பட்சி வாகனம்



காராம்பசு வாகனம்



கைலாய வாகனம்





# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தில் சைவமும், தமிழும் தழைத்து விளங்கும் கிராமங்களில் மல்லாகமும் ஒன்று. ஆலயங்களாலும், அறநெறிச் சான்றோர்களாலும் முத்தமிழும் புத்துயிர் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மல்லாகம் பதியில் அருளொளி பரப்பி அவ்வூர் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு சாளம்பை முருகமூர்த்தி உறுதுணை புரிந்து கொண்டிருக்கிறார்.

"ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"

என்ற கந்தபுராணச் செய்யுளை மனதில் நிறுத்தும் வகையில் சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் அடியார்களுக்கு ஈடிணையற்ற அருளை அள்ளிவழங்கிக் கொண்டிருக்கிறது. முருக ஸ்தலங்கள் ஏராளமாக இருப்பினும் சில ஸ்தலங்களே புகழ் பெற்ற ஸ்தலங்களாக அமைந்திருக்கின்றன. அந்தவகையில் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் வீற்றிருக்கும் அழகும் இளமையும் நிரம்பிய முருகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைத்து அவனருளாலே அவனருள் பெற திருவருள் கைகூடியுள்ளது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்றவகையில் அடியார்களினதும், ஆலய நிர்வாக சபையினதும் அயராத முயற்சியினாலும் முருகப் பெருமானின் திருவருளாலும் இராஜகோபுர கும்பாபிஷேகப் புனிதப் பணி கைகூடியுள்ளது.

இக் கும்பாபிஷேகம் திருவருட்பேறுபெற்ற இவ்வாலயமும், மல்லாகம்பதியும் பொலிவுபெற்று விளங்குவது போன்று அடியார்களது சிந்தனையும் செம்மையுற்று தூய தெய்வீக சிந்தனைகளால் பொலிவுபெற்று வாழ்வு சிறக்க எல்லாம்வல்ல எம்பெருமான் முருகப்பெருமானது திருவருள் கிடைக்க வேண்டுமென வணங்கி இராஜகோபுர கும்பாபிஷேக மலர் சிறப்புற வாழ்த்துவதிலும் மகிழ்ச்சி அடைகின்றேன். வாழ்க வளமுடன்.!

**திருமதி தர்ப்பணா சுதர்சன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாசாரம்),
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
பிரதேச செயலகம், உடுவில்.

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



மல்லாகம், கோட்டைக்காடு பதியில் அவ்வூர் மக்களுக்கு வேண்டுவன ஈந்து வரமருளும் ஸ்ரீ அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் புதிய இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு அதன் மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. கோட்டைக்காடு பதியில் சிறப்புமிக்க ஆகம விதிமுறைகளுக்கு அமைய அமைந்த ஓர் ஆலயமாக இந்த ஆலயம் திகழ்கின்றது. இந்த ஆலயத்துக்குப் புதிய இராஜகோபுரம் அமைக்கப்பட்டமை மிக்க மகிழ்வை ஏற்படுத்துகின்றது. கோபுரம் - தூலலிங்கம் என்று அழைக்கப்படுகின்றது. ஆலயத்துக்கு வருகின்ற பக்தர்கள் ஆலய வழிபாட்டுக்கு முன்னர் வழிபாடியற்றுவது தூலலிங்கமாகிய கோபுரத்தையே. ஆலய கோபுரத்துக்கு முன்னால் இரு கைகளையும் உயர சிரம்மேல் குவித்து பூரண சரணாகதியாக இத்தூலலிங்கமாகிய கோபுரத்தை வழிபாடியற்றுவர்.

"உள்ளம் பெருங்கோவில் ஊன் உடம்பாலயம்" என்கிறார் திருமூலர். ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்துறங்குகின்ற அமைப்பிலேயே ஆலயம் அமைந்துள்ளது. அவனது இரு பாதங்களும் கோபுரத்தைக் குறிக்கின்றன. இந்தக் கோபுரத்தின் வாயில்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றுடன் கனவு, நனவு என்பனவும் கொண்டமைந்தால் **7** வாயில்களாகவும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்கள் கொண்டமைந்தால் **5** வாயில்களாகவும், கனவு, நனவு, சுழித்தி ஆகியன கொண்ட மைந்ததால் ***3*** வாயில்களாகவும் கொள்ளப்படுகின்றன.

ஆலயங்களில் 6 மண்டபங்கள் அமைந்துள்ளன. அவை எமது உடலிலுள்ள 6 ஆதாரங்களாகவும், 5 வீதிகளும் எமது உடம்பிலுள்ள அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், ஆனந்தமயகோசம், அறிவானந்தமயகோசம் என்ற 5 கோசங்களாகவும் கொள்ளப்படுகின்றன. இதனாற்றான் திருமூலர் "உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பாலயம்" என்றுள்ளார். இவ்வூர் அடியவர்கள் குறிப்பாக இளைஞர்கள் தெய்வீகப்பணியிலும் பொதுப்பணியிலும் காட்டிவருகின்ற ஆர்வம் போற்றுதற்குரியது. இந்த ஆலயம் மேலும் சிறப்புற்று இப்பிரதேச மக்களின் வாழ்வு சிறக்க அருள்பாலிக்கவேண்டும் என்று சாளம்பைக் கந்தனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**தி. பிரகாஷ்**
தவிசாளர், வலி. தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.




சூரன்



நாகதம்பிரான் வாகனம்



திரு ஊஞ்சல்



சண்டேஸ்வரர் தேர்




# உடுவில் பிரதேச செயலரின்
# வாழ்த்துச் செய்தி

ஆலயம் இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் இடமாகும். ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்திருக்கும் ஆலயங்கள் அப்பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்விற்கும், சமூகம் கலைகளின் வளர்ச்சிக்கும் தளமாக அமைந்துள்ளன. இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும் அவன் அருள் சிறப்பாகக் கிடைக்கும் இடம் ஆலயமே. இதனாலேயே "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றனர் எம் முன்னோர்கள்.

பல வளங்களும் பூர்வீகச்சிறப்புக்களும் கொண்ட மல்லாகம் கோட்டைக்காடு என்னுமிடத்தில் அடியவர்களின் முயற்சியால் சாளம்பை முருகமூர்த்திக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் செய்யத் திருவருள் கைகூடியுள்ளது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற வகையில் இவ் இராஜகோபுரத்தின் மூலம் இப்பிரதேச மக்களுக்கு முருகனருள் கிடைக்க வேண்டும் என்பது இறைவன் திட சித்தம்.

ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருக்கின்றது என்றால் மிகையாகாது. அந்தவகையில் இராஜகோபுர கும்பாபிஷேக மலர் வெளிவருவதற்குரிய பணிகள் பாராட்டுதற்குரியவை. சாளம்பை முருக மூர்த்தியைத் தரிசிக்கும் அனைவரும் அவனருளால் அனைத்து செல்வங்களையும் பெற்றுப் பெருவாழ்வு எய்த வேண்டும் எனவும் உலகில் சாந்தி சமாதானம் நிலவி யாவரும் இன்புற்று வாழ அவனருளாலே அவன் தாள் வணங்கி" வாழ்த்துகிறேன்.

**முத்துலிங்கம் நந்தகோபாலன்**
பிரதேச செயலர்,
உடுவில்.



# வாழ்த்துச் செய்தி



மல்லாகம் கோட்டைக்காடு எனும் பதியிலே வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை அள்ளி வழங்கும் சாளம்பை முருகமூர்த்திப் பெருமான் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய பெருமைகளைக் கொண்டு சிறப்பாக விளங்குகிறது. இந்த ஆலயத்தின் உருவாக்கமும் வளர்ச்சியும் மிகவும் வியப்புக்குரியது. கதிர்காமத்தில் அழகர்சாமி அவர்கள் முருகப்பெருமானிடம் பெற்று வந்த புனித வேலினை வைத்து ஒரு சிறிய ஓலைக் கொட்டிலில் ஆரம்பமான இவ்வாலயம் இன்று தேர், தீர்த்தக்கேணி, கோபுரம் என்று சகல சிறப்பும் பொருந்திய ஆலயமாகத் திகழ்கிறது. இதற்கு அழகர் சாமியின் அயராத முயற்சியும், ஊர்மக்களின் உதவி ஒத்தாசையும், ஆலயத்தை நிர்வாகம் செய்தோரின் உன்னத உழைப்புமே காரணமாகும்.

இவ்வாலயத்திற்கும் எனக்கும் இடையிலான தொடர்பு மிக நீண்டகால தொடர்பு. எனது தந்தையாகிய இ. சண்முகநாதன் அவர்கள் இவ்வாலயத்தின் தலைவராக சில ஆண்டுகள் பொறுப்பேற்று ஆலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார். அவரின் வழித்தோன்றலில் வந்த இரத்தினவடிவேல் ஆகிய நான் உபதலைவர், பொருளாளர், செயலாளர் மற்றும் தலைவர் பதவிகளை கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் பொறுப்பேற்று ஆலயத்தின் வளர்ச்சிக்கு என்னால் முடிந்தளவு பங்காற்றினேன்.



ஆலய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததும், மிகச்சிறப்பாகவும், விமர்சையாகவும் நடைபெற்று முடிந்ததுமான மூன்று மஹாகும்பாபிஷேகங்களில் முதலாவது மஹாகும்பாபிஷேகம் நான் பொருளாளராக பதவிவகித்த 1984ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்றது. அடுத்த மஹாகும்பாபிஷேகம் நான்செயலாளராக பதவி வகித்த 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்றது. மூன்றாவது மஹாகும்பா பிஷேகம் நான் தலைவராக பதவிவகித்த 2010ஆம்ஆண்டு காலப்பகுதியில் நடை பெற்றது. அத்துடன் நான் செயலாளராக



இருந்த தருணத்தில் தேர்த்திருப்பணியும் நான் தலைவராக இருந்த தருணத்தில் தீர்த்தக் கேணித் திருப்பணியும் நடைபெற்று சிறந்த முறையில் ஒப்பேறியது.

இவ்வாலயத்திற்கான இராஜகோபுரம் மற்றுமொரு பிரதான தேவையாக உணரப்பட்ட தருணத்தில் அமரர் இராசையாமனோகரன் அவர்கள் முதன் முதலில் இராஜகோபுரத் திருப்பணிக்கெனத் தனது நிதிப் பங்களிப்பாக பத்து லட்சம் ரூபாவினை வழங்குவதாக வாக்குறுதி தந்து மூன்றரை இலட்சம் ரூபாவினை ஆரம்பநிதியாக நான் தலைவராக இருந்தபோது வழங்கினார். அதனைத் தொடர்ந்து எம் ஊர் மக்களின் பாரிய நிதி ஒத்துழைப்புடன் எனது காலப்பகுதியைத் தொடர்ந்து வந்த பின்னைய எமது ஆலய பரிபாலன சபையினரால் இராஜகோபுர பஞ்சதளங்களோடும் கண்கவர் வர்ணங்களுடனும் ஆகம முறைப்படி பிரமாண்டமாகவும் அழகாகவும் கட்டி முடிக்கப்பட்டு எம் ஊர் மக்களின் வழிபாட்டுக்கு சிறப்புறக் காட்சியளிக்கிறது.

இவ் இராஜகோபுர கும்பாபிஷேக விழாவையொட்டி மலரவிருக்கும் சிறப்பு மலர் சிறப்புற அமைய வேண்டும் என்று வாழ்த்துவதுடன் ஆகம விதிகளின்படி ஆலயங்கள் அமைப்பதும் அவற்றைப் பேணிப் பாதுகாத்து எம் வருங்கால சந்ததியினருக்குப் பயனுறச் செய்தலுமே புண்ணியகாரியமாகும் எனக் கூறிக்கொள்வதோடு, என்னையும் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி இவ்வாலயத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்ற வைத்த முருகனின் கருணையை வியந்து நாமெல்லோரும் பக்தி மார்க்கத்தில் நிலைபெற்று சகல பேறுகளையும் பெற வேண்டுமென முருகப்பெருமானைப் பிரார்த்தித்துக்கொண்டு எனக்கு வாழ்த்துரை வழங்க வாய்ப்பு வழங்கிய ஆலய பரிபாலனசபையினருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு இவ்வாழ்த்துரையை முடிக்கின்றேன்.

**ச.இரத்தினவடிவேல்,**
அகில இலங்கை சமாதான நீதவான்,
மத்தியஸ்தர்சபை, வலி தெற்கு.



உ
குகமயம்



# இப்பிறவி போதாது

மரகதக் கங்கைப்பெற்று, அழகர் கைமேல் வளர்ந்து
பரவ சமாக வந்து சாளம்பை முருகனானாய்
பக்தர்கள் உன்னைச் சூழ்ந்து, பக்தியால் பரவி நின்று
திருப்பணி பலவும் செய்து, சிறியதோர் கோயில் செய்தார்.

பொன் கந்தரோ உன்மேற் கொண்ட பக்தியால் பெருகி நின்று
நல்லதோர் கோயில் செய்து, நலம்பல பெருகச் செய்தார்
அடியவர் பலரும் சேர்ந்து கந்தன் பவனிவரவே
சித்திரத் தேரும் செய்து, கந்தனைத் தேரில் வைத்தார்.

மரகதக் கங்கை தந்து , அழகர் கை வந்த வேலன்
மாதிருபாகனாகப், பூம்புனல் பொய்கையாட
ஆனந்தர் தொடக்கிவைக்க, அடியவர் பலரும் கூடி
ஆனந்தத் தீர்த்தமாட, கேணியும் செய்து தந்தார்.

வஞ்சகம் சூதும்வாதும், வாய்மையை மறைத்த போதும்
சூழ்ச்சியே வாழ்க்கையான, போர்ச்சுமை வந்தபோதும்
மீட்சியே இன்றி வாழ்வு, வறுமையில் உழன்ற போதும்
ஓடியே வந்தாய் கந்தா, எங்கள் ஓலங்கள் கேட்பதற்கே.

அழகிய கோயில் தந்து, அரியதோர் தேரும் தந்து
பூம்புனல் பொய்கை தந்து, புதுப்புனல் ஆட வைத்த
அடியவர் பலரும் கூடி, சாளம்பை முருகனுக்கோர்
கோபுரக்கோயில் காணக், கொண்டனர் சபதமொன்று.

மனோகர வள்ளல் தந்த பணமுடி முதலாய்க்கொண்டு
அடியவர் பலரும் தங்கள் பங்கினை அள்ளித்தந்து
பக்தர்கள் உழைப்பும் சேர்த்து ஆறிரு திங்களுக்குள்
ஆக்கினர் கோபுரத்தை, எங்கள் சாளம்பை முருகனுக்கே.

கனிமொழி மாதர் கொய்த, பனிமலர் கூட்டம் கொண்டு
பக்தியின் நார் தொடுத்துப், பவளமாய்க் கோர்த்தெடுத்த
மாலைகள் அணிந்த மார்பா, சாளம்பைக் கந்தவேலா
கோபுரக் கோயில் கொண்ட, கொற்றவா வாழ்க வாழ்க.

இன்முகத் துணையும் தந்து, இதந்தரு மனையும் தந்து
இனிய நல் மக்கள் தந்து, அன்பு சேர் சுற்றம் தந்து
அறிவுசார் நண்பரோடு, ஆயபல அறிவும் தந்த
சாளம்பை வேலவனே, உனை வாழ்த்த இப்பிறவி போதாது.

**ஆறுமுகம் இரகுபதி**
**(சட்டத்தரணி)**





# வாழ்த்து

ஆலயம் ஆத்மாவை ஆற்றுப்படுத்தும் புண்ணிய தலம். தினமும் ஆலயத்தை வலம் வருபவரிடம் ஆன்ம பலமும், ஆரோக்கியமும் நிறைவாகக் காணப்படும். எம் மூதாதையர் எமக்கு தேடி வைத்த பெருஞ் செல்வம் சாளம்பை முருகன் என்றால் மிகையாகாது.

குறிஞ்சி நிலக் குமரனை சாளம்பைப் பதியில் ஸ்தாபித்ததாக பழையவரலாறு கூறுகிறது. முருக அடியார்கள் தினம் தினம் முருகப்பெரு மானைத் தரிசித்து தங்கள் தங்கள் செயற்பாடுகளை ஆரம்பிப்பது நெஞ்சை உருக வைக்கும் நிகழ்வாகும். சாளம்பைப் பதி இன்று சகல வளங்களும் நிறைந்த ஓர் வளமான - எழில்மிகு தலமாகவும் - முருகப் பெருமான் அருள்பாலிக்கும் புண்ணிய தலமாகவும் சாளம்பைக் கிராமம் மிளிர்கிறது.

முருகப் பெருமானின் தெய்வீக அருள் பெற்ற இவ்வூர் மக்கள் நன்றிக் கடனாக இப் பெருமானை ஏற்றியும் போற்றியும் நயமாக வணங்கி வருகிறார்கள்.

இவ் அழகாபுரியில் சிறப்பாக அமைக்கப் பெற்ற வசந்த மண்டபம் என்ன நீண்டு உயர்ந்த அழகிய இராஜகோபுரம் என்ன, முருகன் நீராடுவதற்கு அழகிய தீர்த்தத் தடாகம் என்ன, சிற்ப வேலைகள் அமையப்பெற்ற சிற்பத் தேர்கள் என்ன எல்லாமே முருகன் அருளிய கொடையே. முருக அடியார்கள் மனம் உவர்ந்து அள்ளி அள்ளித் தானமாக வழங்கும் அருட்கொடைகளால் இவ் ஆலயம் சிறப்புமிகு எழில் கொஞ்சும் ஆலயமாக காட்சியளிக்கிறது. இன்று இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான அடியார்கள் இவ் விழாவைக் கண்டு களிக்க காத்து நிற்கிறார்கள்.

**நா. தம்பிராசா**
முன்னாள் தொண்டர்சபைத் தலைவர்.





மயில் வாகனம்



நந்தி பலிபீடம்



ஆலய கொடிஸ்தம்பம்



# வாழ்த்துச் செய்தி

இன்றைய நாள் எமது ஆலய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மிகச் சிறப்பு வாய்ந்த தினம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இப்பாரிய திருப்பணி வேலைகள் யாவும் எமது ஆலய பரிபாலன சபைத் தலைவர் திருமதி லோகநாயகி இரகுபதி அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு, நிறைவு பெற்று இன்று கும்பாபிஷேக விழா இடம்பெற இருப்பதோடு அடியேனின் பங்களிப்பும் இதில் உண்டு என்பதை எண்ணும் போது எனது உள்ளம் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

எனது மாமனார்கள் அமரர்கள் ஆறுமுகம் இராசு, ஆறுமுகம் சுவாமிநாதன் ஆகிய இருவரும் எமது ஆலயத்தோடு நீண்ட நெடுங்காலத் தொடர்புடையவர்கள் என்பதோடு ஆலய வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் வழிநின்று அடியேனும் இவ்வாலயத்தில் நடைபெற்ற ஆலயத் திருப்பணி வேலைகளுக்கும் ஒரு தொண்டனாக எனது உடலுழைப்பைத் தயக்கமின்றி வழங்கக் கிடைத்தமை சாளம்பை உறை முருகனின் திருவருள் அன்றி வேறு ஏதுமில்லை.

தொண்டர் சபைத் தலைவர் என்ற வகையில் இவ்விழா இனிதே நிறைவெய்த எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வே. ஜெயக்கொடி**
தொண்டர்சபைத் தலைவர்,
சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்,
கோட்டைக்காடு, மல்லாகம்.



# வாழ்த்துச் செய்தி

முருகப்பெருமான் வதியும் இடங்கள் பலவானாலும் மல்லாகம் சாளம்பைப் பதியும் ஒன்றாகும். இப் பதியானது மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் போன்ற பெருமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு மூர்த்தியாக விளங்கும் 'வேல்' அடியார்களின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துள்ளது. சாளம்பை வேலவன், வேல்விருத் தன், கந்தன், கடம்பன், விசாகன் வள்ளிமணவாளன், குகன் சுவாமிநாதன், சூர சம்ஹாரன் என்று வர்ணிக்கப்படும் முருகப் பெருமான், வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகப் பெருமானாக எழுந்தருளி தன்னை அன்பினால் வழிபடும் அடியார்கள் மனதில் குடிகொண்டு அவர்கள் வேண்டும் வரங்களை அள்ளி அளித்துக்கொண்டிருக்கின்றார். இத்தகைய அடியார்களின் உள்ளத்தில் எழுந்த அன்பின் வடிவம்தான் இன்று சாளம்பையான் வாசலில் ஆகம முறைப்படியும் சிற்ப சாத்திர முறைப்படியும் கட்டப்பட்டு எழுந்து நிற்கும் இராஜ கோபுரமாகும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பாலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கல்லப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்றார் திருமூலர். அவரின் வாக்கின் மூலம் ஆலய அமைப்பு ஆகம விதிப்படிக்கு மனித வடிவ அமைப்பைச் சார்ந்தே காணப்படுகின்றது. மனித உடலின் பாதம் கோபுரமாகும். ஆலய நுழைவாயிலுள்ள பிரதான கோபுரமும், கர்ப்பக்கிரகமும் ஒரே நேர்கோட்டில் இருக்கும் அதே வரிசையில் நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியன அமைந்திருக்கும். இதனால் கோபுரத்தைத் தரிசிப்பது இறைவனை வணங்கும் பலனைத் தரும்

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்றும்
'கோபுர தரிசனம் கடவுளின் பாத தரிசனம்'
என்றும் அழைப்பார்கள் ஆன்றோர்கள்.



இதனால்தான் கி. பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்து ஆலய வாசல்களில் இராஜகோபுரங்கள் அமைத்து வருகின்றார்கள் இந்த வரிசையில் மல்லாகம் சாளம்பை முருகன் வாசலில் அமைக்கப்பட்ட இராஜகோபுரமும் அமைந்து விடுகின்றது.

சிறப்புக்கள் பல பொருந்திய இந்த இராஜகோபுரம் மயில்மீது அமர்ந்து அருள்மழை பொழிந்து வரும் முருகப் பெருமான் திருவருள்

நோக்கினால், ஊர்மக்கள், பக்த அடியார்கள் அப்பெருமான் மீது கொண்ட தாராள பக்தியுடன் கூடிய மன எழுச்சியினாலும், திருப்பணிகளின் பயனாலும் அமையப்பெற்றுள்ளது. பக்தர்களை ஈர்க்கும் சக்திகொண்ட இந்த இராஜகோபுரம் மக்களுக்கு தெய்வ தத்துவத்தை உணர்த்தி அவனருளால் அவன்தாள் வணங்கக் கூடிய உன்னதமான மன எழுச்சியைத் தரப்போகின்றது.

இவ்வாறு அமையப்பெற்ற இராஜகோபுர மஹாகும்பாபிஷேக மலர் ஒன்று தேவஸ்தான நிர்வாகம் வெளியிடுவதை இட்டு நான் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதை இட்டும் நான் முருகப் பெருமானின் பயபக்தியுடன் பெருமைப்படுகின்றேன். இம்மலரை ஆக்கபூர்வமாக வெளியிடும் நிர்வாகத்தினரின் பணி முருகப் பெருமானின் அருளால் மேலும் ஓங்க வாழ்த்துகின்றேன்.

வளர்க சமயப் பணிகள்.



**ஐ. பாலசிங்கம்**
ஓய்வுநிலை உப அதிபர்,
சமாதான நீதிவான், முன்னாள் தலைவர்,
அண்ண மகேஸ்வரர் தேவஸ்தானம்,
செயலாளர், அறுமன்பதி ஞான வைரவர் ஆலயம்.

# சனசமூக நிலையத் தலைவரின் வாழ்த்துரை



"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாக்குக்கு இணங்க எம் ஊரில் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயம் அமைந்திருப்பது மிகவும் சிறப்புக்குரியது. ஓர் ஊரின் சிறப்பு மற்றும் வளர்ச்சி என்பதில் ஆலயத்தின் சிறப்பும் ஆலயத்தின் வளர்ச்சியும் மிகவும் முக்கியமானது. அந்த வகையில் எமது ஆலயம் சிறப்பான ஒரு ஆலயமாக இருப்பதும் மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டிருப்பதும் எமது ஊரை வளர்ச்சியடைந்த ஊராக இந்த உலகில் பதிவு செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது.

இன்றைய விஞ்ஞான உலகிலும் மெஞ்ஞானத்தோடு ஒன்றிய வாழ்க்கையைப் பெரும் பாலான மக்கள் வாழ்கின்றார்கள். அந்த வகையில் எங்கள் மக்களின் ஆன்மிகத்தோடு ஒன்றிய ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடித்தளமாய் விளங்குவது எமது ஆலயமான சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் என்பது கண்கூடு. வரலாற்றுச் சிறப்பும் புராணச் சிறப்பும் பொருந்திய புனிதத் தலமாக இருக்கும் எமது ஆலயத்தில் தேர், தீர்த்தக்கேணி மற்றும் கோபுரம் என்ற அனைத்தும் ஆகம முறைப்படி அமைந்திருப்பது மிகவும் மெய் சிலிர்க்கும் உன்னத விடயங்கள்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற அற்புத வாக்குக்கு அமைய எம் மக்கள் எல்லோரும் கோடி புண்ணியம் பெற, எம் முருகப் பெருமானின் திருவருள் கைகூடி வந்துள்ளது. இன்று அழகிய மிகப்பெரிய கோபுரம் எமது ஆலயத்தையும் எமது ஊரையும் அழகுபடுத்தி எம் மக்கள் எங்கிருந்தும் எம்பெருமானை வணங்கி அவன் அருளைப் பெற வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது.

இந்த ஆலயம் இவ்வளவு தூரம் வளர்ச்சியடையப் பங்களிப்பு வழங்கிய எம் மக்களுக்கும் அதற்காய் உழைத்த ஆலய நிர்வாகத்தினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் சனசமூகத்தின் சார்பாகத் தெரிவிப்பதோடு, கோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர் சிறப்பாக அமைய மலர்க் குழுவிற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். மேலும் எமது ஆலயம் வளர்ச்சி பெறவும் சிறப்புப் பெறவும் எம்பெருமானை வேண்டுகிறேன்.

நன்றி

**தலைவர்,**
**ஜெ. ஜெயராம்**
**சைவ வாலிபர் சனசமூக நிலையம்,**
**ஆசிரியர்,**
**கிளி / முழங்காவில் மகா வித்தியாலயம்.**



ஆலய முன்வளைவு தோற்றம்



ஆலய தெற்கு வீதி



அர்த்த மண்டபம்




ஆலயத்திற்கு அருகில் இருக்கும் சனசமூக நிலையத்தின் தோற்றம்



அன்னதான மண்டபம்



தல விருட்சம்



தீர்த்தக் கேணி



தீர்த்தக் கேணி சுவாமி இருப்பிடம்



# வாழ்த்துச் செய்தி

ஓர் ஊரின் சிறப்பையும் மக்களின் வாழ்க்கையையும் பிரதிபலிப்பவற்றில் அவ் வூரில் அமைந்துள்ள வழிபாட்டுத் தலங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த வகையில் மல்லாகம் சாளம்பை முருகன் ஆலயம், கோட்டைக்காடு சூராவத்தை, அளவாவோடை, மயிலங்காடு போன்ற இடங்களில் வசிக்கும் மக்களின் எழுச்சிக்கும் உயர்வுக்கும் ஓர் உறுதுணையாக அமைந்துள்ளது. இந்த இடங்களில் வாழும் மக்களின் பக்திப் பெருக்கினாலும், அயராத உழைப்பினாலும் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்து, மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐம்பொறிகளைக் கொண்ட ஐந்து வாயில் இராஜகோபுரம் அமைந்துள்ளமை, எம்மையெல்லாம் மெய் சிலிர்க்கச் செய்கின்றது.

இந்த இராஜகோபுரம் அமைக்கும் போது ஆலய பரிபாலன சபையினரினதும், கோபுரத் திருப்பணிச் சபையினரினதும் வேண்டுகோளின் படி, கோபுர அமைப்பாளருக்கு ஓர் ஆலோசகராகவும், தொழில் நுட்ப உதவியாளராகவும் இருந்து வேண்டிய நேரத்தில் வேண்டிய உதவிகளைச் செய்ததை இட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்த இராஜகோபுரம் ஆகமமுறைப்படி சிறப்பாக அமைந்துள்ளது. இதில் தேவர்கள், மனிதர்கள், பிராணிகள் போன்ற எல்லா சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இதனை அமைத்தவர்களை நான் பெரிதும் பராட்டுகின்றேன். எல்லாம் முருகப் பெருமானின் திருவருளாகும்.

இவ்வாறு அழகுற அமைக்கப்பட்டுள்ள இராஜகோபுர கும்பாபிஷேக மலர் ஒன்று மலர்வதை இட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். அத்துடன் வரவேற்கின்றேன், வாழ்த்துகின்றேன். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் வாக்குக்கு அமைய ஆலயத்துக்கு என் பணி தொடர்ந்து செல்லும் என்று கூறிக்கொள்வ தோடு, எல்லோரும் பக்தி மார்க்கத்தில் நிலை பெற்று சகல பேறுகளையும் பெற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**குருநாதன் தெய்வேந்திரன்**
(இராஜகோபுர தொழில்நுட்ப ஆலோசகர்)

# ஆலய வரலாறு

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இலங்கைத்திருநாட்டின், யாழ் மாவட்டத்தில் பக்திமார்க்கமும் ஆன்மீகத்தோடு ஒன்றிய வாழ்க்கை நெறியும் பொருந்திய கோட்டைக்காடு, மல்லாகம் எனும் இடத்தில் அமைந்துள்ள சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் வரலாறு, அதிசயமும் ஆச்சரியமும் நிறைந்த சம்பவத்தோடும், முருகனின் அளப்பரிய கருணையோடும் தொடர்புடையது.

அசுரர்களை அழித்து தேவர்களை காக்கவென அவதாரம் கொண்ட முருகப்பெருமான் தனது படைத்தளம் அமைந்த கதிர்காமத்திலிருந்து எம் ஊரையும் எம் மக்களையும் காக்கவென வரவிரும்பி அழகரின் கைக்கு வேலாக வந்து அசரீரியாக மொழிசொல்லி மறைந்தான். அழகரின் வாழ்க்கையும் அழகரின் கைக்கு வேல்வந்த விதமும் அதிசயமும் ஆச்சரியமும் மிக்கது.

ஏழாலை தெற்கு அளவாவோடை என்னும் ஊரிலே இளையவி இளையவள் தம்பதியினருக்கு ஆண்பிள்ளைகளில் மூத்த மகனாகப் பிறந்தவர் அழகர். இவர் அவ்வூர் மூத்தார் மகளாகிய சின்னக்குட்டி என்னும் அம்மையாரைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இனிதாக இல்லறம் நடாத்தி சுந்தரம் என்னும் அழகிய பெண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்து சீராட்டி பாராட்டி வளர்த்து உரிய பருவம் எய்தியதும் அதிபர் திரு. மூ. வைரவநாதன் அவர்களுக்கு திருமாங்கல்யம் செய்து வைத்து அக மகிழ் வடைந்து வாழ்க்கையை இனிதே நடாத்தி வந்தார்.

அன்றைய கால கட்டத்தில் கதிர்காமம் செல்வதாயின் கதிர்காமக் கந்தனின் அழைப்புக் கிடைத்தால் மட்டுமே செல்ல முடியும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவியது. இவ்வேளையில் அழகர் அவர்களும் தனக்கு கதிர்காமக் கந்தனின் அழைப்புக் கிடைத்திருப்பதாகத் தனது மனைவியிடமும் பெற்றோரிடமும் கூறி விட்டு பல அடியவர்களுடன் பாத யாத்திரையாக கதிர்காமம் சென்றார்.

கதிர்காமக் கந்தனின் திருவிழா முடிந்தும் அழகர் வீடு திரும்பி வராத காரணத்தால் அவரோடு கூடச் சென்ற சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த குமார சுவாமிப் புலவர் அவர்களின் உறவினர்களிடம் சென்று விசாரித்த வேளை அழகர் அவர்கள் சந்நியாசியைப் போல் கோயில் சூழலில் திரிவதாகவும், தான் தற்போது ஊருக்கு வரவில்லை என்றும் ஆறுதலாக வருவதாகக் கூறியதாகவும் தெரிவித்தார்கள்.

ஆறு மாதங்கள் கழிந்த பின் ஒரு நாள் அழகர் அவர்கள் தலையில் திருநீற்று மூடையுடன் பெற்றோர் முன் சந்நியாசி போல் வந்து நின்றார். அப்பொழுது தான் தனக்கு கதிர்காமத்தில் மாணிக்க கங்கைக் கரையில் நடந்த ஓர் அதிசயத்தை மனைவிக்கும், தனது பெற்றோருக்கும் மெய் சிலிர்க்கும் வண்ணம் கூறினார். தான் மாணிக்க கங்கையில் நீராடிவிட்டு வெளியே வரும்போது ஒரு சந்நியாசியார் ஓடி வந்து "இந்தா இதைப்பிடி" என்று தனது கையில் ஒரு தங்கவேலைக் கொடுத்ததாகவும் மல்லாகம், செல்லப்பருடைய காணியில் அதனைப் பிரதிஷ்டை செய்யும் படியும் கூறி விட்டு மிக அவசரமாக ஓடிச் சென்று மறைந்து விட்டதாகவும்



அவர் கூறினார். ஒரு வாரகாலமாக அந்த சந்நியாசியைத் தேடியதாகவும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் அதனால் கதிர்காமக் கந்தனே சந்நியாசி வடிவில் வந்து அந்த வேலைத் தந்ததாகவும் எண்ணி, தான் ஊர் திரும்பியதாகவும் கூறினார்.

அழகரை இக்கோலத்தில் கண்டதும் உறவினர் எல்லோருக்கும் பெரும் அதிசயமும் ஆச்சரியமாகவும் இருந்தது. அழகர் வந்ததை அறிந்த செல்லப்பர் அவர் வீட்டிற்கு வந்து, அழகர் கையில் வேலைக் கொடுத்த குருநாதர் தனது கனவில் தோன்றி அழகன் கையில் வேலுடன் வருகின்றான். அதனை வைத்து ஆதரிக்க காணி கொடு என்று கூறியதாகக் கூறினார்.

அன்றைய தினமே அழகர் ஒரு ஆலமரத்தின் கீழ் ஒரு சிறிய கொட்டிலை அமைத்து அத் தங்கவேலை வைத்துப் பூசைகள் செய்ய ஆரம்பித்தார். பின்பு அழகர் அவர்கள் ஊரில் உள்ள பெரியவர்கள் சிலரிடம் பண உதவி பெற்று சில மாதங்களிலேயே செல்லப்பரிடம் இருந்து நான்கு பரப்புக் காணியைக் கொள்வனவு செய்தார். அந்தக் காலத்திலேயே (1925 ஆம் ஆண்டு) அழகர் சுவாமி அடிகளார் தனது சமூகத்தினரையெல்லாம் ஒன்று சேர்த்து ஆலயத்தையும் அமைத்து ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்தி சங்கத்தையும் ஸ்தாபித்து அத்தோடு ஜீவ காருண்ய சபையையும் ஏற்படுத்தி மது உண்ணாமை, கொல்லாமை, மாமிசம் புசியாமை என்ற கட்டுப்பாட்டிற்குள் எல்லோரையும் நிறுத்தினார். இங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று கொன்று சாப்பிடவென்று வாங்கி வந்த ஆமையையும் கொல்ல விடாது தடுத்து அவர்களுக்கு அன்பான பல கதைகள் சொல்லி, ஆமைக்குரிய பணத்தையும் கொடுத்து, ஆமையை மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய் காங்கேசன் துறைக் கடலில் விடும்படி பணித்து, தான் கண்ட கடவுளின் பேரின்பத்தை எல்லோரும் காண வேண்டும் எல்லோரும் அள்ளிப் பருக வேண்டும் என்பதற்காக உட்பிரகாரத்தில் உள்ள பிள்ளையார் உட்பட மூலஸ்தானத்தில் இருந்து மகா மண்டபம் வரை வெள்ளை வைரக்கல் வேலைகளாக செய்து கிணறுகள் வெட்டி ஊர் மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்போடு தன்னாலான பூசைகள் விழாக்கள் ஆகியவற்றைச் செய்து வந்தார். இவ்வாறாகத் தோற்றம் பெற்றதே இன்று எமக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சாளம்பை முருக மூர்த்தி ஆலயமாகும்.

ஆலயத்தைப் பராமரிப்பதற்கும் பூசைகள் விழாக்கள் ஆகியவற்றை நடாத்துவதற்கும் ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்தி சங்கத்தின் மூலம் நிர்வாக சபையைத் தெரிந்து அச்சபைக்கு அழகர் சுவாமி அவர்களே தலைவராக நியமிக்கப்பட்டு ஆலய பரிபாலனம் வழி நடாத்தப்பட்டது. பின்பு 1928 ஆம் ஆண்டு அழகர் சுவாமி அவர்களின் பெயரில் இருந்த ஆலயக் காணியும் ஆலயமும் ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்தி சங்கத்திற்கு அழகர்சுவாமி அவர்களால் தர்ம சாசனம் செய்யப்பட்டு தர்மசாசன உறுதி எழுதப்பட்டது. அக்காலத்தில் ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்திச் சங்கம் என்ற பெயருடன் ஆலயத்தைப் பரிபாலித்து வந்த சங்கமே தற்பொழுது "சாளம்பை முருக மூர்த்தி ஆலய பரிபாலன சபை" என்ற பெயரில் ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றது.

இவ்வாலயம் 1925 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்தி சங்கத்தினரால் பரிபாலிக்கப்பட்ட காலத்தில் திரு. இ. அழகர் சுவாமி அவர்கள் தலைவராகவும் திரு. இ. மூத்தவி அவர்கள் செயலாளராகவும் இருந்து செயற்பட்டனர். அதன்பின்னர் திரு.

ந. சிவப்பிரகாசம் (சட்டத்தரணி) திரு. ஐ. பேரம்பலம் (வைத்தியர்), திரு. கு. இளையவி, திரு. இ. சண்முகநாதன் (ஆசிரியர்), திரு. மூ. வைரவநாதன் (அதிபர்), திரு. ச. அண்ணாமலை (அதிபர்) திரு. கு. குருநாதன் (J.P., கட்டிட ஒப்பந்தக்காரர்) திரு. இ. கதிரமலைநாதன் (இலிகிதர்) திரு. இ. ஆனந்தன் (பிரதி அதிபர்) திரு. ச. இரத்தினவடிவேல் (மின்சாரசபை அத்தியட்சகர்) ஆகியோர் தலைமை தாங்கி இவ்வாலயத்தின் பரிபாலனத்தை சிறப்பாக நடாத்தி வந்துள்ளனர். தற்பொழுது இச் சபையின் தலைவராக திருமதி லோகநாயகி இரகுபதி (ஓய்வுநிலை அதிபர்) அவர்களும் செயலாளராக திரு. நா. கணேசமூர்த்தி (சண்முகா மருந்தகம் உரிமையாளர்-சுன்னாகம், ஓய்வுநிலை சீமெந்து கூட்டுத் தாபன உத்தியோகத்தர்) அவர்களும், பொருளாளராக திரு. சு. இராசநாயகம் (கட்டிட ஒப்பந்தக்காரர்) அவர்களும் சபை அங்கத்தவர்களும் தம்மை ஈடுபத்தி ஆலய பரிபாலனத்தை செவ்வனே நடாத்துகின்றனர்.

ஆலய பரிபாலன சபையின் ஒத்துழைப்பும் தொண்டர் சபையின் ஒத் துழைப்பும் அடியார்களின் ஒத்துழைப்பும் இவ் ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்றது.

அழகர் சாமி அவர்களால் கதிர்காமக் கந்தனின் வேலினை வைத்து ஆரம்பிக்கப் பட்ட இத்திருக்கோயில் இன்று மேலோங்கி வளர்ந்து, மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், கொடிஸ்தம்பமண்டபம் வசந்தமண்டபம் என்பவற்றுடன் மணிக்கூட்டு கோபுரமும் அமையப் பெற்று பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், கஜலட்சுமி, சிவன், அம்மன், சிவன் பார்வதி, நடராஜர் அம்மன், வைரவர், நவக்கிரகம், நாகதம்பிரான், சண்டேஸ்வரர், வெளிவைரவர், காளி ஆகியோரைக் கொண்ட திருக் கோயில் களையும்; மடப்பள்ளி, யாகசாலை, அலுவலகம், உள்வீதியில் அமைந்துள்ள மண்டபங்கள், அன்னதானமண்டபம், துவார பாலகர் ஆலய முன்றலில் காணப்படும் அலங்கார வளைவு, கொடிஸ்தம்பம், நந்தி பலிபீடம், தட்சணாமூர்த்தி, மூன்று சித்திரத் தேர்கள், தீர்த்தத்தடாகம், சுவாமி தரிசன மண்டபம் ஆகியவற்றையும் உள்ளடக்கி இன்று பஞ்ச தள இராஜகோபுரத்தோடு ஒரு பெரிய தேவஸ்தானமாக வளர்ச்சி கண்டிருப்பது எமது மக்கள் செய்த பெரும் பேறாகும்.

இவ் ஆலய வளர்ச்சிப்படியில் ஒரு முக்கிய படிக்கல்லாக அமைபவர் முருக பக்தனாகிய திரு. பொன். கந்தசாமி (கொழும்பு) என்றால் மிகையாகாது. இவரினால் 1984 ஆம் ஆண்டு இவ் ஆலயத்தின் மூலஸ்தானம், பிள்ளையார் ஆலயம், நவக்கிரக மண்டபம், ஆலயமுன்மண்டபக்கூரைவேலைகள் ஆகியன புனருத்தாரணம் செய்யப்பட்டு அவரது உபயமாகவே மஹா கும்பாபிஷேகமும், சங்காபிஷேகமும் நிறைவேற்றப்பட்டன.

மக்கள் இடம்பெயர்வின் பின்னர் 1998 இல் நடைபெற்ற மஹாகும்பாபிஷேகம் ஆலய பரிபாலன சபையினராலும், 2010 இல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகம் திரு. ப.மோகனதாசன் (கொழும்பு) அவர்களாலும் நிறைவேற்றப்பட்டன. முருகனுக்குரிய சித்திரத்தேர் பொதுமக்கள் அனைவரினதும் பங்களிப்போடு அமைக்கப்பட்டு 14.07.2000 அன்று வெள்ளோட்டமும் இடம்பெற்றது. 2001 இல் பிள்ளையாருக்கானதேர் திரு.கு. தெய்வேந்திரன் குடும்பத்தினரால் அமைக்கப்பட்டது. சண்டேஸ்வரருக்குரிய தேர் 2009 ஆம் ஆண்டு திரு.நா. கணேசமூர்த்தி குடும்பத் தினரால் அமைக்கப்பட்டது.

தீர்த்தக் கேணிக்கான திருப்பணி வேலைகளில் கேணி அமைப்பதற்கான காணியினை திரு. இ. ஆனந்தன் (இரண்டு

பரப்பு) ப.விக்னேஸ்வரன் (ஒரு பரப்பு) க.சத்தியநாதன் குடும்பம் (ஒரு பரப்பு) ஆகியோர் அன்பளிப்பு செய்தனர். கேணி வெட்டுவதற்கான முழுமையான மண் அகழ்வு வேலையினை திரு. ச. இரத்தினவடிவேல் அவர்களும் ஏனைய வேலைகள் பொதுமக்கள் அனைவரினாலும் 2010 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன.

ஆலயத்தின் அன்னதான மண்டப திருப்பணி வேலைகளில் ஒரு பரப்பு காணியினை அமரர் முத்துலிங்கம் குடும்பம் அவர்களும் ஒன்றறைப் பரப்புக் காணியினை திரு. இ.சிவராசா அவர்களும் வழங்கினர். இக் காணியில் அன்னதான மண்டபம் இராசு பாக்கியம் குடும்பத்தினரால் நிறைவேற்றப்பட்டது. ஆலய வெளிவீதி விஸ்தரிப்பிற்காக திருவாளர்கள் க. ஸ்ரீ முருகானந்தபவ, ச. அருணாசலம், த. நடராஜா, திருமதி பா. தம்பிராஜா, திருமதி பே. கதிரவேலு ஆகியோர் தத்தமது காணிகளில் ஒவ்வொரு சிறு பகுதியினை அன்பளிப்பு செய்தனர்.

ஆலயத்தின் வளர்ச்சிப் பரிமாணத்தில் முக்கிய பங்கு வகிப்பது இராஜகோபுரமாகும். அந்த வகையில் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் அடியார்கள் அனைவரினதும் கண்கொள்ளாக் காட்சியாக பஞ்ச தள இராஜகோபுரம் இன்று மிளிர்கின்றது.

இவ் இராஜகோபுரத்திற்கான அடிக்கல், 28.10.2012 அன்று தற்போதய ஆலய பரிபாலன சபைத் தலைவர் திருமதி லோகநாயகி இரகுபதி அவர்களினால் நாட்டப்பட்டது.

சுவிஸ் நாட்டில் வசித்தவரும் தற்போது அமரத்துவம் அடைந்தவருமான அமரர் இராசையா உதயமனோகரன் அவர்களினால் இராஜகோபுரத்திற்கு முதன்முதலில் அன்பளிப்பு செய்யப்பட்ட ரூபாபத்து இலட்சம் நிதியுடன் ஆரம்பிக்கப்பட்ட இத் திருப்பணி வேலை பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டு முருகன் அடியார்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்போடு மிகக் குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே நிறைவேற்றப்பட்டு, இன்று கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

இவ்வாறு இராஜகோபுரத்தோடு சிறப்புற விளங்கும் எமது ஆலயத்தில் காலை மாலை என இருநேரங்கள் நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. சனிக்கிழமைகளில் மதியம் திருமுழுக்குப் பூசையும் மாலைப் பூசையும் நடைபெறுகின்றது. அத்தோடு விஷேட பூசைகளாக மாதந்தோறும் சங்கராந்தி தீர்த்தம், கார்த்திகை அபிஷேகம், பரணி அபிஷேகம் நடைபெற்று வருகின்றன. இவற்றை விட தைப்பொங்கல், தைப்பூசம், புதுவருடப்பிறப்பு, மாசிமகம், மகா சிவராத்திரி, வைரவர் அபிஷேகம் பங்குனித் திங்கள், சித்திராப் பூரணை விரதம், சங்காபிஷேகம், வைகாசி விசாகம், ஆடிச் செவ்வாய், கதிர்காமக் கொடியேற்றம், ஆடிப்பூரம், வரலஷ்மி பூஜை, கதிர்காமத் தீர்த்தம், ஆவணி ஞாயிறு, ஆவணி சதுர்த்தி, புரட்டாதி சனி, நவராத்திரி பூஜை, நாகதம்பிரான் அபிஷேகம், தீபாவளி, கேதார கௌரி விரதம், கந்தஷஷ்டி, ஐப்பசி வெள்ளி, சூரன்போர், திருக்கல்யாணம், பார்வதி பரமேஸ்வரன் அபிஷேகம், அழகர் சுவாமி குருபூசை, குமாராலயதீபம், பிள்ளையார் கதை, திருவெம்பாவை போன்ற விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் ஓர் ஆலயத்தின் விழாக்களில் மிகச் சிறப்பானது ஆலய மஹோற்சவமாகும். சாளம்பைக் கந்தனின் மஹோற்சவமானது ஆனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இரண்டாம் நாள் வசந்த உற்சவமாகவும், ஐந்தாம் நாள் மாம்பழத் திருவிழாவாகவும், ஆறாம் நாள் கைலாய வாகனத் திருவிழாவாகவும்,

ஏழாம் நாள் வேட்டைத் திருவிழாவாகவும், ஒன்பதாம் நாள் சப்பறத் திருவிழாவாகவும் பத்தாம்நாள் தேர்த் திருவிழாவாகவும் பதினொராம் நாள் திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தத் திருவிழாவாகவும், கொடியிறக்கத் திருவிழாவாகவும், பன்னிரண்டாம் நாள் பூங்காவனத் திருக்கல்யாணத் திருவிழாவாகவும் மிக விமர்சையாக நடைபெற்று வருகின்றது. பூங்காவனத் திருவிழாவை அடுத்து பிராயச்சித்த அபிஷேகம், வெள்ளிக்கிழமை வைரவர் பொங்கல், அடுத்த வார வெள்ளிக்கிழமை எட்டாம் மடைப் பொங்கல் நடைபெற்று வருகின்றமை சிறப்பம்சமாகும்.

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ காலங்களிலும் விஷேட தினங்களிலும் சுவாமியை வீதியுலா கொண்டு வருவதற்கான பல வகையான வாகனங்கள் பொதுமக்களால் அன்பளிப்பு செய்யப்பட்டன. அந்த வகையில் ஆனை, எலி, மயில் , ஆட்டுக்கடா, குதிரை, எருது, அன்னப்பட்சி, காராம்பசு, கைலாய வாகனம், தேருக்கு சுவாமி எழுந்தருளும் பீடங்கள் ஆகிய வாகனங்களில் சுவாமி வீதியுலாக வருகின்றமை கண் கொள்ளாக் காட்சியாகும்.

கந்தஷஷ்டி விழாவின் இறுதி நாளான சூரசம்ஹார நிகழ்வின்போது பயன் படுத்தப்படும் சூரனை 1966 ஆம் ஆண்டு அமரர் சி. பாலசிங்கம் அவர்கள் அன்பளிப்பு செய்தார்.

ஆலய பரிபாலன சபையினர், தொண்டர் சபையினர், ஊர்மக்கள், வெளி நாடுகளில் வாழும் அடியார்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்போடு பல வளர்ச்சிகளைக் கண்ட எமது ஆலயம் இன்று பஞ்சதள இராஜகோபுரத்தோடு மிளிர்வது மக்கள் செய்த பெரும் பேறாகும்.

ஓம் சரவணபவ

**சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான நிர்வாக சபை**



கும்பாபிசேக விழாவில் கும்பம் வீதியுலா வரும் காட்சி



ஆலய தொண்டர்கள் - 2000



பிள்ளையார் தேரில் வீதியுலாவரும் காட்சி - 2001



ஆலயத்தின் பழைய தோற்றம்




பரிபாலனசபைத் தலைவர் அடிக்கல் நாட்டுகிறார் 2012



சண்டேஸ்வரர் வெள்ளோட்டத்தில் சிற்ப ஆசாரியாரை கௌரவித்தல்
2009



கோபுர திருப்பணிக்கு முதல் நிதி அன்பளிப்புச்செய்த
அமரர். திரு. இராசையா உதயமனோகரன் அடிக்கல் நாட்டுகிறார் 2012



# கதிர்காம முருகன் தொன்மையும் அடையாளமும்

கதிர்காமத்தின் தொன்மை, அடையாளம் தொடர்பான கருத்துக்கள், குறித்த இடப்பெயர் ஆராய்ச்சியுடனேயே தொடங்கி விடுகின்றதெனலாம். தத்தமது இனத்துவ அடையாளங்களை (iniceth Identies) நிறுவும் முயற்சியாகவே இவை பெரிதும் அமைதலை அவதானிக்கலாம். செந்தினைக் கதிர்கள் நிரப்பிவைத்த கமம், என்பதே கதிர் + கமம் கதிர்காமமானது என்பது அ. சி. கிவம் (1954 : 5) தரும் விளக்கம்.

''கதிர்காமம் கார்த்திகேய கடவுளுக்கு உவப்பானது. கார்த்திகேயன் கிராமம் என்பது சிதைந்து கஜரகம் என்றாய், பின் கதிர்காமம் என்றாயிற்று. இவ்வாலயத்தில் முக்கிய வழிபாடு செய்யும் தமிழர்கள் இந்நாமத்தை தமிழ் ரீதியாகக் கதிர்காமம் என்றாக்கிவிட்டனர். கதிர்காமம் திவ்விய ஒளியும் அன்பும் பிரகாசிக்கும் ஷேத்திரம். கதிர்-ஒளி: காமம்-அன்பு என்பது சேர். பொன். அருணாச்சலத்தின் (1995 : 3) கருத்தாகும்.

''கதிர்காமம் என்பது சிங்கள மொழிச் சொல்லின் மரூஉவாய்த் தமிழ் மொழியின் கண் திசைச் சொல்லாய் பிற்காலத்தில் வழக்கில் வந்ததென்பதே எமது கொள்கை. அக்கொள்கைக்கேற்ப, கதிரு மரங்களை யுடைய ஊர் எனப் பெயர்க் காரணம் கூறுவதே பொருத்தமாகத் தோன்றுகின்றது." என்பார் குல. சபாநாதன் (1965: 24)

"சிங்கள வம்சத்தின் தாதை எனப்படுகின்ற விஜயன். கி. பி. 500 ஆம் ஆண்டளவில் கதிரையாண்டவருக்கு ஒரு கோயில் அமைத்தான் என யாழ்ப்பாண வைபவமாலை எடுத்தோதுகின்றது. அக்காலத்தில் சிங்களமொழி உருவாகவில்லை. திரு. சபாநாதன் அவர்கள் கூறும் 'கதிரு' மரமும் முளைக்கவில்லை. விஜய மன்னன் வந்து சிங்கள மொழி பிறக்கு மட்டும் இலங்கையின் பழைய முருகன் கோயில் 'நாமகரணம்' நோக்கிக் காத்துக் கிடந்தது எனத் தொனிக்க வைப்பது தருமமாகாது'' என்பது புலோலியூர் மு. கணபதிப்பிள்ளையின் (1967 : 24) வாதம்.

தமிழ் இந்துக்கள் கதிர்காமத்தின் தொன்மையை, சிங்கள பௌத்த காலத்திற்கு முன்னையதாகக் கருதுகின்றனர். அதனை ஓர் இந்து ஆலயமாகத் துட்டகைமுனு மீள மைப்பதற்கு முன்னரே நிலவிய வழிபாட்டிட மாகக் கருதுகின்றனர்.

"தமிழ் மக்கள் குறிஞ்சி நிலத்திலே, குறிஞ்சி நில வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்த பண்டைப் பழங்காலத்தில் அமைக்கப்பட்ட திருக்கோயிலே கதிர்காமம் எனல் வேண்டும். சமஸ்கிருத மணமின்றி மக்கள் வழிபாடியற்றும்

முறை இன்றும் அத்திருக்கோயிலிலே வழக்கில் உள்ளது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் 'கந்தவழி' வழிபாடே அது எனலாம்'' என்பார் மு. கணபதிப்பிள்ளை (1967)

அரசியல் மாற்றங்கனடியாக அவ்வப்போது இந்துக்களின் கைகளிலிருந்த நிர்வாகம் பின் முற்றாகக் கைமாறியது. இந்த வகையில். பின்னாளில் ஆலய நிர்வாகத்தை இந்துக்களிடம் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கை 1908 இல் முதன்முதலாகச் சேர். பொன். அருணாச்சலம் அவர்களால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பின்னாளில் அருணாச்சலம் மகாதேவா தலைமையில் கூடிய அகில இலங்கை இந்து அமைப்புக்களின் ஒன்றியம், தர்க்கரீதியாகத் தமது நியாயங்களை முன்வைத்தது (Mahadeva - 1938) எனினும் இவர்கள் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கப்படவில்லை. இந்தக் கோரிக்கையை இனவாத நோக்கில் அன்றைய நாளிதழ்களும், சிங்கள அமைப்புக்களும் பயன்படுத்தியமை இன்றுவரை எமது வரலாறாகியுள்ளது.

நிர்வாக ரீதியான அந்நியமாக்கலின் பின்னரும், கதிர்காமவழிபாட்டுமரபுபெரிதும் இந்துப் பண்புகளுடனேயே தொடர்ந்திடக் காணலாம். வாய்கட்டிப் பூசை செய்யும் கப்புராளை மரபுக்குப் புறம்பாக, காவடி ஆட்டமும், தூக்குக் காவடியும், கற்பூரச் சட்டியும். தீமிதித்தலும், பிரதிட்டை பண்ணலுமாய் இந்து பக்தி அலையே முதன்மை பெற்று விளங்குவதை இன்றுவரை அவதானிக்கலாம். எனினும் ஐம்பதுகளைத் தொடர்ந்து இத்தகு சடங்குகளிடையேயும் திட்டமிட்ட மாற்றங்கள் உட்புகுத்தப்பட்டமையை அண்மைய மானிடவியல் ஆய்வுகள் வெளிக்காட்டும். எடுத்துக்காட்டாக, தீமிதித்தல் சடங்கின் தலைமைப் பொறுப்பு இந்துக்களிடமிருந்து கைமாறியமையும் பின் எழுபதுகளில் கப்புறாளைமாருக்கும் அதில் இடந்தரப்பட்டமையும் தீ மிதிப்புக்கு முன் மும்மணிகளின் ஆசிவேண்டி கிரிவிகாரைக்கு முதல் வணக்கம் எனப் புதிய நடைமுறைகள் புகுத்தப்பட்மையையும் பேராசிரியர்கள் ரிச்சட் கொம்றிச், கணநாத் ஒபயசேகர (Gombrich & Obeyesekereb 1990) ஆய்வுகளில் பதிவுபெறும். இலங்கையில் நிகழ்ந்த சமூக அரசியல் மாற்றங்களோடு இந்தச் சமயநிலை மாற்றங்களை இணைத்தும் விளக்குவார் ஒபயசேகர.

இத்தனைக்குப் பின்னாலும் தமிழ் இந்துக்களின் கதிர்காம ஈடுபாடு தணிந்ததில்லை என்ற அம்சம் எமது கவனத்திற்குரியது. அவ்வப்போது ஏற்படும் இனக் கலவரங்கள் போக்குவரத்துத் தடைகள் காரணமாக இடையூறு ஏற்பட்ட போதும் ஆர்வம் குறைந்ததில்லை. வாய்ப்புக் கிடைக்கின்ற போதிலெல்லாம் கதிர்காம யாத்திரை உயிர்ப்புடன் மேற்கொள்ளப்படக் காணலாம். கடந்த காலங்களில் வடபகுதி மக்களின் வாய்ப்புக்கள் குறைந்த போதிலும், கிழக்கிலங்கைத் தமிழ் இந்துக்கள் கதிர்காம பாத யாத்திரையைத் தவற விடுவதில்லை. இப்பொழுது மீள கதிர்காம யாத்திரையைப் பலரும் தொடர்வதையும் அவதானிக்க முடியும். ஏனையோர்குறைந்தபட்சம்வடக்கில் மாதிரியாகத் தாம் உருவாக்கிய ஆலயங்களில் கதிர்காம உற்சவக் காலத்தில் விழாவெடுத்து நிறைவு காணலை அவதானிக்க முடியும்.

உண்மையில் கதிர்காமத்தின் தொன்மையும், அது சிங்கள - தமிழ் உரிமை உணர்வுகளுக்கு அப்பால் பொதுப்பண்பாட்டு மையமாக நின்று நிலைப்பதன் பின்னணியும், வேடர்களின் தெய்வமாக அவர்கள் வழிபாட்டு மரபுகளின் மூலமாகக் கதிர்காமம் இன்னமும் விளங்குதலின் வழிதான் புரிந்து கொள்ளப்படலாம். தத்தமது இனத்துவ



வட்டங்களுக்குள் கதிர்காமத்தை அடக்கும் முயற்சிகளிடையேயும் ஏனையோர் 'கதிர்காம - வேடர்' உறவினை ஏற்றுக்கொள்ளுவதும் இங்குச் சிறப்பான கவனத்திற்குரியது.

கதிர்காம மலைத்தொடர்கள் அமைந் திருக்கும் பான்மையில் இது சப்பிரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த பிரதேசமாகும் என்பது அறிஞர் கருத்தாகும். 'சப்பிரகாமம்' என்பது சபரர்கிராமம் என்பதன் திரிபாகும் எனக் காட்டி சபரர் என்பார் வேடசாதி வகுப்பைச் சேர்ந்த ஒரு கிளையினர் எனவும் அவர்களுடன் தொடர்புபட்டெழுந்ததே இத் தலம் எனவும் நிறுவுவார் வ. குமாரசாமிப்பிள்ளை (1935)

உண்மையில் வேடர் தலைவன் மகள் வள்ளியைக் களவு மணம் புரிந்த இடமாகவே கதிர்காமம் பற்றிய இலங்கை மக்களின் ஐதீகம் விளங்குகின்றது. மாறுபடு சூரனை வதைத்த பின் வள்ளியை மணம் புரிய வந்த இடம் இதுவே என்பர் இந்துக்கள். கதிர்காமத்திற்கு மேற்கே சுமார் மூன்று மைல் தொலைவில் மாணிக்கக் கங்கைக் கரையில் அமைந்துள்ளது செல்லக் கதிர்காமம். இங்கு பிள்ளையார் கோயிலுமுண்டு. இவ்விடத்திலேயே முருகன் வேண்டுகோளின்படி யானையாகத் தோன்றி வள்ளி திருமணத்திற்குப் பிள்ளையார் உதவினார் எனவும் இவர்கள் கருதுகின்றனர். சங்கத் தமிழ் இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படை கூறும் ஐந்தாவது படைவீடு கதிர்காமமாகத்தான் இருக்க வேண்டும் என்ற கருத்தும் தமிழ் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டது.

வட இந்திய ஸ்கந்த தெய்வமான மரபு, முருக - வள்ளி மரபுடன் பின்னாளில் இணைக்கப்பட்ட வேளையிலும் அதற்கு ஏற்ப உள்ளூர் வழக்காறுகள் இசைவு காணும் முருகனின் இந்திய மனைவியான தெய்வ யானை முருகனை மீண்டும் இந்தியாவுக்கு மீட்டுச் செல்லும் முயற்சி தோல்வியில் முடிய, தாமும் இங்கு வந்து மூவரும் கோயில்களில் கதிர்காமத்திலேயே தங்கிவிட்டனர் என்பதாகப் புதிய ஐதீகம் அமையும்.

இதற்கு இசைவாக்கம் நிகழ்ந்த விடத்தும் ஆலயத் திருவிழா வேளையில் வள்ளியம்மனுக்கே முக்கியத்துவம் தரப்படக் காணலாம். அன்றாட விழாக்கால வீதியுலா வள்ளியம்மன் சந்நிதியை நோக்கியே செல்வ தும் தீர்த்தத்துக்கு முதல் நாள் இரவு முருகன் வள்ளியம்மன் சந்நிதானத்திலே சில பொழுது தங்கி வருகின்றமையும் முருகன் வள்ளி நெருக்க இணைவினை குறியீட்டு ரீதியாய் உணர்த்தி நிற்பன. அதேவேளை அந்த வீதி யுலா தெய்வயானையை கருத்தில் கொள்ளா மையையும் குறிப்பிடத்தக்கது.

இதனையொத்த வழிபாட்டு நடை முறைகளை கதிர்காமத்துடன் தொடர்பான மட்டக்களப்பு தமிழ் ஆலயங்களிலும் காண முடியும். கதிர்காமம் எனப்படும் மண்டூர்க் கந்தசுவாமி கோயில் உகந்தை முருகன் கோவில் செல்வச் சந்நிதி என்பன இந்தவகையில் குறிப்பிடத்தக்கன. உகந்தை முருகன் கோயிலில் வள்ளியம்மனுக்குத் தனி ஆலயம் உள்ளமையும் தெய்வயானையம்மனுக்கு இடம் தரப்படாமையும் இங்கு கவனத்திற் குரியவை.

கதிர்காமத்து வழிபடுபொருள் வழிபாட்டு முறை என்பன ஏனைய இந்து சைவ மரபுகளினின்றும் வேறுபட்டது. இங்கு விழாக்கால ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும் புனித பெட்டியினுள் என்ன உள்ளது என்பது அறியப்படாது உள்ளது. முருகனை உருவகிக்கும் யந்திரத் தகடு ஒன்றே மூலஸ்தானத்துள் உள்ளதென்பது நம்பிக்கை. இதைவிட செஞ்சந்தனக் கட்டையால் செய்யப்பட்டு தங்கத்தகட்டால் பொதிக்கப் பட்ட ஆறுமுருகப் பெருமான் விக்கிரகம் உள்ளதென்ற கருத்தும் முன்வைக்கப்படும். 1922 முதல் பஸ்நாயக்காவாக இருந்த உள்

விட்ட என்பாரும் 1934 வரை இங்கு திருப் பணி ஈடுபாடு கொண்டிருந்த புஞ்சிசிங்கோ என்போரும் கதிர்காம பிரதம குருவும் இதற்கு சாட்சி என்பர் எஸ். எஸ். நாதன் (1965)

இதற்கும் மேலாக இன்று நிலவும் வழிபாட்டு மரபுகளிடை தமிழ் இந்துப் பக்தி வழி வணக்க முறைகளே கதிர்காமத்தில் மேலோங்கி நிற்பதையும் குறிப்பிட வேண்டும்.

விளைவாக, இனத்துவ அரசியல் அலைகளை விஞ்சும் இந்தப் பக்தி அலைக்குள், இன்று அனைத்து இனக்குழுக்களும் சங்கம மாகின்றமை சிறப்பான கவனத்திற்குரியது. தமிழர்களைத் தண்டிக்கவே தீ மிதிப்பு, முள்ளு மிதியடி, தூக்குக் காவடி நேர்த்திகள் என விமர்சிக்கப்பட்டது. (Seeveratne 1938) இன்று பழங்கதையாய்ப் போயுள்ளது. இன்னும் தீ மிப்பு நேர்த்திக் கடன்களின் சடங்குத் தலைமை கைமாறியபோதும் நடைமுறையில் அனைவரும் சம்பந்தப்படுகின்ற நிலைமை இத்தகு சடங்குகள் கிரியைகளை ஏற்றுக் கொள்ளாத பௌத்த மும்மணிகளே ஆசி வழங்க வேண்டிய நிர்ப்பந்தமாகும்.

தொகுத்து நோக்குமிடத்து வேட்டையும் உணவு சேகரித்தலும் இணைந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்கும் முன்னைய ஒரு கூட்டுச் சமூக வாழ்வின் பிரதிபலிப்பாய், கால மாற்றத்தால் கூறுபடும் இனத்துவ வேறுபாடுகளுக்கப்பால் மக்கள் சமயம்என்ற பரந்ததோர் உணர்வு வட்டத்துக்குள் அனைத்துப் பண்பாடுகளையும் இசைவாக்கி தானே ஒரு தனித்துவப் பண்பாட்டுத் தொகு தியாய் கதிர்காமம் விளங்குகின்றதெனலாம்.

## உசாத்துணைகள்

அருணாச்சலம் பொ. 1962. கதிர்காமவேலன் மொழிபெயர்ப்பு க. இளையதம்பி. யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகம்

கணபதிப்பிள்ளை ஈ.மு. 1967 முருகன் கதிர்காமம் சென்னை : அருள் நிலையம் குமாரசுவாமிப்பிள்ளை, வ. 1935 கதிரைமலைப்பள்ளு, யாழ்ப்பாணம்.

சுபாநாதன், குல. 1965. கதிர்காமம் சென்னை : பாரிநிலையம்.

Gombric, Ricahrd & Obesekere, Gananath 1990. Budhism Transformed Religious Change in Sri Lanka. Delhi : Motitial banarsidass Publishers Pvt .Ltd.

Mahadeva, A. 1938. A few facts Relating to the holy Shrine of Lord Skanda at Katargama & for the Restoration of its. An Appeal Management to the Hindus.

Colombo - Vivekananada Sociaty and other Hindu Organization.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்,**
முன்னாள் துணைவேந்தர்,
தலைவர், சமூகவியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# நிர்வாக சபை







# கந்தபுராணம் காட்டும் முருக வடிவங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

கந்தபுராணம் முருக பரத்துவத்தையும். முருக வடிவங்களையும் சிறப்பாகச் சித்திரிக் கும் சைவப் பேரிலக்கியமாக விளங்கு கின்றது. முருக வடிவங்கள் பற்றிய விரிவான விபரங் களைத் தமிழில் கூறும் முதற் பேரிலக்கியம் என்ற சிறப்பு கந்த புராணத்திற்கேயுண்டு. முருக வழிபாட்டிற்கு அடிப்படையாக விளங்கு வது முருக வடிவங்களாகும். இவ்வாய்வு கந்த புராணத்தில் கூறப்படும் முருக வடிவங்களை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

**முன்னுரை**

முருகனின் புன்சிரிப்பில் உலகமே உவக்கும் இருபத்தொராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இன்று நாம் வாழ்ந்து வருவதாக கபில் சுவெலபில் என்னும் அறிஞர் குறிப்பிடு கின்றார். பண்டைக் காலத்தில் குறிஞ்சி நிலக் கடவுளாக வழிபடப்பட்ட முருகனுக்கு இன்று உலகெங்கும் திருக்கோயில் அமைத்து அவற்றுள் முருகனின் பல்வேறு திருவடி வங்களை வைத்து வழிபடும் வழிபாட்டு நிலை காணப்படுகின்றது. முருக வழிபாட்டிற்கு மிகவும் அடிப்படையாக விளங்குவது முருக வடிவங்கள் ஆகும். அவை பற்றிய விபரங்கள் சிவாகமங்கள், குமாரதந்திரம், ஸ்ரீ தத்துவநிதி போன்ற வடமொழி இலக்கியங்களில் மட்டு மன்றி திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம், திருப்புகழ் முதலான தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களுள் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச் சாரியார் என்பவர் இயற்றிய தமிழ்க் கந்த புராணமானது முருகனின் எழில் மிகு திருவடி வங்களையும், முருக பரத்துவத்தையும் சிறப் பாகச் சித்திரிக்கும் சைவப் பேரிலக்கியமாக விளங்குகின்றது. இவ்விலக்கியத்துள் காணப் படும் ஆறு காண்டங்களுள் பத்தாயிரத்தி முன்னூற்றி நாற்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இவ்விலக்கியம் கூறும் முருக வடிவங்களை வெளிப்படுத்துவதும், அவற்றுள் முக்கியமான முருக வடிவங்கள் அமைந்து விளங்கும் முருகன் ஆலயங்களை எடுத்துக் காட்டுவதும் இவ்வாய் வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முருகனின் அழகுத் திருக்கோலம்**

''முருகன்'' என்ற சொல்லுக்கு ''அழகு'' என்பது பொருள். முருகனின் எல்லாத் திருக் கோலங்களும் பேரழகாகவே விளங்குகின்றன. சைவ இலக்கியங்களுள் கந்தபுராணமே முதலில் முருகனின் திருக்கோலத்தினை அழகுக் கொருவரும் ஒவ்வாத தெய்வீகத் திருமேனி வடி வமாகச் சிறந்த முறையில் சித்திரிக்கின்றது. முருகனின் ஒப்பற்ற அழகுத் திருக்கோலத்தினை சூரபன்மன் வாயிலாகவே கச்சியப்ப சிவாச் சாரியார் குறிப்பிடுவது நயக்கத்தக்கதாகும். ஆயிரம் கோடி மன்மத கூட்டத்தினர் அழகு

முழுவதையும் ஒன்றாகத் திரட்டி அதனை ஓர் உருவமாக அமைத்தாலும் அது முருகனின் திருவடி அழகுக்கே ஈடாகாது என்றால். ''முருகனின் திருமேனியின் அழகுக்கு உவமை வகுப்பவர்கள் எவர்'' என்பது சூரபன்மன் வாயிலாகக் கந்தபுராணத்தில்,

"ஆயிரகோடிகாமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந்
- தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்றாது என்றிடில் இணைய
- தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க
- வல்லார்"[1]

என வருகின்றது. மேலும் முருகனின் "திருப்பெரு வடிவத்தில்" காணப்படும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் ஆகிய அனைத்தும் உலகத்தில் எவரிடத்தும் காணமுடியா தெனவும், அதனை அதிசயத்துடன் பலமுறை பார்த்த விடத்தும் தனது கண்கள் ''போதும் என்று தெவிட்டிற்றில்லை'' என்று அமைதி காண முடியவில்லையே, எனவும் சூரபன்மன் கூறுவது முருகன் "என்றும் அதிசயிக்கத்தக்க அழகுத் திருக்கோலமுடையவன்'' என்பதை நன்கு உறுதிப்படுத்துகின்றது.

**முருகனின் குழந்தை வடிவம்**

முருகனின் திருக்கோலங்களுள் அவரது குழந்தைக் கோலம் தனிச் சிறப்புடையது. அதனைப் பாலமுருகன் என வழங்குவர். முருகனை ஒரு காலத்தில் ''பாலன்'' என்றே சூரனும் கருதியதாகக் கந்தபுராணம் குறிப்பிடு கின்றது. முருகன் குழந்தைக் கோலத்துடன் விளங்கும் வனப்பினைக் கந்த புராணம் மிகச் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. அவர் சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக விளங்கிய தையும் அப்போது ஒரு குழந்தை தன் குழந்தைப் பருவத்தில் என் னென்ன செயல்களைச் செய்யுமோ அவ்வாறே முருகனும் குழந்தைக் குரிய செயல்களைச் செய்யும் திருக்கோலங் களுடன் விளங்குவது கந்தபுராணத்தில்,

"ஓர் உருத்தவழ மெல்ல ஓர் உரு தளர்ந்து செல்ல
ஓர் உரு நிற்றல் செல்லாது ஒய்யென எழுந்து வீழ
ஓர் உரு இருக்க பொய்கை ஒருரு உழக்கிச் சூழ
ஓர் உரு தாய்கண் வைக ஒருவனே புரிதல் உற்றான்"[4]

என்றும்,

"ஆடஓர் உருவம் செங்கை அறைய ஓர் உருவம் நின்று
பாட ஓர் உருவம் நாடிப் பார்க்க ஓர்உருவம் ஆங்கண்
ஓட ஓர்உருவம் ஓர்பால் ஒளிக்க ஓர்உருவம் யாண்டும்
தேட ஓர் உருவம் ஆக சிவன் மகன் புரியலுற்றான்"[5]

என்றும்,

துயிலவோ ருருவம் துஞ்சித் துண்ணென எழுந்து
- மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவளவாய்வைத்
தயிலவோ ருருவம் நக்காங்கமரவோ ருருவம் ஆடல்
இயலவோ ருருவம் வாளா இரங்கவோ ருருவம்
- செய்தான்"[6]

என்றும் வருவது இவற்றுக்குச் சிறந்த சான்று களாகும்.

கார்த்திகை மாதர் அறுவரினதும் அன் புக்குக் கட்டுப்பட்டே ஒருவராகிய முருகன் ஆறு குழந்தை வடிவங்களில் விளங்கினார். இது கந்தபுராணத்தில்,

"உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுவோன்
- ஆதலாலே
ஆறுமுகவொருவன் வேறாய் அறு சிறார்
- உருவங் கொண்டான்" என வரும்.

**கந்தன் வடிவம்**

முருக வடிவங்களுள் கந்தன் திருக் கோலம் தனிச் சிறப்புடையது. கந்தபுராண நோக்கில் ''கந்தன்'' என்ற சொல்லுக்கு "ஒன்று சேர்க்கப்பட்டவன்'' என்பது பொருளாகும். இதுவே கந்தபுராணத்தில் ''சேயவன்'' வடிவ மாறுந் திரட்டியொன்றாய்ச் செய்தாய் ஆத னாலே கந்தனாமெனு நாமம் பெற்றான்''8



வருகின்றது. சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைக் கோலத்துடன் விளங்கிய முருகனை உமையம்மை எடுத்து அணைத்து ஒன்று சேர்த்த போதே "கந்தன்" என்ற பெயர் ஏற்பட்டதை மேற்படி பாடற் குறிப்பு புலப்படுத்துகின்றது. ஆறுமுகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்ட முருகன் திருக்கோலமே கந்தன் என்பது கந்தபுராணக் கருத்தாகும். திருமால், பிரமன் என்போரது சிறுமையை நீக்கி இந்திர னுடைய துன்பத்தைப் போக்கி தேவர்களின் சிறையை மீட்டு உலகத்தைக் காத்தருளும் பொருட்டே ஆறு முகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்ட பாலன் வடிவத்தில் கந்தன் என்ற திருக்கோலம் தோற்றம் பெற்ற தாகக் கந்தபுராணம் கூறும். சிவபெருமானே "கந்தன்" என்ற இத்திருக் கோலத்தில் வந்ததாக இந்நூல் மொழிகின்றது"[9]

கந்தன் என்ற திருக்கோலத்தினைக் "கந்து" என்ற பழந்தமிழ்ச் சொல்லுடன் தொடர்புபடுத்தி நோக்க முடியும். "கந்து" என்ற சொல் "அன்" என்ற ஆண்பால் விகுதி பெற்றுக் கந்தன் என்றாயிற்று. கந்தபுராணம் "கந்து" என்ற சொல்லைப் பசுவினங்களைப் பிணிக்கும் தண்டாகக் கூறுகின்றது.[10] அந்த இடத்தில் கந்தன் உறைவதாகவும் அந்நூல் குறிப்பிடுகின்றது. இதன்படி பசுக்களாகிய ஆன்மாக்களைக் கட்டும் நடுத்தறியினையே கந்தபுராணம் "கந்து" என்று குறிப்பிடுகின்ற தெனலாம். "கந்து" என்ற சொல்லுக்குத் தண்டாயுதம் என்று பொருள் கொண்டால், தண்டாயுதம் கொண்டவன் என்று பொருள் வரும். உத்தரகாமிக ஆகமம், வலது கரத்தில் தண்டாயுதத்தை ஏந்தி, இடது கையை இடுப்பில் ஊன்றி தலைமுண்டிதமாய் கோவணம் தரித்த நிலையில் ஒரு முகத்துடன் நிற்கும் திருக்கோலத்தில் விளங்கும் முருகனின் திருக்கோலத்தினையே கந்தன் உருவம் (ஸ்கந்தர்) என்ற பெயரினால் குறிப்பிடு கின்றது."[11] இக் கந்தசுவாமி வடிவமே பழனியி லுள்ள தண்டாயுதபாணியின் திருக்கோல மாகும். அறிவைக் கொடுக்கும் இவ் வடிவத்தை மலைகளில் தாபனம் செய்து வழி பட வேண்டும் என்ற செய்தியையும் ஆகமங் குறிப்பிடுகின்றது.[12] கந்தபுராணத்தில் "தண்டு" என்பது ஓர் ஆற்றல் வாய்ந்த படைக்கலம் எனக் கூறப்பட்டிருப்பதால் தண்டாயுதபாணியை ஞானத்தை மட்டுமன்றி போரில் வெற்றி தரும் வீரத் தெய்வமாகவும் கொள்ளலாம். இவ் வகையில் ஆகமங் கூறும் கந்தனின் தொன்மைத் திருக்கோலத்தினையே பழனித் தண்டாயுத பாணியின் திருவடிவம் சுட்டி நிற்கின்றது எனலாம்.

### புலிங்கமூர்த்தி வடிவம்

முருகனின் திருக்கோலங்களுள் புலிங்க மூர்த்தி தனிச்சிறப்புடையவர். சிவனுடைய நெற்றிக் கண்களிலிருந்து தீப்பொறிகளாகத் தோன்றியருளலால் முருகக் கடவுள் புலிங்க மூர்த்தி எனப் பெயர் பெற்றார். இத் திருக் கோலத்தை சிவதேசகமூர்த்தி எனவும் அழைப் பர். சிவபெருமானின் ஆறு நெற்றிக்கண் களிலிருந்து தீப்பொறிகளாகத் தோன்றும் கந்தபுராணம் சுட்டும் முருகன் திருக்கோலத்தை சுவாமி மலையில் சுவரோவிய மாகக் கண்டு வணங்குவர்.

### பிரமனைச் சிறையிடும் வடிவம்

"ஓம்" எனப்படும் ஓர் எழுத்துண்மையை அறியாதிருந்த பிரமதேவரின் நான்கு தலை களும் குலுங்கும்படி குட்டி, அவரைத் தனது திருப்பாதத்தால் உதைத்துச் சிறையில் அடைத்த செய்தியைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. 13 இத் தெய்வீகக் கதையைச் சுட்டி நிற்பதே பிரமனைச் சிறையிடும் திருக்கோலமாகும்.

### பிரமசாத்தன் வடிவம்

பிரமனைத் தண்டித்த முருகனின் வீரச் செயலைப் புலப்படுத்துவது பிரமசாத்தன் திருக்கோலமாகும். பிரணவத்தின் பொருள்

தெரியா மல் படைப்புத் தொழில் செய்த நான் முகனாகிய பிரமனது ஆணவத்தை அடக்கி, அவனைச் சிறைப்படுத்தி முருகன் தானே படைப்புத் தொழில் செய்த திருக்கோலம் இதுவாகும். ஒரு முகமும், நான்கு கரங்களும் கொண்டு விளங்கும் இத்திருக்கோலம் கந்த புராணத்தில்,

"ஒரு கரம் தனில் கண்டிகை வடம் பரித்து ஒரு தன்
கரதலம் தனில் குண்டிகை தரித்து இரு கரங்கள்
வரதமொடு அபயம் தரப் பரம் பொருள்மகன் ஓர்
திருமுகம் கொடு சதுர்முகன் போல் விதி செய்தான்" [14]

என வரும்.

கச்சியப்ப சிவாச்சாரியார் குலதெய்வ மாக விளங்கிய காஞ்சிபுரம் குமரகோட்டத்து முருகனும் இதே அங்க அமைப்புடன் விளங்கு வதனை அவர்,

"கொண்டலை யளக்கு நொச்சிக் குமரகோட்டத்துச்
- செவ்வேள்
கண்டிகை வடமுந் தூநீர்க்கரமுங் கரத்திலேந்திப்
பண்டையிலயனை மாற்றிப் படைத்தருள்
- வேடந்தாங்கி
அண்டர்க ளெவரும் போற்ற வருள் புரிந்தமர்ந்
-தானன்றே"[15]

எனக் கூறுவர். சென்னைக்கு அருகிலுள்ள வள சரவாக்கத்திலும், பூவிருந்தவல்லிக்கு அரு கிலுள்ள வாயிலா நல்லூரிலும் முருகனின் பிரம சாத்தன் திருக்கோலங்கள் காணப்படுகின்றன. சென்னையில் வளசரவாக்கத்தில் மிகப் பெரிய பிரமசாத்தாவின் திருக்கோலம் உள்ளது. சோழர் காலத்தைச் சேர்ந்த பிரமசாத்தாவின் முருகவடிவம் பூவிருந்தவல்லிக்கு அருகில் உள்ள வாயிலா நல்லூரில் காணப்படுகின்றது.

**பிரணவ வடிவம்**

ஆறுமுகனாகிய முருகன் பிரணவ வடிவமாக திருவேரகம் (சுவாமிமலை) என்னும் திருத்தலத்தில் தலைமை பொருந்தி எழுந்தருளியிருக்கின்றார் என்பதைக் கந்த புராணம் 'தாரகத் துருவமாம் தலைமை யெய்திய ஏரகத் தறுமுகன்' எனக் கூறும். முருகன் பிரணவ வடிவம் உடையவர் என்பதை வீரவாகு தேவர் சூரபன்மனுக்கு 'ஆதியாகிய குலையும்... குமர வேள் பொருவிலாவுருவம்' எனக் கூறுதலாலறியலாம். 'ஓம்' என்ற பிரணவமாகிய குடிலையே முருகனின் திரு முகங்களில் ஒன்றாகும். இதனையே கந்த புராணம் "ஓமெனப்படும் குடிலையே ஒப்பிலா முருகன் மாமுகத்துளொன்றாம்"[17] என்றும், 'முகத்திலொன்றதா அவ்வெழுத்துடையதோர் முருகன்'[18] என்றும் மொழிதலாலறியலாம். ''ஓம்'' என்பது அகாரம். உகாரம், மகாரம் என்ற மூன்றும் சேர்ந்ததாகும். "உயிர்" அகாரம் என்றும், ''இறை'' உகாரமென்றும், ''மலம்'' மகாரம் என்றும் திருமந்திரம் கூறுகின்றது. ஓங்காரத்தில் இறையும் சக்தியும், தளையாகிய ஆணவமும், எழில் மாயையும், கன்மமும், ஆன்மாவும் பொருந்தி நிற்கும் என்று உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுவர். இவ்வாறு சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள், ஐந்தெழுத்து மந்திரம் என்பவற்றின் விளக்கமாகவே முருகனின் பிரணவ வடிவம் விளங்குகின்ற தெனலாம்.

**சோமாஸ்கந்தர் வடிவம்**

சிவபெருமானுக்கும் உமைக்கும் நடுவே முருகன் காணப்படுவது சோமாஸ்கந்தர் திருக்கோலமாகும். இக்கோலத்தில் முருகன் அமர்ந்த நிலையில் அல்லது நின்ற நிலையில் காணப்படுவர். முருகனின் திருவுருவம் உமை யின் மடிமீது அமர்ந்திருக்கும் நிலையிலும் சித்திரிக்கலாம் என்பதற்கும் விதியுண்டு. பல்லவர் காலம் தொடக்கம் கந்தபுராண காலம் வரையிலும், அதன் பின்னரும் இத்திருக்கோலத்தைத் தமிழகக் கோயில்களில் சிற்பமாகக் கண்டு மகிழலாம். உமைக்கும் சிவனுக்கும் நடுவில் முருகன் விளங்குவதைப் பகலுக்கும், இரவுக்கும் நடுவில் தோன்றும்

மாலைப் பொழுதோடு கச்சியப்ப சிவாச் சாரியர்,

"ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் றனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலூறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலையானதொன்று அழிவின்றி வைகுமாறெரக்கும்"[19]

என்று குறிப்பிடுவர்.

திருப்பரங்குன்றத்தில் முருகனது திரு மணத்தைக் காணவந்த சிவனும் உமையும் முருகனைத் தம் மடிமீது வைத்துத் தண்ணளி புரிந்தார் என்ற கந்தபுராணச் செய்தியும்[20] சோமாஸ்கந்த வடிவத்தை நினைவுபடுத்து கின்றது. முகுந்தன் என்பவன் சோமாஸ்கந்த திருக்கோலத்தைத் திருவாரூர், திருநாகைக் காரோணம், திருநள்ளாறு முதலிய ஏழு இடங்களில் நிறுவி வழிபட்டதையும் கந்தபுராணம் கூறும்.[21] இத்திருக்கோலமானது கணவன் மனைவி, மகன் என்ற தமிழரின் வாழ் வியல் கொள்கைக்கு ஓர் உரைகல் எனலாம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலுள்ள தியாகராஜர் வடிவம் சோமாஸ்கந்தரின் வடிவ மாகவே விளங்குகின்றது. இந்த உண்மை பலருக்குத் தெரியாது.

**மயிலூர்திப் பெருமான் வடிவம்**

முருகன் மயில்மீதமர்ந்தருளும் திருக் கோலத்தை மயிலூர்திப் பெருமான், மயில்வாகனர், சிகிவாகனர், மயிலூர்திக் கோமான் ஆகிய பெயர்களால் வழங்குவர். இதனைக் கந்தபுராணம் ''மயிலூர்பரன்' எனக் கூறுகின்றது இந்திரனும்[23] சூரனும் [24] மயில் உருக்கொண்டு முருகனைச் சுமக்கும் திருக் கோலச் சிறப்பை முதன் முதலாகக் கந்த புராணமே குறிப்பிடுகின்றது. இடியேறு போல கூவியார்ப்பரிக்கும் இணையற்ற இந்திரனாகிய மயில் மீது (இந்திரமயில்) முருகன் விளங்கும் திருக்கோலத்தைக் கந்தபுராணம் குறிப்பிடு கின்றது.26 சூரனாகிய மயில் மீது முருகன் செல்லும் திருக்கோலக் காட்சி ''அயலினை யுடைய செவ்வேள் மரகதத்தழகு சான்ற மயிலிடை வைகியூர்த்தான்'' என வருகின்றது. ''முருகக் கடவுளை வாழ்க'' என வாழ்த்தும் கந்தபுராணம் அதே பாடலில் முருகனின் வாகனமாகிய மயிலையும், "செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க'' என வாழ்த்துவது மயில் வாகனராக விளங்கும் முருகனின் திருக்கோலத் தனிச் சிறப்பைச் சுட்டி நிற்கின்றது. தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் மயிலூர்திப் பெரு மானின் திருக்கோலங்களே மிகுதியாகவுள் ளன. முருகன் மயிலின் மீது ஊர்ந்து செல்வது போன்று, எண்கண் முருகன் கோயிலின் மூ லவர் விளங்குகின்றார். அங்கு முருகனைச் சுமக்கும் மயில் ஊர்ந்து செல்வதைக் குறிக்கும் விதத்தில் ஒரு காலைத் தூக்கி நடப்பது போன்று விளங்குவது கண்டு மகிழ்தற்குரியது.

**களிற்றூர்திப் பெருமான் வடிவம்**

முருகன் யானையை வாகனமாகக் கொண்ட திருக்கோலம் இதுவாகும். இத்திருக் கோலத்தினை கஜவாகனர் எனவும், கஜாரூடர் எனவும் அழைப்பர். முருகன் யானை வாகனத்தின் கண்ணே எழுந்தருளும் திருக் கோலம் கந்தபுராணத்தில், ''கரியிற் செலும்'[27] என்றும், ''பிணிமுக முயர்த்து நின்ற பெருந்தகை''[28] என்றும் எனவும் வரும். முருகக் கடவுளின் யானைக்குப் ''பிணிமுகம்'' என்று பெயர். "கரியிற் செலும்'' என்ற குறிப்பு முருகன் ஆண் யானையிற் செல்வதைக் குறிக்கும். இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் என்ற யானை முருகனுக்கு வாகனமாக விளங் கியதைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. யானை முகமுடைய தாரகாசுரனை முருகன் கொன்றதனை ஒட்டியும் முருகனுக்கு யானை வாகனம் திருக்கோலம் ஏற்பட்டிருக்கலாம். தஞ்சைப் பெருங்கோயிலின் கேரளாந்தகன் திருவாயிற் கோபுரத்தில் களிற்றூர்திப் பெரு மான் திருக்கோலம் அழகுற அமைந்துள்ளது.

முருகன் களிற்றூர்திப் பெருமான் என்பதையே சுவாமிமலை (திருவேரகம்) முருகனின் கொடி மரத்திற்கு முன்பாக மூலவரை நோக்கி நிற்கும் நிலையில் உள்ள யானை வடிவம் புலப்படுத்து கின்றது. திருத்தணிகை முருகன் கோயில், திருப்போரூர் முருகன் கோயில் ஆகிய திருத் தலங்களிலும் உள்ள இத்தகைய யானைச் சிற்பங்கள் முருகனின் களிற்றூர்திப் பெருமானின் திருக்கோலததை நினைவுபடுத்து கின்றன.

**ஆட்டு வாகனர் வடிவம்**

முருகன் ஆட்டு வாகனத்தில் காட்சி தரும் திருக்கோலம் "அஜாரூடர்" எனக் கூறப் படும். இது முருகனின் வீரத் திருக்கோல மாகும். நாரத முனிவர் செய்த வேள்வியிலிருந்து தோன்றிய ஆட்டுக்கடா அங்குள்ள அனை வரையும் அழிக்கத் தொடங்கிய போது முருகன் வீரவாகு தேவரை அனுப்பி அந்த ஆட்டுக்கடாவைப் பிடித்து வரச்செய்து அதன் மீது அமர்ந்திருக்கும் வரலாற்றை விபரிப்பதாக கந்தபுராணத்தில் "தகரேறு படலம்" என்று ஒரு தனிப்படலமே காணப்படுகின்றது. இத் தெய்வீக வரலாற்றையும், முருகன் ஆட்டு வாகனத்தில் செல்வதான திருக்கோலத் தினையும் கச்சியப்ப சிவாச்சாரியர்,

"நவையில் சீர் முனிவர்தேவர் நயப்பர் நாரதன்
- என்று உள்ளோன்

புவிதனில் வந்து முற்றப் புரிந்தனன் முன்னர்
- வேள்வி

அவர் புரிதவத்தின் நீரால் அன்று தொட்டு அமல
- மூர்த்தி

உவகையால் அனைய மேடம் ஊர்ந்தனன்
- ஊர்தியாக" [29]

எனக் குறிப்பிடுகிறார். மேடம், தகர் என்ற சொற்களுக்கு "ஆடு" என்பது பொருளாகும். முருகன் ஆட்டுவாகனத்தில் ஒரு முகமும் நான்கு கைகளுடனும் விளங்கும் திருக்கோலத்தை திருப்போரூர்க் கந்தசுவாமி கோயிலில் கண்டு வணங்கலாம். திருச்செந்தூர், சிக்கல் முதலிய திருக்கோயில்களில் முருகன், கந்தசஷ்டிப் பெருவிழாவில் ஆட்டு வாகனத்தில் பவனி வரும் திருக்கோலத்தைக் காணலாம். ஈழத்தில் உள்ள நல்லூர்க் கந்தன் ஆலயம் மற்றும் பிரதான முருகன் ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளுவது குறிப்பிடத்தக்கது.

**தாரகாந்தகர் வடிவம்**

முருகன் தாரகாசுரனைக் கொன்ற வரலாற்றைக் கந்தபுராணத்திலுள்ள தாரகன் வதைப்படலம் விளக்கி நிற்கின்றது. முருகன் தனது வேற்படையினை ஏவி சூரனின் தம்பியும் யானை முகத்தவனுமாகிய தாரகாசுரனையும், கிரவுஞ்ச மலையினையும் அழித்து. அம் மலையுள் மயங்கிக் கிடந்த வீரவாகு தேவரை யும் மற்றும் ஏனைய படைவீரர்களையும் காப்பாற்றிய அருட் செயலைப் புலப்படுத்தி நிற்பதே முருகனின் தாரகாந்தகர் திருக் கோலமாகும். முருகன் தனது வேலை விடுத்து தாரகாசுரனையும், கிரவுஞ்ச மலையினையும் அழித்த இந்தச் செயல் கந்த புராணத்தில்,

"தாரகன் என்பதோர் பேரோனைச் சஞ்சல முறுகிர
- வுஞ்சத்தை

ஓரிறை செல்லுமுன் உடல்கீறி உள்ளுயி ருண்டு
- புறத்தேகிப்

பாரிடர் தம்மை இலக்கத்தொன் பதின்மர்களாக
-உரைக்கின்ற

வீரரை மீட்டி வண் வருகென்றவேற் படை தன்னை
- விடுத்திட்டான்" [30]

என வருகின்றது.

இங்கு வேற்படையை மீண்டும் வருக என முருகன் கூறுவது, முருகன் கரத்திலிருக்கும் வேற்படையானது அறிவுடைய ஓர் உயிர்ப் பொருளே என்பதை உணர்த்தி நிற்கின்றது.

**கிரவுஞ்ச பேதனர் வடிவம்**

கிரவுஞ்சம் என்றால் "அன்றிற் பறவை" எனப்படும். பேதனர் என்பதற்கு "பிளந்தவர்"



என்பது பொருளாகும். இவ்வகையில் அன்றிற் பறவை வடிவமாகிய மாய மலையைப் பிளந்த முருகனின் திருக்கோலமே கிரவுஞ்ச பேதனர் திருக்கோலம் எனப்படும். கந்தபுராணத்தின் தாரகன் வதைப்படலம் இத்திருவடிவம் பன்றியதான தெய்வீகக் கதையினைக் குறிப் பிடுகின்றது. ''அறநெறி தவறிய கிரஞ்ச னென்னும் அசுரன் அகத்திய முனிவரின் சாபத்தால் மலை வடிவாக விளங்கியதாகவும், அம்மலையே தாரகாசுரனின் இருப்பிடமாகக் காணப்பட்டதாகவும் கந்தபுராணம் கூறும். முருகன் வீரவாகு தேவரை நோக்கி தாரகா சுரனை அழித்து வருமாறு கட்டளையிட தாரகாசுரன் தனது மாயங்களுக்கு இருப்பிட மான கிரவுஞ்ச மலைக்குள் மறைந்து கொண் டார். அம்மலைக்குச் சென்ற வீரவாகு தேவரும் பிறரும் அம்மலைக்குள் மதி மயங்கிப் போயினர். இதனை நாரதர் மூலம் அறிந்த முருகன் தனது வேற்படையினை ஏவி தார காசுரனைக் கொன்று கிரவுஞ்ச மலையினைப் பிளந்து வீரவாகு தேவரையும் ஏனையோரை யும் விடுவித்த வீரத் திருக் கோலத்தை தமிழில் கந்தபுராணமே விரிவாகக் குறிப்பிடுகின்றது. இத் திருக்கோலத்தின் தொன்மத்தை பழந்தமிழ் இலக்கியமான குறுந் தொகையின் கடவுள் வாழ்த்து "குன்றின் நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடு வேல்" எனக் கூறுகின்றது.

**வேல் வடிவம்**

முருகனின் திருக்கோலங்களுள் வேல் வடிவமே மிகவும் தொன்மையானதாகும். வேல்தான் முருகனின் உண்மையான உருவ மாகும். முருகனின் அருவுருவத் திருக்கோலமே வேல் எனலாம். வேல் இலை வடிவம் போன்றதென்பதை ''இலைகுலாம் அயில்''[32] எனக் கந்தபுராணம் கூறும். முருகனாகிய கந்தனும் வேலும் ஒன்றே என்பதை விளக்கிக் கூறும் முதற்றமிழ் நூல் கந்தபுராணமாகும். இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியார்,

"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த
- பண்பால்
எந்தை கண்ணின்றும் வந்த இயற்கை யாற் சக்தி
- யாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற்
- பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை
- நீத்தோம்"[33]

என மொழிதலாலறியலாம்.

வேலினை இறைவனாகவும், கடவுளாகவும், தெய்வமாகவும் காட்டும் தனிச் சிறப்பு தமிழ்க் கந்தபுராணத்திற்கேயுண்டு. இதனையே, "எண்ணரும் படைகட்கெல்லாம் இறைவ"[34] ''வேற்கடவுள்''[35], ''கடவுட் செவ்வேல்''[36], 'தெய்வச் செவ்வேல்'[37], 'உடம்பிடித் தெய்வம்'[38] என்ற கந்தபுராணக் குறிப்புக்கள் உணர்த்தி நிற்கின்றன.

முருகனைத் திருவுருவத்தில் அமைத்து வழிபடும் மரபிற்கு முன்னர் ஆலயத்துள் வேல் வைத்து வழிபட்டனர். இப்பண்டைய வழக்கத்தை 'வேற் கோட்டம்' என்று சிலப்பதிகாரச் செய்தி உறுதிப்படுத்துகின்றது. ஈழத்திலுள்ள யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தன் ஆலயம் உலகிலுள்ள வேற்கோட்டங்களுள் மிகப் பெரியதும் வரலாற்றுச் சிறப்புடைய வேற்கோயிலாகும்.

**சிவனிடமிருந்து வேல் வாங்கும் முருகன் வடிவம்**

முருகன் ஒரு போர்த் தெய்வம். இத் திருக்கோலத்தில் அவரது வலது கையில் விளங்கும் "வேல்" முக்கியமான ஒரு படைக் கலமாகும். இதனை முருகனுக்கு உமை கொடுத்ததாக "கல்லாடம்" என்ற நூல் குறிப் பிடுகின்றது. ஆனால் சிவனிடமிருந்தே முருகன் "தன்னிச்சுடர்வேல்" பெற்றார் என்ப தைக் கந்தபுராணம் "எப்படைக்கும் நாயக மாவதொரு தனிச்சுடர் வேல் நல்கியே மதலைக் கைக் கொடுத்தான்'' எனக் கூறு கின்றது. இவ்வகையில் சிவனிடமிருந்து வேல் வாங்கும்

முருகன் திருக்கோலம் தோன்றுவதற்கு கந்தபுராணம் அடிப்படையாக அமைகின்றது.

**ஆறுமுகங்களுடன் கூடிய வேல் வடிவம்**

ஆறுமுகங்களுடன் கூடிய முருகனின் வேல் வடிவத்தினையே கந்தபுராணம் "வேல் ஆறுமுகன்" எனக் குறிப்பிடுகின்றது. காஞ்சிபுரம் குமரக்கோட்டத்து முருகன் கோயிலில் ஆறுமுகங்களுடன் கூடிய வேல் இன்றும் காணப்படுகின்றது.

**சிவன் வழங்கும் படைக்கலங்களைப் பெறும் முருகன் வடிவம்**

சூரபன்மன் முதலிய அசுரர்களை அழித்து தேவர்கள் படும்துன்பங்களை நீக்குதற் பொருட்டு சிவன் முருகனுக்குப் பன்னிரு படைக் கலங்களை வழங்கியதாகக் கந்த புராணம் கூறுகின்றது. பதினொரு ருத்திரர் களையும் பதினொரு படைக்கலங்களாக்கி முருகனின் பதினொரு கரங்களில் சிவன் கொடுத்ததாகவும்[42] மற்றும் வேலாயுதத்தையும் சிவனே முருகன் கையில் கொடுத்ததாகவும்[43] கந்தபுராணம் கூறும். தோமரம், கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தாமரைப்பூ, தண்டு, வில், மழு, வேல் என்பன சிவனால் முருகனுக்கு வழங்கப்பட்ட படைக் கலங்களாகும். இது கந்த புராணத்தில்,

"பொன்றிதழ் சடிலத் தண்ணல் தன் பெயரும்
- பொருவிலா உருவமுந் தொன்னாள்

நன்று பெற்றுடைய உருத்திரகணத் தோர்
- நவிலருந் தோமரங் கொடி வாள்

வன்றிறற் குலிசம் பகழியங் குசமும் மணிமலர்ப்
- பங்கயந்தண்டம்

வென்றிவின் மழுவுமாகி வீற்றிருந்தார் விறல்
- மிகும் ஆறுமுகன் கரத்தில்" [44]

என்றும்,

"............... எப்படைக்கும்

நாயகமாவதொரு தனிச்சுடர்வேல் நல்கியே மதலைகைக் கொடுத்தான்" [45]

என்றும் வருவதால் அறியப்படும்.

மேலே கூறப்பட்ட படைக் கலங்களுள் கொடி, மணி, பங்கயம் என்பன அவ்வவ் வடிவுடையனவாகச் செய்யப்பட்ட ஆயுதங்க ளெனலாம். உருத்திரர்களே முருகனின் ஆயுதங் களாயினர் எனக் கந்தபுராணம் கூறுவதால் முருகனின் படைக்கலங்கள் அறிவுடைய உயிர்ப் பொருட்களே என்பது தெளிவு. வேலும் அறிவுடைய உயிர்ப்பொருள் என்பதைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. மேலும் திருமுருகாற்றுப்படை காட்டும் முருகனின் திருக்கரங்களிலும் மணி, வேல், பங்கயம் ஆகியவை விளங்குவது குறிப்பிடத்தக்கது.

**சூரபன்மனோடு போர் புரியும் முருக வடிவம்**

முருகன் சூரபன்மனோடு போர் புரியும் பொருட்டு மனவேகக் குதிரை பூண்ட திருத்தேரில் அமர்ந்து கொண்டு மழு, குலிசம், சூலம், சக்திவேல், வாள், பரிசை, சக்கரம், தண்டாயுதம், எழுப்படை, வில், அம்பு, கை வேல் ஆகிய பன்னிரண்டு படைக்கலங்களை தனது பன்னிரண்டு திருக்கைகளிலும் ஏந்திக் கொண்ட திருக்கோலத்தைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. இப்பன்னிரெண்டு போர்க் கலங்களைக் கையில் கொண்டு விளங்கும் முருகனைக் கச்சியப்ப சிவாச்சாரியர்,

"புத்தலர் நீபத் தாரான் புகர்மழுக் குலிசஞ் சூலஞ்
சக்திவாள் பலகை நேமி தண்டெழுச் சிலை கோல்
- கைவேல்

கைத்தலங்கொண்டான்" [46]

என மொழிவர்.

**உருத்திர சருமனாக விளங்கும் முருக வடிவம்**

முருகன் உருத்திரசருமனாக விளங்கும் திருக்கோலத்தில் அவரது திருக்கரங்களில் கணிச்சி, சூலம், ஆழி, தண்டு, எழு என்ற ஐந்து படைக்கலங்கள் காணப்பெறும். இது கந்த புராணத்தில்,

"திருத்தமிழ் மதுரை தன்னிற் சிவன்பொருள்
நிறுக்குமாற்றால்

உருத்திர சருமனாகி உற்றிடு நிமலன் வெம்போர்



உருத்திகொள் கணிச்சி சூலம் ஆழி தண்டெழுவ

- தாகுங் கரத்தினிற் படைகள்...." [47]

என வரும்.

### சயந்தன் கனவிற் கண்ட முருக வடிவம்

இந்திரன் மகனாகிய சயந்தன் முருகனின் திருக்கோலத்தைக் கனவிற் கண்டு தொழுத தைக் கந்தபுராணத்திலுள்ள சயந்தன் கனவுகாண் படலம் குறிப்பிடுகிறது. சயந்தன் கண்ட கனவில் ஆறுமுகங்களுடனும், பன்னிரெண்டு கரங்களுடனும் விளங்கும் முருகனின் வலது பக்கக் கரங்களில் கொடி, வச்சிராயுதம். அங்குசம், பாணம், வேல், அபயம் என்பனவும் இடது பக்கக் கைகளில் வரதம், தாமரை, மலர், மணி, தண்டாயுதம், வில் என்பனவும் விளங்கின. இதனைக் கச்சியப்பசிவாச்சாரியர்,

"வீறுகேதனம் வச்சிரம் மங்குசம் வீசிக

மாறிலாதவே லபயமே வலமிடம் வரத

மேறு பங்கய மணி மழுத் தண்டு வில்லிசைந்த

வாறிரண்டுகை யறுமுகங் கொண்டு

வேளடைந்தான்" [48]

### முருகனின் விசுவரூப வடிவம்

முருகன் தனது திருக்கோலத்தில் அண்டத்திலுள்ள அனைத்தையும் காட்டி நிற் பதே அவரின் விசுவ ரூபத்திருக்கோலம் எனப் படும். முருகன் இத்திருப்பெரு வடிவத்தை சூரபன்மனுக்கும்[49] இந்திரன் முதலான தேவர்களுக்கும்[50] காட்டியதாகக் கந்த புராணத்தால் அறிய முடிகின்றது. இத்திருக் கோலத்தில் முருகனின் திருமேனியில் எட்டுத் திக்குகள், பதினான்கு உலகங்கள், எட்டு மலைகள், ஏழு கடல்கள் போன்ற எல்லாப் பொருட்களும் விளங்குவதைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.[51] அனைத்துப் பிரபஞ்சப் பொருட்களையும் உள்ளடக்கிய முருகனின் இத்திருக்கோலத்தை "இறுதியு முதலுமில்லா வில் பெருவடிவம்" எனக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

### விருத்தர் வேட வடிவம்

முருகன் "மானுட வடிவம்" கொள்பவர் என்பது கந்தபுராணத்தில், "தொல்லை மானுட நல்வடிவம் கொடு நின்றான்" என வருகின்றது சைவநெறி வாழும் சந்நியாசி வடிவம் கொண்ட வயோதிபக் கோலத்தில் வேடர் முன் முருகன் காட்சியளித்தாரென்பது கந்தபுராணத்தில், "குமரேசன் நாடுபுகழ் சைவநெறி நற்றவவிருத்த வேடமது கொண்டு வரும் வேடனெதிர் சென்றான்" என வரும். விருத்தர் என்பதற்கு வயோதிபர் என்பது பொருளாகும்.

### வேட்டுவத் திருக்கோல வடிவம்

முருகன் வள்ளி நாயகிக்குப் பேரருள் செய்யக் கருதி எடுத்த மானுட வடிவமே வேட்டுவத் திருக்கோலமாகும். இத் திருக் கோலம் கந்தபுராணத்தில்,

"காலிற் கட்டிய கழலன் கச்சினன்

மாலைத் தோளினன் வரிவில் வாளியன்

நீலக் குஞ்சியன் நெடியன் வேட்டுவக்

கோலத்தைக் கொடு குரமன் தோன்றினான்" [54]

என வருகின்றது. சுவாமிமலை முருகன் கோயிலில் வேட்டுவக் கோலத்துடன் விளங் கும் முருகனின் உற்சவ மூர்த்தமும், முருகனின் வேட்டுவ ஓவியக் கோலமும் காணப்படு கின்றன. அங்கு பங்குனி மாதத்தில் நிகழ்த்தப் படும் "வேட ரூபக் காட்சி" என்னும் திருவிழா இத்திருக்கோலத்தினை நன்கு நினைவு படுத்தி நிற்கின்றது.

### வேங்கை மரவுருவமாகி நிற்கும் முருக வடிவம்

வள்ளி நாயகியின் தந்தையாகிய நம்பி யரசன் வருதலைக் கண்டதும். வள்ளி நாயகி யின் முன்நின்ற முருகன் ஒரு வேங்கை மரத்தின் வடிவமாய் மாறினார் எனவும், அந்நிலையில் வேதங்கள் வேங்கை மரத்தின் அடியாகிய முதல் ஆகவும். சிவாகமங்கள் அவ்வேங்கை மரத்தின் நடுப் பகுதியாகவும்,

பலவாகிய கலைகள் அனைத்தும் பக்கங்களிற் பொருந்திய சுவடுகளாகவும் விளங்கின என்பது கந்தபுராணத்தில்,

"ஆங்கது காலை தன்னி னடிமுதல் மறைகளாக
வோங்கிய நடுவ ணெல்லா முயர்சிவ நூலதாகப்
பாங்கமர் சுவடு முற்றும் பல்கலையாகத் தானோர்
வேங்கை யினுருவமாகி வேற்படை வீரனின்றான்."

என வரும்.

இவ்வாறு வேங்கை மரவுருவமாகி நின்ற முருகன் திருக்கோலத்தில் "பலகலை யாகமவேதம் யாவையிலுங் கருத்து பதி, பசு, பாசம் தெரித்தல்" என்ற சைவசித்தாந்தக் கருத்துப் பொதிந்துள்ளதெனலாம். வேங்கை மரவுருவமாகி நிற்கும் முருகனின் அதிசயமான சிற்பவடிவத்தை தஞ்சைப் பெருவுடையார் கோயில் வளாகத்துள் அமைந்துள்ள முருகன் கோயிற் பின்புறச் சுவரில் மட்டுமே கண்டு மகிழலாம்.

**வள்ளிநாயகி கண்ட முருகன் திருக்கோலம்**

முருகன் வள்ளி நாயகிக்குப் பன்னி ரெண்டு புயங்களும் ஆறு திருமுகங்களும், கூர்மை பொருந்திய வேலாயுதமும், குலிசப் படையும், ஏனைய படைக்கலங்களும், பொன் போலும் மயிலுமாகத் தன் திருக்கோலத்தைக் காட்டியருளியமை கந்தபுராணத்தில்,

"முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்
கொன்னார்வை வேலுங் குலிசமுமே னைப்படையும்
பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்
மின்னாள் கண்காண வெளிநின் றனன் விறலோன்" [56]

என வருகின்றது.

**தெய்வயானையைத் திருமணம் செய்யும் முருக வடிவம்**

முருகன் தெய்வயானையைத் திருமணம் செய்யக் கொண்ட திருக்கோலத்தின் தெய்வீக வரலாற்றைக் கந்தபுராணத்திலுள்ள தெய்வ யானை யம்மை திருமணப் படலம்[57] நன்கு விளக்குகின்றது. இந்திரன் தனது மகளாகிய தெய்வ யானையை முருகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தற் பொருட்டு முருகனின் திருக்கரத்தில் தெய்வயானையின் திருக் கரத்தைத் தூக்கி வைத்து நீரை வார்த்து கன்னிகாதானம் செய்வதையும் அதனை முரு கன் ஏற்று அருள் புரிதலும் கந்தபுராணத்தால் அறியமுடிகின்றது.[58] இத்திருமணத் திருக் கோலக் காட்சியை திருப்பரங்குன்றத்து முருகன் கோயில் முன் மண்டபத்திலுள்ள தூணில் சிற்பமாகக் கண்டு மகிழலாம்.

**வள்ளி தெய்வயானை சமேத முருக வடிவம்**

முருகன், வள்ளி தெய்வயானை என்ற இரு மனைவியர்களுடன் சமேதரராக வீற்றிருக் கும் திருக்கோலத்தினைக் கந்த புராணம் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. வள்ளி தெய்வ யானை சமேதராக முருகன் விளங்குவது கங்கை யும் யமுனையும் கடலில் கலத்தல் போன்ற தாகவும், ஞாயிறும் திங்களும் சேர்ந்திருக்கும் போது அவற்றில் தோன்றும் கனலிப்புத் தேன் போன்றதாகவும்,[59] சிவபெருமானுடைய முகத்தில் உள்ள முக்கண்கள் போன்றதென்றும்[60] கந்தபுராணத்தால் அறிய முடிகின்றது. மேலும் முருகனை ஒரு மரமாகவும், கிரியா சக்தி, ஞானா சக்திகளாக வள்ளியையும் தெய்வ யானையையும் அம் மரத்தின் கிளைகளாகவும் கச்சியப்ப சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.[61]

**தெய்வயானை வள்ளி சமேத வேல்வடிவம்**

முருக வடிவங்களுள் "வேற்கோலம்" தனிச்சிறப்புடையது. வேலின் இரு மருங்கிலும் தெய்வயானையம்மையும் வள்ளியும் விளங்கு வது சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் அக்கினி விளங்குவது போலத் திகழுமென கச்சியப்ப சிவாச்சாரியார் மொழிவர். இது கந்த புராணத்தில்,

"கற்றையங்கதிர் வெண்டிங்கள் இருந்துழிக்
- கனலிப்புத்தே
உற்றிடு தன்மைத் தென்ன உம்பர்கோன் உதவுமானும்



மற்றைவில் வேடர் மானும் வழிபடல் புரிந்துபோற்ற
வெற்றியந் தனிவே லண்ணல் வீற்றிருந்
- தருளினானே" [62]

என வருகின்றது.

இத்திருக்கோலத்தினைப் புலப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தன் ஆலயக் கருவறைக்குள் உள்ள மூல மூர்த்தியாக விளங்கும் வேலின் இரு மருங்கிலும் தெய்வயானையம்மையும் வள்ளியும் காணப்படுகின்றனர்.

**நடன முருக வடிவம்**

முருகன் மணியை அடித்தும், வேய்ங் குழல் ஊதியும், கொம்பு வாத்தியம் ஒலித்தும். வீணைகள் இசைத்தும் சிறு வாத்தியங்களை முழங்கியும், கீதம் பாடியும் களிப்புடன் நடனம் புரியும் திருக்கோலம் கந்த புராணத்தில்,

"பாடின்படு மணியார்த்திடும் பணை மென்சூழல்
இசைக்கும்
கோடங்கொலி புரிவித்திடும் குரல் வீணைகள் பயிலும்
ஈடொன்றிய சிறுபல்லிய மெறியும் மெவரெவரும்
நாடும்படி பாடுங்களி நடனஞ் செயும் முருகன்" [63]

என வரும் முருகனின் நடனத் திருக்கோலத்தை சேயூர் திருக்கோயிலிலும், திருப்போரூர் கோயில் மண்டபத் தூணிலும் காணலாம். சென்னை அருங்காட்சியகத்திலும் நடன முருகன் திருக்கோலத்தைக் காண முடியும்.

**மாவடிக் கந்தர் வடிவம்**

ஆறு முகங்களும் பன்னிரு புயங்களும் கொண்டு விளங்கும் காஞ்சியிலுள்ள மாவடிக் கந்தனின் திருக்கோலம் கந்தபுராணத்தில்,

"மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி" [64]

என வருகின்றது.

இன்றும் காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயிலிலுள்ள மாமரத்திற்கு இடதுபுறம் காணப்படும் மாவடிக் கந்தர் எனப்படும் சிறு கோயிலுக்குள் மேற்படி பாடல் புலப்படுத்தும் திருக்கோலத்துடன் விளங்கும் மாவடிக்கந்தன் திருக்கோலத்தைக் கண்டு வணங்கலாம்.

**சிவனை வணங்கும் முருக வடிவம்**

சிவனை முருகன் வணங்குவதற்கான செய்தி கந்தபுராணத்தில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளன. தாணு எனப்படும் சிவ லிங்கத்தை தாபித்து பல வகையான உபசாரங் களுடன் முருகன் சிவனை வணங்கியது பற்றியும், சிவாகம விதிப்படி எக்காலத்தும் நிலைத்திருக்கும்படி உருவாக்கப்பட்ட சிவ வடிவத்திற்குப் பல்வேறு உபசாரங்களை அளித்து முருகன் வழிபடுதல் குறித்தும். முருகன் தெய்வயானை என்போரது திருமணத்தைக் காண வந்த சிவனதும் உமையினதும் திருவடிகளை முருகனும் தெய்வயானையும் தொழுதல் குறித்தும் கந்தபுராணத்தால் அறிய முடிகின்றது.[65] சிவனை முருகன் வணங்குவதற்கான சிற்பங்களின் உருவாக்கத்திற்கு மேற்படி கந்தபுராணக் குறிப்புக்கள் அடிப்படையெனலாம். தமிழகத்திலுள்ள பிரதான முருகன் கோயில்களில் சிவலிங்க வடிவமும் அமைந்து விளங்குவதற்கு கந்தபுராணத்தின் தாக்கமும் காரணமெனலாம்.

**முருகனின் பிற திருவடிவங்கள்**

முருகனின் திருக்கோலத்தினை கும்பம், அக்கினி, திருவுருவம் என்ற மூன்று நிலைகளில் குமார தந்திர நெறிப்படி ஸ்தாபித்து வழிபடும் செய்தி கந்தபுராணத்தில் 'குடங்கர் முதல் மூவகையிடத்தும்'[66] என வருகின்றது. முருகன், மயில், யானை, ஆடு ஆகிய வாகனங்களில் மட்டுமன்றி எருது, குதிரை, தேர், சிங்கம், விமானம், மேகம் முதலிய பல்வேறு வாகனங்களிலும் எழுந்தருளும் வடிவழகு கந்தபுராணத்தால் அறியப்படும் அரிய செய்தியாகும்.

முருகன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளியிருக்கும் திருக்கோல எழிலை தஞ்சைப் பெருவுடையார் ஆலயத் திருச்சுற்றிலிருக்கும் முருகன் கோயிலில் காண முடிகின்றது. மேலும் முருகன் இளையோனாகவும். காளைப் பிராய முடையவராகவும். அந்தணரைப் போலவும், முனிவரைப் போலவும், வீரரைப்போலவும். திருக்கோலங்கள் கொள்வதையும் மற்றும் ஒரு முகமுடையவராகவும், ஆறுமுகங்கள் கொண்டவராகவும் விளங்கும் வளப்பும் கந்த புராணத்தில்[67] காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

**முடிவுரை**

இவ்வாறாக முருகக் கடவுள் உவமையில்லா அழகுத் திருக்கோலமுடைய வராகவும், குழந்தைக் கோலமுடைய வராகவும், குமரனாகவும், வயோதிபராகவும், வேட்டுவ உருவமுடையவராகவும், விஸ்வரூப முடைய வராகவும், போர் வீரராகவும், மயில், ஆடு, யானை, சிங்கம், தேர்முதலிய வாகனங்களில் அமர்ந்திருப்பவராகவும் சிவனுக்கும் உமைக்கும் நடுவே விளங்கும் திருக்கோலத்தவராகவும், ஒருமுகமுடையவராகவும், ஆறுமுகங் கொண்டவராகவும் எனப் பல்வேறு வடிவங்களில் விளங்குவதை தெய்வீக வரலாற்றுக் கதைகளூடாக சிறப்பாகச் சித்திரிக்கும் தொன்மையான சைவத் தமிழ் இலக்கியம் என்ற சிறப்பு கந்தபுராணத்திற்கே உண்டு எனலாம். இவ்விலக்கியத் தாக்கத்தினால் தோன்றிய முருகனின் வடிவங்களைச் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் தமிழகத்திலுள்ள முருகன் கோவில்களில் மட்டுமன்றி அங்குள்ள பிரதான சிவாலயங்களிலும் கண்டு வணங்க முடிகின்றது. கந்தபுராண கலாசாரம் மிகவும் சிறப்புற்று விளங்கும் ஈழத்தில் முருக வணக்கமும், முருக வடிவங்களும் சிறப்புற்று விளங்குவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## உசாத்துணைகள்


01) கந்தபுராணம், யுத்த காண்டம், சூரபன்மன் வதைப்படலம், பா.எ.439.

02) மேலது, பா.எ.437.

03) மேலது, பா.எ.433.

04) மேலது, உற்பத்தி காண்டம், திருவவதாரப்படலம், பா.எ. 120.

05) மேலது,பா.எ. 121.

06) மேலது, பா.எ. 119.

07) மேலது, பா.எ.116.

08) மேலது, திருவிளையாட்டுப்படலம், பா.எ. 17.

09) மேலது, பா.எ. 18, 19.

10) மேலது, பா.எ. 4.

11) உத்தரகாமிக ஆகமம், படலம், 64

12) மேலது,

13) கந்தபுராணம், உற்பத்திக் காண்டம், அயனைச் சிறைபுரி படலம், பா.எ. 13-14.

14) மேலது, பா.எ. 17.

15) மேலது, திருநகரப்படலம், பா.எ. 109.

16) மேலது, கடவுள் வாழ்த்து, பா.எ. 15.



17) மேலது, மகேந்திரகாண்டம், அவைபுகுபடலம், பா.எ.134.

18) மேலது, உற்பத்திக்காண்டம், அயனைச் சிறைபுரி படலம், பா.எ.10.

19) மேலது,. சரவணப்படலம், பா.எ. 26.

20) மேலது, தேவகாண்டம், தெய்வயானை அம்மை திருமணப் படலம், பா.எ. 223.

21) மேலது. தக்ஷகாண்டம், கந்தவிரதப்படலம், பா.எ. 27-119.

22) கந்தபுராணம், அவையடக்கம், பா.எ. 13.

23) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலம், பா.எ. 463.

24) மேலது, பா.எ. 502.

25) மேலது, பா.எ. 378-382.

26) மேலது. தக்ஷகாண்டம், வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ. 261.

27) மேலது, உற்பத்திக் காண்டம், திருவிளையாட்டுப் படலம், பா.எ.11.

28) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலம், பா.எ. 453.

29) மேலது. உற்பத்திக் காண்டம், தகரேறு படலம், பா.எ. 25.

30) மேலது, தாரகன் வதைப்படலம், பா.எ. 180.

31) மேலது, பா.எ. 1-203.

32) மேலது, பா.எ. 169.

33) மேலது, யுத்த காண்டம், மூன்றாம் நாட் பானுகோபன் யுத்த படலம், பா.எ. 212.

34) மேலது, பா.எ. 213.

35) மேலது, தக்ஷகாண்டம், கந்தவிரதப்படலம், பா.எ. 126.

36) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலம், பா.எ. 483.

37) மேலது, பா.எ. 482.

38) மேலது, பா.எ. 487.

39) கல்லாடம், முருகக்கடவுள் வாழ்த்து, 12-15.

40) கந்தபுராணம் : உற்பத்திக் காண்டம், விடைபெறு படலம், பா.எ. 38.

41) மேலது, யுத்தகாண்டம், சிங்கமுகாசுரன் வதைப்படலம், பா.எ. 395.

42) மேலது, உற்பத்தி காண்டம், விடைபெறு படலம், பா.எ. 37.

43) மேலது, பா.எ.38.

44) மேலது, பா.எ. 37.

45) மேலது, பா.எ. 38.

46) மேலது,யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலம், பா.எ. 46.

47) மேலது, பா.எ. 261.

48) மேலது, மகேந்திர காண்டம், சயந்தன் கனவு காண்படலம், பா.எ. 4.

49) மேலது. யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலம், பா.எ. 422-427.

50) மேலது, உற்பத்தி காண்டம், திருவிளையாட்டுப்படலம், பா.எ. 89.

51) மேலது, பா.எ. 88.

52) மேலது, தக்ஷகாண்டம், வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ. 82.

53) மேலது, பா.எ. 94.

54) மேலது, பா.எ. 66.

55) மேலது. தக்கன் சிவபூசை செய் படலம், பா.எ. 75.

56) மேலது, வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ. 116.

57) மேலது, தேவகாண்டம், தெய்வயானையம்மை திருமணப்படலம், பா.எ. 1-268.

58) மேலது. தக்ஷகாண்டம், வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ. 256.

59) மேலது, பா.எ. 257.

60) மேலது, பா.எ. 259.

61) மேலது, பா.எ.258.

62) மேலது, பா.எ. 257.

63) மேலது. உற்பத்தி காண்டம், திருவிளையாடற் படலம், பா.எ. 256.

64) கந்தபுராணம், பாயிரம். பா.எ. 3.

65) மேலது உற்பத்திக் காண்டம், குமாரபுரிப் படலம், பா.எ. 67-71.

66) மேலது, யுத்தகாண்டம், மீட்சிப் படலம், பா.எ. 24.

67) மேலது. உற்பத்திக் காண்டம், திருவிளையாட்டுப் படலம், பா.எ. 10.

**துணை நூல்கள்**

01) சுவாமி நாதசிவாசாரியர், சி., (1977), காமிகாகமம், கிரியாபாதப்பூர்வபாகம், தமிழ் சந்திரிகையுடன் முதற்பகுதி, தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

02) சோமசுந்தரனார், பொ.வே., (உ.ஆ), (1963), கல்லாடம், சைவசித்தாந்தக் கழக வெளியீடு, சென்னை.

**பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்**
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பொதுச்சபை உறுப்பினர்கள்




## இராஜகோபுர திருப்பணிச் சபை





குதிரை வாகனம்



யானை வாகனம்



எலி வாகனம்




எருது வாகனம்

உ
ஓம்

# இழந்த நலம்



உண்மையுணர்ந்த அந்த ஞானியின் கண்கள்,
வெளியை நோக்கியபடி விரிந்திருந்தன.
திறந்திருந்த அக்கண்கள் தேடுவது எதனை?
தெரியவில்லை.
ஆகாயம் கடந்து அப்பாலும் போயிற்று அப்பார்வை.
அவர் மோனம்,
வானம் கடந்த ஞானம் உரைத்தது.
அரசமரம் ஒன்றின்கீழ் அமர்ந்திருந்தது,
அந்த ஞானப் பேரொளி.
ஞானக் கடலுக்கு நிழல் கொடுக்கும் பெருமிதத்தில்,
அவ் அரசமரம் அசைந்து ஆர்ப்பரித்தது.
அதன் கிளையில் அமர்ந்திருந்த ஒரு பூங்குயில்,
அந்த ஞானியின் மோனம் கலைக்க விரும்பாமல்,
குரல் அடக்கி மெல்லக் கூவிற்று.
மனக்குரங்கை அடக்கிய அம்மகானின் முகம் பார்த்து,
ஒரு கிழக்குரங்கு தன் இயல்படக்கி மௌனித்து நின்றது.
சீறும் புலியொன்று தன் சினமடக்கி,
ஆறும் அகங்கொண்ட அம்முனிவர் முகம் பார்த்துக்கிடக்க,
அதன் மடியில் ஒரு சிறுமுயல் ஆழ்ந்து உறங்கியது.
முழுமையாய் விடியாத மெல்லிருள் சூழ்ந்த அப்பொழுதில்,
பாம்பொன்று தன் பாழும் விஷம் ஒழித்து,
சீறமறந்து அச்சித்தர் மேல்,
ஊர்ந்து விளையாடி உவகையுடன் கிடந்தது.
தன் மனவொடுக்கத்தால்,
எல்லா உயிர்களையும் ஈர்த்திருந்த,
அந்த ஞானியின் அருகில்,
கைகட்டி, வாய்பொத்தி
தெய்வக் களையோடு நின்றிருந்தான் ஒரு சீடன்.



அவன் முகத்திலும் ஞானிஒளி.
சூழ்நிலை தவமாக,
தவமே சூழ்நிலையாக,
ஏதோ நினைந்து சீடன் மெல்லக் கனைக்கிறான்.
வெளிபார்த்த குருவின் கண்கள்,
அவன் விழி பார்க்கின்றன.
பார்வையின் பாஷையால்,
சீடனின் ஐயம் உணர்ந்த,
ஞானியின் மௌனம் கலைகிறது.
தன் பார்வையாற் பணிந்த சீடனின் குனிந்த தலை நிமிர்த்தி,
முறுவல் பூத்தபடி ஐயம் உரைக்க அம் முனிவர் பணிக்கின்றார்.
அம் மரத்தின்கீழ் ஓர் ஞானயாகம் தொடங்கிற்று.

கைகட்டி வாய்பொத்திக் கனிந்த முகத்தோடு,
குருவின் அருள்விழி நோக்குகிறான் சீடன்.
குருவின் கண்கள் உத்தரவு கொடுக்க,
சீடனின் வாய் திறக்கிறது.
"எது நலம்?" இரண்டே சொற்களில் கேள்வி.
சொற்சுருக்கத்தில் சீடனின் ஞானப்பெருக்கம் வெளிப்பட,
குருவின் முகத்தில் மலர்ச்சி.
'ஏன் இந்த ஐயம்?'
"கந்தரனுபூதி கற்றதால் வந்தது."
'அனுபூதி கற்று ஐயமா?
ஹா...... ஹா..... ஹா....
கேள்வியிற் தவறோ? - சீடன் முகத்தில் அச்சம்.
அவன் அச்சம் குருவின் முகத்தில் கருணையை வருவிக்க,
'பாடல் சொல்?' உத்தரவு பிறக்கிறது.

**உல்லாச நிராகுல யோக இதச்**
**சல்லாப விநோதனும் நீ அலையோயூ**
**எல்லாம் அற என்னை இழந்த நலம்**
**சொல்லாய் முருகா சுர பூபதியே**



'இதில் என்ன ஐயம்?'
"இழந்த நலம் என்கிறார் அருணகிரியார்."

'அதிலென்ன தவறு?
"எது நலம்?"
மீண்டும் சீடனிடமிருந்து அதே பழைய கேள்வி.
'நீயே சொல்'
கேள்வியை மாணவரிடமே திருப்புகிறார் குரு.
பதில் எதிர்பார்த்தவனிடம் கேள்வி திரும்ப,
தடுமாறி நிற்கிறான் சீடன்.

'நீயே சொல் எது நலம்?'
மாணவனை விளக்கம் செய்ய,
குருவின் வார்த்தைகள் நீள்கின்றன.
"பெறுதல் நலம் என்றுரைப்பார் பெரியோர்."
தடுமாறிப் பதிலுரைத்த சீடன்,
தயங்கிக் குருவின் முகம் பார்க்கிறான்.
தாடிக்குள் மறைந்திருந்த குருவின் முகத்தில்,
மெல்லிய புன்னகை படர்ந்ததாய் ஒரு பிரமை.
இகழ்ச்சிக் குறிப்பு அதில் தெரிய நாணுகிறான் சீடன்.
'பெறுதலே நலமாகின் இழத்தல்?'
மீண்டும் குருவிடமிருந்து கேள்வி.
"துயரன்றி வேறென்ன?"
இம்முறை சீடன் குரல் நலிந்திருக்கிறது.
ஹா... ஹா... ஹா....
வாய்விட்டு ஞானி சிரிக்க,
மருள்கிறான் அவன்.




'அஞ்சாதே உலகம் உரைப்பதை நீ உரைத்தாய்.
இதில் உன் தவறு ஏதுமில்லை'
குருவின் வார்த்தையினால் தெளிவுற்று,
மீண்டும் அவர் முகம் பார்க்கிறான் சீடன்.
'பெறுதல் நலம், இழத்தல் துயர் என்பது,
நம் அறியாமையில் விளைந்த விளக்கம்' குரு உரைக்க,
"எங்ஙனம்?" வாய்பொத்திச் சீடனிடமிருந்து மீண்டும் கேள்வி.
'நாம் எதையும் பெறுவதுமில்லை, எதையும் இழப்பதுமில்லை.
உலகில் பொருளாய்த் தெரிபவையெல்லாம் மாயையே.'

பதிலுரைத்த குரு,
சீடனின் முகம் நோக்குகிறார்.
விளங்காமையை, சீடனின் முகம் உரைக்க,
குருவின் விளக்கம் தொடர்கிறது.

'பெறுதல் நலமென்றாயே எங்ஙனம்?'
"உடைமை பெருக உயர்வு பெருகும் அல்லவா?"
இது சீடன்.
'உடைமை என்றால் என்ன?'
"ஒரு பொருள் எனதாகும் போது உடைமையாகிறது."
'எனது பொருள் என்கிறாயே நீ என்றால் யார்?'
"நான் என்றால்... நான் என்றால்... நான் என்றால்... நான் தான்."
'நான் என்பது எதனை?'
சீடன் தடுமாறுகிறான்.
ஹா... ஹா... ஹா...
மீண்டும் வாய்விட்டுச் சிரிக்கிறார் குரு.
'நான்தான் ஆணவம் என்னும் அகங்காரம்.
அந்த அகங்காரத்திலிருந்து பிறப்பது தான்,
எனது என்னும் மமகாரம்.
அவை இரண்டுமே பொய்கள்.
அந்தப் பொய்களை நம்பித்தான் பெறுவது நலம் என்கிறாய்
புரிகிறதா?'
"புரியாமற்போல் இருக்கிறது."
சீடனின் பதிலில் தயக்கம்.
மீண்டும் குருவின் விழிகள் வெளிநோக்க,
தொடர்ந்த உபதேசத்திற்காய்க் காத்திருக்கிறான் சீடன்.

குருவின் மடியில் தவழ்ந்த நாகம்,
ஒளி வரத்தொடங்க,
நெறிந்து தன் புற்றுக்குள் புக முயல்கிறது.
புலியின் அசைவால்,
முயலின் தூக்கம் மெலிதாய்க் கலைய,
அது புரண்டு குருவின் முகம்பார்த்து,
பின் மீண்டும் உறக்கத்துட் புகுகிறது.





தன் முகம் பார்த்துக் காத்திருக்கும் சீடனை நோக்கி,
மீண்டும் குருவிடமிருந்து வார்த்தைகள்.
'பொய் என்றால் என்ன?'
"இல்லாததே பொய்."
'மெய் என்றால்?'
"இருப்பது."
'இந்த உலகில் மெய்யான பொருள் ஏதும் உண்டா?
குருவின் கேள்வியால் குழம்புகிறான் சீடன்.
"உலகிலிருக்கும் பொருள்கள் மெய் இல்லையா?"
தயக்கமாய்ச் சீடனிடமிருந்து கேள்வி.
'நீயே சொல்'
குருவின் உத்தரவால்,
மீண்டும் சீடன் முகத்தில் தடுமாற்றம்.



'மெய்ப்பொருளுக்கு இருக்கவேண்டிய இலட்சணம் என்ன?'
குருவின் கேள்வி தொடர்கிறது.
"அது எப்போதும் இருக்கவேண்டும்"
நலிந்த குரலில் சீடனின் பதில்.
'நீ சொன்ன பொருள்கள் எல்லாம் எப்போதும் இருக்குமா?'
"வந்து.... அவை.... எப்போதும்.....,"
வார்த்தைத் தடுமாற்றம்,
அவன் சிந்தனைத் தடுமாற்றத்தை வெளிப்படுத்த,
'சிந்தித்துச் சொல்'
உத்தரவிடுகிறார் குரு.
மீண்டும் மாணவனிடம் மௌனம்.
பின் மெல்ல மாணவன் வாய் திறக்கிறான்.
"உலகில் உள்ள எல்லாப் பொருளும்,
தோன்றல், நிலைத்தல், அழிதல் உடையன."
ஆதலால் எப்பொருளும் என்றும் நிலைப்பதில்லை."
'அங்ஙனமாயின் நீ சொன்ன பொருள் எல்லாம்,
மெய்யா? பொய்யா?' - மீண்டும் குரு.
"பொய்யே தான்."
சீடனின் வார்த்தைகளில் சிறிது மகிழ்ச்சி வெளிப்பட,
குருவின் உபதேசம் தொடர்கிறது.
'பொய் நலமாகுமா?'
"நலமாகாது."



'பெறுவதால் நலம் என்கிறாய்,
'பெறுவது பொய் என்கிறாய்,
பொய் நலமாகாது என்கிறாய்,
இப்போது சொல்' பெறுவது நலமா?'
வெள்ளமாய்க் குருவின் கேள்விகள் பெருக,
"ஒருக்காலும் இல்லை"
பதில் தன் வாயிலிருந்தே வந்துவிட்ட மகிழ்ச்சி,
சீடன் முகத்தில்.

சீடனின் தெளிவுகண்ட மகிழ்ச்சியில்,
குருவின் ஞானோபதேசம் தொடர்கிறது.
'பொருள் எல்லாம்பொய் என்றாயே
அப்பொருள்களைப் பெற்றது யார்?
"நான்."
'நான் என்றால்?'
மீண்டும் குருவிடமிருந்து கேள்வி.
"நான் என்றால் ஆணவம் என்றீர்கள்."
'அது வேறு. இப்போது வேறு விதமாய் மீண்டும் சிந்தி
நான் என்றாயே நான் என்பது உடலா? மனமா? புத்தியா?
"தெளிவாய்த் தெரியவில்லை, மூன்றும் சேர்ந்ததோ?"
பதிலில் ஐயம் சேர்க்கிறான் சீடன்.
'அப்படியே இருக்கட்டும்,
இம் மூன்றும் எப்போதும் நிலைக்குமா?'
"இல்லை. இம் மூன்றுமே தோன்றி, இருந்து, அழிபவை."
'அழிபவை பொய்தானே?'
"அதிலென்ன ஐயம்?"
'அங்ஙனமாயின் நான் என்பது பொய்யா?'
"நீங்கள் கேட்டபிறகு பொய் போல்த்தான் தோன்றுகிறது."
'நான் என்பதே பொய்யாயின், எனது என்பது?'
"சந்தேகம் என்ன? பெரும்பொய்."
பதிலுரைத்த மாணவனின் விழிகளை,
ஊடுருவிப் பார்க்கிறார் குரு.
'நீயும் பொய், உனதும் பொய் என்றால்,
பெறுதல் எப்படி நலமாகும்?'

விடை அறிந்த வியப்பில் விழி விரிகிறான் சீடன்.
குருவின் முகத்திற் கருணை.

**மரக்கிளையில் நின்று கூவிய குயிலின் குரலுக்கு,**
**எதிர்க்கிளையில் இருந்து பதில் வர,**
**மகிழ்ந்த குயில்,**
**மீண்டும் பதில் எதிர்பார்த்துக் கூவுகிறது.**

குருவின் முகம் பார்த்துச் சீடன் தொடர்கிறான்.
"அங்ஙனமாயின் இழத்தல் தான் நலமா?"
இப்போது பதிலுக்காயன்றி,
தெளிவுக்கான எதிர்பார்ப்பு, சீடன் குரலில்.
புன்னகைக்கிறார் குரு.
'நீயும் பொய், உனதும் பொய்.
இங்கே இழப்பு எப்படி நிகழும்?
இல்லாததை இல்லாதவன் இழக்கமுடியுமா?
மீண்டும் வினாவிற் குரு விடையுரைக்க,
"அங்ஙனமாயின் அருணகிரியார் இழந்த நலம் என்றது ஏன்?
இழத்தலும் நலம் இல்லையா?"
ஐயமே ஐயமாக சீடன் குரலில் நலிவு.
'பெறுதலை விட இழத்தல் நலம், அவ்வளவே.'
"புரியவில்லை விரித்துச் சொல்ல வேண்டும்."
சீடனின் வார்த்தைகளில் அறிவுச் சரணாகதி.
'நான் என்பதையே புரியாதவன்,
எனது என்ற ஒன்று கிடைத்ததும்,
அதன்மேல் கற்பனையில் பற்று வைக்கிறான்.
அப்பொருள் நிலைக்கும் என்பதும்,
தான் நிலைப்பேன் என்பதுமே பொய்யான கற்பனைகள் தான்.
பொய்யில் பற்று வைத்தவன் நிம்மதியடைய முடியுமா?
பற்றுவைத்த பொருள்கள்,
பொய்யானவை என உள்ளுணர்ச்சி உறுத்த,
அவை அழிந்துவிடும் என்ற உணர்வால்.
மேலும் அவை பற்றி அக்கறை பெருகும்.
பொய்யை மெய் என்று நினைப்பவன்,



நிம்மதியாய் இருக்க முடியுமா?
அப்பொய்மை தரும் ஐயம்,
அவனையறியாமல் அவனைப் பதற்றத்திற்கு ஆளாக்கும்.
அப்பதற்றமே அவன் வாழ்வில் நிம்மதியயைக் கொடுக்கும்.
நிலையற்றதை நிலை என்று நம்புபவன்,
அப்பொய்மை தரும் அச்சத்திலேயே வாழ்நாளைக் கழிப்பான்.
தோற்றிய பொருள்களுக்கெல்லாம் அழிவுண்டு.



பொய்மேல் கொண்ட பற்றினால்,
இவ்வுண்மையைத் தரிசிக்க மூடர் விரும்புவதில்லை.
அழியும் பொருளை அழியாததாய்க் கருதி மயங்குவதும்,
பின் அது அழிந்துவிடுமோ என எந்நேரமும் அஞ்சுவதும்,
தன் இயல்பினால் அது அழியும் போது,
அதன் இழப்பால் அதிர்வதுமே,
மனிதனின் வாழ்க்கையாகி விட்டது.
அதனால்த்தான் பெறுதலைத் தீங்கு என்கிறேன்.'
விடை வெள்ளமாய்ப் பெருகுகிறது.

"பற்று வைத்தபொருள் அழிய,
உண்மை பற்றிய ஞானம் வராதா?"
ஐயம் அகலும் ஆனந்தத்தில் மீண்டும் மாணவனின் கேள்வி.
'அப்படி வந்தால் எல்லோரும் அல்லவா ஞானியாகி விடுவார்கள்.'
சிரித்துப் பதிலுரைக்கிறார் குரு.
"நிலையாமை உணர, ஞானம் வரவேண்டுமே"
மீண்டும் சீடன்.
'ஆணவம் விட்டால் வரும்' -குரு.
"விடாவிட்டால்....?" இழுக்கிறான் சீடன்.
'ஒரு பொருளின் இழப்புத்தரும் ஏக்கம்.
மற்றைப் பொருள்களின் மேல் அதிக பற்றினை உருவாக்கும்.
அதனால் மற்றைப் பொருள்களின் இழப்புப்பற்றி,
அதிக கவலையும்,
அவற்றைப் பாதுகாப்பது பற்றிய அதிக அக்கறையும்,
பின் அவற்றின் இழப்பில் அதிக வேதனையும் நிகழும்.
விருப்பினால் இழப்பு அதிகரிக்க,

இழப்பினால் விருப்பு அதிகரிக்க,
மாறி மாறிப் பற்று என்னும் நூற்கண்டில்,
மூடன் தன்னைத்தானே சிக்க வைத்துக்கொள்வான்.
சிக்குண்ட அந்நிலையினின்றும் மீள முடியாமல்,
முயல்வதும் தோற்பதுமாய்,
அவன் வாழ்க்கை முடிந்து போகும்.
இதுவே வேடிக்கை மனிதர் நிலை'
உரைத்து மௌனிக்கிறார் குரு.

“அங்ஙனமாயின்,
சாதாரணர் இம் மாய வலையினின்றும் மீளவே முடியாதா?”
சீடனின் ஐயம் தொடர்கிறது.
'யார் சொன்னார்? முடியும்
நம்மைச் சிக்க வைத்திருப்பது,
நாமே அறுக்கக்கூடிய வெறும் நூலிழைதான்.'
குரு வாய்மூடுமுன் சீடன் தொடர்கிறான்.
“பின் ஏன் அதனுள் சிக்கி வருந்துகிறோம்?”
'பற்றின் மேல் நாம் கொண்ட பற்று
அதுவே பற்றறுத்தலை இழப்பாய் நமக்கு உணர்த்துகிறது.'
அப்பொய்யுணர்வு தவிர்ந்தவன்,
ஒரு நொடியில் அவ்விழைகளை அறுத்து வெளிவருவான்.
துயர் எனும் கடல் கடப்பான்.
மெய்யைத் தரிசிப்பான்.
மெய்யில் கலப்பான்.
மெய்யே ஆவான்.'
உபதேச மழை தொடர்ந்து பொழிகிறது.
'மெய் என்றும் நிலைத்தது.
நிலைத்த பொருளில் கலந்தவனுக்கு இழப்பில்லை.
இழப்பில்லையேல் துயரில்லை.
துயரில்லையேல் என்றும், எங்கும் ஆனந்தமயம்.
அவ் ஆனந்தமயம் அடைந்தவனே ஞானி.
ஞானி தன்னைத் தரிசிக்கின்றான்.
அதனால் உண்மையைத் தரிசிக்கின்றான்.
உண்மைத் தரிசனம் தந்த தெம்பால்,
பொய்மைகளை மெல்ல மெல்ல அறுத்து எறிகிறான்.



பொய் அற அற ஆனந்தம் பொங்குகிறது.
முடிவாய்,
எல்லாம் அற, இழந்த நலம் புரிகிறது.'
கடல்போல் பொங்கிய குருவின் உபதேசத்தில்,
மெய்சிலிர்த்து நிற்கிறான் சீடன்.
ஆனாலும் அவன் முகத்தில் ஒரு சிறு குழப்பம்.

**புலி உடல் உலுப்பி எழ,**
**அதன் மடியிலிருந்து வீழ்ந்த முயல்,**
**ஓடத் தயாராகுகிறது.**
**குரலுக்குக் குரல் தொடர்ந்து வர,**
**குயில் குதூகலமாய்த் தொடர்ந்து கூவுகிறது.**

"இன்னும் ஒரு சிறு ஐயம்."
குருவின் பார்வை அனுமதி தர தொடர்கிறான் சீடன்.
"இழப்பதே நலம் எனும் ஞானம் அறிவால் கைகூடுமோ?"
'ஒருக்காலும் இல்லை
அங்ஙனம் கைகூடுமாயின் கற்றவர் எல்லாம் ஞானியராக
அல்லவோ வேண்டும்?'
ஹா... ஹா ... ஹா ... சிரிக்கிறார் குரு.
"அங்ஙனமாயின் அந்த ஞானத்தை எது தரும்?"
மீண்டும் சீடன்.
'அனுபவம் தரும்.'
"அனுபவம் என்றால் அறிவனுபவமா?"
'இல்லை.'
"வாழ்வனுபவமா?"
'இல்லை.'
"பின் அவ்வனுபவம் தான் எது?"
சீடன் குரலில் சலிப்பு.
'அது உயிரனுபவம்.'
"உயிரனுபவம் என்றால்?"
'பல பிறவிகளில் அகப்பட்டு,
இன்ப துன்ப அலைகளால் மொத்துண்டு,
அவ்விரண்டையும் கடக்கும் உணர்வு நிலை பெறுதல்
இதுவே தத்துவ உணர்வு.



இத்தத்துவ உணர்வைத் தருவதால்,
பெறுதலைவிட இழத்தலே நலமாம். புரிகிறதா?'
குருவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல்,
சிலிர்த்து நிற்கிறான் சீடன்.
'என்ன? புரிந்து விட்டதாய்த் தோன்றுகிறதோ?'
குருவின் கேள்விக்கு,
சம்மதத்தை, மௌனத்தால் சீடன் பதிலாக்க,
ஹா... ஹா.... ஹா ... மீண்டும் குருவின் கேலிச்சிரிப்பு.
குற்றம் உணராமல் தடுமாறி,
குருவின் முகம் பார்க்கிறான் சீடன்.
'புத்திக்கு விளங்கினால் மட்டும் தெரிந்தது ஆகாது.
அனுபவம் தேடு இழந்தநலம் புரியும்.'
உபதேசம் நிறைகிறது.

புலி நடக்கத் தொடங்குகிறது.
புலியின் நடைகண்டு முயல் தாவி ஓடத்தொடங்குகிறது.
குரல் கொடுத்த குயிலினைக் கூடுதற்காய்,
மரம் விட்டுப் பறக்கிறது பெண்குயில்.
ஒளி விரிய, பாம்பு புற்றுக்குள் நுழைந்து மறைகிறது.

மீண்டும் குருவின் பார்வை வானத்தில்
சீடன் மனம் மோனத்தில்.

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**



உ

ஓம்



# இந்து திருமணச் சடங்குகள் வெளிப்படுத்தும் வாழ்வியற் பண்பாடு

திருமணம் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதாவது ஆண், பெண் இருவரும் உடல், உள்ளம் ஆகியவற்றின் ஒருப்பாட்டுக்கு அமைய இணைந்து கொள்வதாகும். இதில் கணவன், மனைவி இருவரும் ஒருவரையொருவர் சார் புணர்ந்து தீர்மானித்தவாறு சுற்றத்தார் எடுக்கும் சமயச் சடங்குகள் இடம்பெறும். சிவம், சக்தி இரண்டும் ஓர் உருவாய் அமைந்த அர்த்த நாரீஸ்வர வடிவம் இக்கருத்தையே உணர்த்துகின்றது. மணவாழ்க்கையில் புருஷார்த்தம் நான்கையும் அடையும் நோக்கில் திருமணத்தின் மூலம் கிருகஸ்தாசிரமத்தில் ஒருவர் நுழைகிறார் என்பது பொருளாகும். புருஷார்த்தங்களாவன அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்குமாம். இவற்றில் அறம் - நேர்மையான வழியில் ஒழுகும் செயற்பாடு, பொருள் - தேவையான பொருளை நீதியான வழியில் ஈட்டுதல், இன் பம் - விருப்பம் நிறைவுற நுகர்தல், வீடு - ஆன்ம வீடு பேறு.

**மணமகனை அழைத்து வருதல்.**

திருமண விழாவின் ஆரம்பத்தில் பெண் வீட்டாரோடு உறவினர் சூழப் பெண்ணின் அன்புச் சகோதரர் மணமகனை மணமகள் வீட்டுக்கு அழைத்து வருதல் இடம்பெறும். மணமகளின் பெற்றோர் மணமகனை மாலையிட்டு வரவேற்பர். அடுத்து மணமகனின் கால்களைத் தோழன் நீரினால் கழுவுவார். அந்த நன்றிக்கு அடையாளமாக மணமகன் தனது கணையாழியைக் கழற்றித் தோழனுக்குக் கொடுப்பார். பின்பு தட்டிலே குங்குமம் தூவி வாழைப்பழத்தின் மீது வைத்திருந்த எண்ணெய்த்திரியை அல்லது கற்பூரத்தை ஏற்றி சுமங்கலிகள் இருவர் வலமிருந்து இடமாக மூன்று முறை மணமகனுக்கு ஆராத்தி காட்டுவர். ஆராத்தி காட்டியதும் தட்டிலிருந்த குங்குமத்தை மோதிர விரலினால் தொட்டு மணமகனின் நெற்றியில் திலகம் இட்டதும் மணப்பந்தலில் அலங்கரித்து வைக்கப் பெற்றிருந்த மணவறைக்குத் தோழன் அழைத்துச் சென்று அதில் இருக்கச் செய்வார். அவ்வேளையில் செவிக்கினிய மேளமும் நாதஸ்வரமும் இசைத்துச் சபையோரை மகிழவைப்பது வழமை.

**கிரியைக்கான இடத்தைப் புனிதப்படுத்தல்**

மணவிழா ஆரம்பமாகும் போது அதற்கென அழைக்கப்பெற்ற சிவாச்சாரியார் வேத மந்திரம்சொல்லி, இறைவனை வேண்டுதல் செய்வார். முதலில் அவ்விடத்தைப் புனிதப்படுத்தும் பொருட்டுப் புண்ணியாகவாசனம் எனும் கிரியை இடம்பெறும். புண்ணியாக வாசனத்தில் விநாயக வணக்கம் செய்து, அவரின் அருளாசி வேண்டுதல் மரபு. அதன் நிறைவில் பஞ்சகவ்வியத்தையும் கும்பநீரையும்



கலந்து, சிவாச்சாரியார் தம்மைச்சுற்றியுள்ள இடத்துக்குத் தெளித்துத் தூய்மையாக்குவார். புண்ணியாகவாசனத்தில் இடம்பெற்ற விநாயக வணக்கத்தின் பேறாக மணவிழாவிலும் மணமக்களின் புதிய வாழ்விலும் தடைகள் ஏதும் நிகழாது நீங்கும் என்பது நம்பிக்கை.

**அங்குரார்ப்பணம்**

விநாயக வணக்கம் நிறைவுற்றதும் உலகில் படைப்புத் தொழிலை குறிப்பதாகிய முளைப்பாலிகை இடும் அங்குரார்ப்பணக் கிரியை இடம்பெறும். இந்நிகழ்வில் சந்திரன் பூசிக்கப்பெறுவது மரபு. சந்திரன் தாவரங்களுக்கு அதிபதி. எனவே சந்திர கும்பத்தைச் சுற்றி வைத்துள்ள 5 அல்லது 3 மண் நிரப்பிய சட்டிகளில் 5 அல்லது 3 சுமங்கலிப் பெண்களை அழைத்து, அவர்களின் கையால் முளைப்பாலிகை இடுதல் அங்குரார்ப்பணத்தைக் குறிக்கும்.

**காப்புக் கட்டுதல்**

அடுத்து சிவாச்சாரியார் மணமகனுக்குப் பவித்திரம் கொடுத்துச் சங்கற்பித்து, அவரின் வலதுகை மணிக்கட்டில் மஞ்சள் நூல் காப்புக் கட்டுவார். பின்பு மணமகனைப் பிறிதோர் இடத்தில் இருக்கவிடுவார். இந்நாளில் அவ்வாறின்றி மணவறையில் இடப்பக்கமாகச் சிறிது தள்ளி இருக்கச் செய்வதும் உண்டு. இறைவன் மணமக்கள் வாழ்விலே என்றும் காப்பாக - காவலாக வரவேண்டும். திருமணம் இனிதே நிறைவேறவும் காப்பாக இருப்பாயாக என்பது இதன் தாற்பரியமாகும்.

**பெண்ணை அழைத்து வருதல்**

பின்பு மணமகனின் சகோதரி (தோழி) யுடன் வேறு சிலரும் சேர்ந்து வர மணக்கோல உடையணிந்த மணமகளை மணவறைக்கு அழைத்து வருவர். மணமகள் வந்ததும் கிரியையைச் சிவாச்சாரியார் செய்து காப்பும் கட்டுவார். அடுத்து தெய்வீகக் காப்பணிந்த மணமக்களின் திருமணம் இனிது நிறைவேறுவதற்குச் சான்றாளராக உதவுமாறு கடவுளரை வேண்டி எரியோம்புதலாகிய அக்கினி காரியத்தைச் சிவாச்சாரியார் செய்வார். ஓமாக்கினி உடலையும் உள்ளத்தையும் தூய்மைப் படுத்தவல்லது. அதனால் அத் தெய்வீக ஒளி பேரானந்த இணைப்பை ஏற்படுத்த உதவும்.

**கன்னிகாதானம் - "தாரதத்தம்"**

வீட்டுக்கு விளக்கெனப் பெற்றெடுத்த பெண், கன்னிமை நீங்கித் திருமணப் பெண் ஆகும் பொழுது, அப்பெண்ணை மணமகனுக்குத் தானமாகக் கொடுத்தல் கன்னிகாதானம் எனப் பொருள் தரும். குடும்பத்தின் அரிய செல்வம் எனக்கருதிய பெண்ணைச் சான்றோர் நடுவே தெய்வசாட்சியாக மணமகனுக்குப் பெண்ணின் பெற்றோர் கொடுப்பது கன்னிகாதானம் ஆகும். இதனைத் "தாரதத்தம்" என்றும் சொல்வர். கன்னிகாதானம் நிகழும் வேளையில் சிவாச்சாரியார் மணமக்கள் இருவரினதும் வம்சாவழியினர் நால்வரைச் சபையோர் அறிய எடுத்துக் கூறுவர்.

பின்பு மணமகளின் தந்தை தரையிலே கிழக்கு முகமாக இருந்து, ஒரு தட்டிலே வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், மஞ்சள் துண்டு, எலுமிச்சம்பழம், தேங்காய், சில்லறைக்காசு, மலர் போன்றவற்றை வைத்துத் தந்தை தட்டையும் மகளின் கையையும் சேர்த்துப் பிடிக்க, பெண்ணின் தாயார் தனது உடன்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் தண்ணீர்த்தாரைவிட மங்கல வாத்தியங்கள் முழங்கக் கன்னிகையை வெற்றிலையில் தண்ணீர் விட்டு மாப்பிள்ளையின் கையில் கொடுப்பார். அதனைத் தொடர்ந்து வேறொரு தட்டிலே சிவலிங்கம், விநாயகர் அல்லது இலட்சுமி ஆகிய திருவுருவங்களில் ஒன்று பொறித்த மாங்கல்யம் கோர்த்த தாலிக்கொடி, கூறை, கால்மெட்டி மற்றும் மங்கலப் பொருட்களை வைத்து, மணமகனின் தந்தை,

தாய் சபையோரிடம் காட்டி, ஆசி பெற்ற பின் சிவாச்சாரியரிடம் கொடுப்பர். அவர் மணமகன் மூலம் கூறையை மணமகளிடம் கொடுத்து, அதனை மாற்றிவரச் சொல்லுவார். இது பெண்ணை முழுமையாகவே உடுபுடவை, உணவு, செல்வம், மங்கலம் அனைத்திற்கும் மணமகனும் வீட்டாருமே பொறுப்பேற்கும் கிரியையாகும்.

**தாலி கட்டுதல்**

மணமகள் கூறை மாற்றி வந்ததும் சிவாச்சாரியார் மாங்கல்ய பூசை செய்து, மணமகனின் கையில் அதனைக் கொடுப்பார். மணமகன் எழுந்து வலப்பக்கம் வந்து நின்று சபையோர் அனைவரும் வாழ்த்த, கெட்டி மேளம் முழங்கப் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும் பொழுது குடும்பத்தில் நெருங்கிய உறவினரொருவர் தேங்காயை இரு பாதிகளாக உடைப்பர். இது அன்பு, தூய்மை, தன்னல மின்மை ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

தங்கத்தினால் செய்த கொடி அல்லது சங்கிலி அல்லது மஞ்சள் கயிற்றில் கோர்க்கப் பெற்ற தாலி ஒரு மனைவி தனது இதயம் போலப் பேணி அணிதல் மரபு. தாலி கட்டும் போது மணமக்கள் மீது சபையோர் மலர் களைச் சொரிதல் தமது மகிழ்ச்சியையும் ஆசியையும் வெளிப்படுத்தும் பாவனையாகும்.

**மணப்பெண் இருக்கும் பக்கம்**

மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டும் வரை இலக்குமி நாராயணராக மண மக்களைப் பாவனை செய்து கிரியை நிகழ்த்தி பெண்ணை மாப்பிள்ளைக்கு வலது பக்கத் திலும் மாங்கல்யம் கட்டிய பின் இடது பக்கத் திலும் இருக்க வைத்து சிவாச்சாரியார் கிரியை நிகழ்த்துவார். பெண் இடது பக்கத்தில் இருக் கும் பொழுது உடம்பில் இடப்பாகத்தைச் சக்திக்கு ஈர்ந்து, அர்த்தநாரீஸ்வர வடிவம் தாங்கியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

மணமகள் மணமகனுக்கு இடது பக்கத் தில் இருந்து "சகதர்மினி" என்ற பெயர் பெறுவ தோடு அவர்கள் இருவரும் பங்காளிகளாய்ச் சமூகப்பணிகளை ஆற்றி, ஆன்மீக நோக்கங் களை எய்தற்கான மன ஒருமைப்பாட்டையும் புலப்படுத்துகின்றது.

**மாலை மாற்றுதல்**

வாழ்க்கையில் உடலாலும் உள்ளத் தாலும் இணைந்த இருவரும் தாம் ஒருவரே என்னும் தத்துவத்துக்கு அமைய மணப் பெண்ணின் கழுத்திலுள்ள மாலையை மண மகனுக்கும், மணமகனின் கழுத்தில் உள்ள மாலையை மணப்பெண்ணுக்கும் மூன்று முறை மாற்றுவார்கள். பின்பு இருவரையும் உமாமகேஸ்வரராகப் பாவனை செய்து சிவாச்சாரியார் கிரியை நிகழ்த்துவார்.

**பால் பழம் பருகுதல்**

பின் ஆணும் பெண்ணும் கருத்தொரு மித்து, வாழ்க்கைத்துணை என இணைந்துள்ள வேளையில் வாழ்க்கை என்றும் இனிப்பாக அமைந்த முதல் பானமாகப் பால் பருகுதல் இடம்பெறும்.

**மங்கள தரிசனம்**

முதல் பானம் பருகியதும் மங்கல தரிசனமாக மணமக்கள் முன் கன்னிப் பசுவை காண்பிப்பார்கள். பசு அட்டலக்குமியாகும். சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கவும் - தூய்மை நிலையினை இருவரும் பேணவும் கன்னிப் பசு உருவகமாகும்.

**ஏழடி நடத்தல்**

மணவறை முன்னுள்ள கும்பங்களை யும் ஓமத்தையும் சுற்றி வருவதற்கான முதல் ஏழடி நடத்தல். அக்கினி எரியும் ஓம குண்டத்திலிருந்து ஏழு இடங்களில் நெல் போட்டு, அந்த இடங்களில் பரம்பொருளா கிய இறைவனின் ஆசியை வேண்டி மணமகன்



தன் கையால் பெண்ணின் வலது காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல், ஒவ்வொரு அடி யிலும் கணவன் மனைவியின் எண்ணங் களுக்குத் தான் இசைந்து வாழ வேண்டும் என்ற நோக்கில் இருவரும் இணைந்து இந்த ஏழடி நடக்கும் நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வின் போது கணவன் மனைவியை நோக்கி

முதல் அடி - வாழ்க்கைப் பயணம் முழுவதும் நீ என்னை ஆதரிக்க வேண்டும்.

இரண்டாம் அடி - இல்லத்து ராணியாக நீ கண்ணியமாக இருக்க வேண்டும்; இக் குடும்ப நலனைக் கவனித்துக் கொள்ளுதற்கேற்ற வல்ல மையை ஆண்டவன் தர வேண்டும்.

மூன்றாம் அடி - இக் குடும்பச் செழிப்புக்கும் ஐக்கியத்துக்கும் நீ காரணமாய் இருக்க வேண்டும்.

நான்காம் அடி - குடும்ப உண்மைப் பண்பாடு மரபுகளைப் பேணுவதில் எமக்கு நீ வழிகாட்ட வேண்டும்.

ஐந்தாம் அடி - சரியான வழியில் இன்ப ஊற்றாயும் எம்மை வழிப்படுத்தியும் நீ இருக்க வேண்டும்.

ஆறாம் அடி - குடும்பச் செல்வத்தை வளர்ப் பதில் நீ உதவுதல் வேண்டும்.

ஏழாம் அடி - உடல் வலு, ஆன்மீக வலு, பொருளாதார வலு ஆகியவற்றை ஒருவரோ டொருவர் ஆலோசித்து உருவாக்க நாம் இருவரும் அருளாசி பெற வேண்டும்.

**அருந்ததி பார்த்தல்**

கற்பு நெறியில் சிறந்து விளங்கியவள் அருந்ததி என்னும் பெண். அவள் தனது கற்பினில் வானிலே நட்சத்திரமாய் என்றும் ஒளிவீசுகிறாள். பெண்ணின் கற்பு நெறிப் பெரு மையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசையைப் பார்த்து வணங்குவது மரபாக வளர்ந்துள்ளது. திரிகரண சுத்தியாக ஆன்மீகப் பண்புகளின் இருப்பிடமாக இல்லம் விளங்கு வதற்கு மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஒழுக்கம் பேணுவதன் அவசியத்தை இது சுட்டும்.

**மோதிரம் போட்டு எடுத்தல்**

இந்த நிகழ்வு, கிரியைகளில் கூறப்ப டாத போதிலும், மணமக்களுக்கு வெட்கம் தெளியவும் சபைச் சிறப்புக்காகவும் மஞ்சள் கலந்த பாத்திரத்துள் சிவாச்சாரியார் மோதிரத் தைப் போடுவார். மணமக்கள் இருவரும் ஒரேவேளையில் பாத்திரத்துள் கையைவிட்டு மோதிரத்தை எடுக்க வேண்டும். இச்சம்பிரதா யம் மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத் தைக் குறிக்கும்.

**பூரணாகுதி**

திருமணக் கிரியைகளை இடையூறின்றி நடத்துவதற்கு உதவுமாறு வேண்டிக் கொண்ட கடவுளர்கள் ஓமக்கினிமுன் மணவாழ்க் கையில் இணைந்த மண மக்களுக்கு நல்லாசி நல்கும் வண்ணம் வேண்டுதல் செய்து - நவதானியம், வெற்றிலை, பாக்கு, தேங்காய், வாழைப்பழம், நெற்பொரி முதலியவற்றை ஓமக்கினியில் நெய் சொரிந்து மணமக்களுக்கு வேண்டுதல் செய்வதுடன் திருமணக் கிரியை நிறைவுறும். திருமண வாழ்வு பரிபூரணமான செல்வங்களுடன் நிறைவடைய வேண்டு மெனப் பிரார்த்தித்து பூரணாகுதி இடம் பெறும்.

**ஆசீர்வாதம்**

புதிதாக திருமணம் முடிந்த தம்பதி களுக்கு நீண்ட ஆயுளும் செல்வச் செழிப்பும், மகிழ்ச்சியும் இறையருளால் கிடைக்க வேண்டு மென மஞ்சள் பொடியுடன் குங்குமமும் கலந்த பச்சை அரிசியைச் சிவாச்சாரியார்

மணமக்களின் மீது தூவி மணமக்களை ஆசீர் வதிப்பார். இனிமை மங்கலம், சுகம், சௌபாக் கியம் அனைத்துடனும் அறுகுடன் கலந்த அரிசியினால் ஆசீர்வாதம் நடைபெறும்.

**அறுகு அரிசி போடுதல்**

திருமண விழாவில் மணமக்கள் பல் லாண்டு வாழவேண்டுமென மணமக்களின் பெற்றோர், உறவினர், நண்பர்கள், பெரியோர் கள் அனைவரும் சிவாச்சாரியார் ஆசீர்வதித்த தட்டிலே அறுகு கலந்த அரிசியைத் தூவி மணமக்களை மனமுவந்து வாழ்த்துதல் மரபு. அறுகு போல வாழ்விலே பச்சைப் பசுமை யுடன் என்றும் சந்ததியுடன் வேரூன்றி வாழும் வகையினை இது உணர்த்தும்.

அறுகு அரிசி போடும் முறையிலே இரண்டுமுறைகள் உள்ளன. ஒன்று பாதாதி கேசமாகப் போடுதல், மற்றது கேசாதிபாத மாகப் போடுதல் என்பதாகும். முதலாவது முறை இறைவனுக்குத் திருப்பாதத்திலிருந்து திருமுடிவரை வாழ்த்திப் போடுதல் பாதாதி கேச முறை எனப்படும். தலைமுதல் தோள், முழந்தாள், பாதம் வரை வாழ்த்திப் போடுவது கேசாதிபாத முறை என்பதாகும். மணமக்களை வாழ்த்தும் போது கேசாதிபாதமாக வாழ்த்தி ஆசீர்வதிப்பதே சரியானதெனப் பெரியோர் கூறுவர்.

**ஆரத்தி எடுத்தல்**

திருமணச் சடங்கு நிறைவில் மண மக்களுக்கு கண்ணூறு (கண்திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி வாழைப்பழத்தின் மீது எண்ணெய்த் திரி அல்லது கற்பூரம், ஏற்றி அதனைச் சுமங்கலிகள் இருவர் வலம் இருந்து இடமாக மூன்று முறை சுற்றிய பின், சுடரை அணைத்து தட்டிலிருக் கும் குங்குமத்தை எடுத்து மணமக்களின் நெற்றியில் மோதிர விரல் அல்லது சுட்டு விரலி னால் திலகமிடுவது சைவத் திருமணத்தின் முக்கிய வழமை. அத்துடன் மணமகளானவள் இல்லத்தில் ஒளியேற்றி மங்கலமாக வாழ வருக என ஆசிர்வதித்து அழைத்தல் எனவும் பொருள்படும்.

**விருந்துபசாரம்**

அடுத்து திருமண விழாவுக்கு வந்த விருந்தினர் அனைவரும் மணவீட்டார் அன்பு டன் அளிக்கும் விருந்துபசாரத்தில் மகிழ்தல் தனி இன்பமாகும். விருந்தினர், உறவினர் வயிறும், மனமும் நிறைந்து வாழ்த்தும் வாழ் த்து பூரணமான வாழ்த்தாகும். விருந்தினரை உபசரிப்பதும், தெய்வத்தை உபசரித்து உண வளிப்பதற்குச் சமமாகும். 'அதிதி தேவோ பவ' என்பது வேதவாக்கு.

"ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள்

காதலர் இருவர் கருத்தொருமித்து

ஆதரவுபட்டதே இன்பம்"

என்ற ஔவையின் அறிவுரைப்படி இல்வாழ்க்கையும் அறவாழ்வாகப் பரிணமிக்கச் செய்யும் இந்துக்களது வாழ்வியல் பண்பாடு அர்த்தமுள்ளதாகும்.

'அறன் எனப்பட்டதே இல்வாழ்வு'

என்னும் வள்ளுவர் குறள் வழி அனைவரதும் திருமணவாழ்வு அமைய வேண்டும் என்பதே இவற்றின் தாற்பரியமாகும்.

**பேராசிரியர் கலைவாணி இராமநாதன்** M.A, Ph.D.
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மலர் வெளியீட்டுக் குழு





உ

ஓம்

# " உதித்தனன் உலகம் உய்ய"



உலகியல் வாழ்வை நெறிப்படுத்துவது அறிவு. இது, அருளியல் அனுபவம் பெற்று இந்நிலவுலகில் வாழ்ந்த அனுபூதிமான்களின் அருட்கொடையால் விளைந்தது. உலகம், உயிர் இறைவன் என்ற முப்பொருள்களையும் முறையாக உணர்ந்த நம் முன்னோர்கள் உயிர் வாழ உணர்த்திய தத்துவங்கள் அநேகம்.

உலகின் அனைத்து நன்மை, தீமை களுக்கும் வினைகளே காரணம். எமது வாழ்வு அர்த்தம் பெற வேண்டுமெனில், அறத்தின் வழி நின்று தர்மம் பிசகாது எமது வாழ்க்கையை நடாத்த வேண்டும். இறையுண்மையை அறியும் நாட்டம் கொள்ள வேண்டும்.

இறையுண்மையை அறியும் நாட்டத்திற்கு ஆதாரமாய் அமைவது வழிபாடு. இறைவன் இத்தகையன், இந் நிறத்தன் என்று எழுதிக் காட்டொணாதவன். எனினும், இறைவழிபாட்டின் முதற்படி உருவ வழிபாடே. ஒரு நாமம், ஓருருவம், ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் சொல்லிப் பாடிப் பரவும் முறையே உருவ வழிபாடு.

இறைவன் திருவுருவை வெவ்வேறு வடிவங்களில் காணப்பெற்ற அருளாளர்கள் அவ்வடிவங்களின் சிறப்புகளை எல்லாம் திருமுறைப் பாடல்களில் எடுத்தியம்பினர். இப் பாடல்களில் அருளனுபவங்கள் வெளிப்பட்டன. திருவருள் நாட்டம் விளைவிக்கும் பயன்கள் உரைக்கப்பட்டன. உயிர் ஒழுக்கம் தரும் விழுப்பத்திற்கு இறைவழிபாட்டின் இன்றியமையாமையும், தேவையும் உணர்த்தப்பட்டன.

உலகியல் வாழ்வின் உண்மைகளை சற்குருவின் மூலமே அறிந்து கொள்ள முடியும். இறைவனே சற்குரு மூர்த்தம் கொண்டு திருமுறை ஆசிரியர்களினூடாகத் திருமுறைகளை அருளிச் செய்தான் என்பர். பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்ட பாடநூல்களின் முழுமுதற் கடவுளாகக் கொள்ளப்படுபவர் சிவம் ஆவார்.

சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகப் போற்றப்படுபவர் முருகன். இவ்வுலகின் மீது இறைவன் கொண்ட கருணையினால் உதித்தவரே முருகன். இவர் "அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு". சிவ ஜோதியிலிருந்து வெளிப்பட்ட ஆறு பொறிகளே ஆறுமுகசுவாமி ஆயின. சிவபெருமானின் ஐந்து முகங்களோடு சக்தியின் முகமும் சேர்ந்து ஆறுமுகங்களாயிற்று. ஆறாவது முகம் அதோமுகம் எனப் பெயர் பெற்றது. அதோ முகமே சித்சக்தியாகிய ஆறாவது அறிவுக்குப் பொருளாவது.

முருகன் மூன்று சக்திகளை உடையவர். இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி ஆகிய இம் மூன்றும் முறையே, இகம், பரம், வீடு என்பவற்றைக் குறிப்பவை. இச்சா சக்தியின் வடிவமாக விளங்குபவர் வள்ளியம்மை. போகத்தை விழையும் விழைவாற்றலைக் குறிப்பதாய் இச்சாசக்தி வடிவம் உள்ளது.

முருகனின் மற்றொரு வடிவமாக கிரியா சக்தியாய் விளங்குபவர் தெய்வயானை ஆவார். கிரியா சக்தி செயலாற்றலைக் குறிக்கும். முருகனின் மூன்றாவது சக்தியே ஞானாசக்தி. இச் சக்தியின் வடிவமாக விளங்குவது முருகன் திருக்கையில் உள்ள வேல் ஆகும். இது அறிவாற்றலைக் குறிக்கின்றது.

மொத்தத்தில், இன்றைய கல்விப் பொருளான அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்றையும் முருகனின் மூன்று சக்திகளும் குறிக்கின்றன. அறிவைக் குறிப்பதான வேலின் வடிவம் ஆழ்ந்த பொருளுடையது. ஆழமானதும், அகன்றதும், கூர்மையானதுமான அறிவாற்றலே அனைத்தையும் வெற்றி கொள்ள வல்லது என்பதை உணர்த்தவே வேலாயுதமானது நீண்ட தண்டு கொண்டு, அகன்று, கூரிய முனையுடையதாய் உள்ளது.

அஞ்ஞானத்தைப் போக்குவதே அல்லது வெல்வதே ஞானத்தின் தொழிற்பாடாகும். ஞானாக்கினியாக விளங்குபவன் முருகன். முருகனைப் பஞ்சபூதத் தொடர்புடையவனாக முருகன் தோன்றிய வரலாறு காட்டும். சிவஜோதியிலிருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகள் வானிலே தோன்றியபோது இவை வாயுவால் சுமந்து வரப்பெற்று கங்கையில் விடப்பெற்று, பின் சரவணப் பொய்கையில் முருகனாக வளர்க்கப் பெற்றன. இவ்வகையில் முருகன் தோன்றுவதில் தீ, வான், வாயு, நீர், பூமி ஆகிய பஞ்ச பூதங்கள் ஐந்தும் தத்தம் பணியை ஆற்றியுள்ளன.

அறிவாற்றலின் மேன்மையை உணர்த்தும் 'முருகன்' எனும் தெய்வ வடிவின் பொருள் இன்றைய ஆசிரியர்களால் நன்கு உள்வாங்கப்பட வேண்டும். ஆசிரியன் ஒரு ஞான விளக்குப் போன்றவன். கல்வி எனும் அகிலத்தின் அணையாத ஜோதியின் ஞானக் கதிர்களைப் பிள்ளைகளிடத்தே செறிவுறச் செய்பவன் ஆசிரியனே. ஆசிரியன் சிறந்தவொரு வழிகாட்டியாகத் திகழ வேண்டும். குருடன் குருடனுக்கு வழிகாட்டலும், யாசகன் யாசகனுக்கு விருந்திடலும் பொருந்தா என்பதால். தான் கற்பிக்கும் பொருள் குறித்த நிறைந்த அறிவு வேண்டற்பாலது.

ஆசிரியத் தொழிலுக்கு அடி அத்திவாரமாக அமைவது அறிவே. அறிவென்பது தெளிந்ததாக இருக்க வேண்டும். எந்த ஒரு தொழிலுக்கும் தொழில்சார் பொருளறிவு குறைவுபடின் அத்தொழில் சிறக்காது. இதனை உணர்த்தவும் கந்தபுராணத்திலே ஞானாசிரியனின் பொருளுணர்த்தும் கதையொன்று உள்ளது.

படைத்தல் தொழிலைப் புரிபவனான பிரமா, ஒரு சமயம் முருகனை சிறுவனெனக் கருதி அவரை வணங்காது சென்றார். அப்போது. பிரமாவின் அகந்தையை அடக்கத் திருவுளங் கொண்ட முருகன். பிரமாவை அழைத்து, அவர் புரியும் தொழிலை வினாவினார். படைத்தற் தொழிலைப் புரிவதாகக் கூறிய பிரமாவிடம் அத் தொழிலின் ஆதாரமாக விளங்கும் 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளைக் கூறுமாறு முருகன் கேட்டார். பிரமா 'திருதிரு' என முழித்த போது, பிரமாவைத் தலையிற் குட்டிச் சிறை செய்து படைத்தல் தொழிலைத் தாமே புரிந்தார்.

பின்பு, தேவர்கள் வேண்ட, முருகனிடம் சென்று பிரமாவைச் சிறை மீட்ட சிவனார். பிரணவத்தின் பொருளை முருகனிடம் வினாவினார். மறைபொருளை அறிய வேண்டும் எனின், முறையாகப் போதனை அமைய வேண்டுமெனக் கூறிய முருகன் ஞானாசிரியனாக வீற்றிருந்து சிவனாரின் காதில் பிரணவத்தின் பொருளை ஓதினார். இதன் காரணமாகவே 'தகப்பன் சாமி' என்றும். 'சுவாமிநாதன்' என்றும் முருகன் போற்றப்படுகின்றார்.

இக் கதையின் தத்துவம் என்றும் ஆசிரியர்களால் விளங்கிக் கொள்ள வேண்டியது. இதனையே ''சொல்லிய பாட்டின் பொருணர்ந்து சொல்லுவார்'' என்ற சொற்றொடர் உணர்த்துகின்றது. தான் கற்பிக்கும் பொருள் குறித்த ஆழ்ந்த அறிவு மாத்திரமன்றி, குழந்தைகளின் நுண்ணறிவின் அமைப்பையும், அதன் முக்கியத்துவத்தையும் பகுத்துணர உதவக் கூடியதான உளவியல் அறிவும் இன்று ஆசிரியருக்கு இன்றியமை யாததாகும். உளவியல் அறிவு பெற்ற ஆசிரியராலேயே பின்னடைவுள்ள பிள்ளை களின் பிரச்சினைகளை உணர்ந்து பரிகாரம் மேற்கொள்ள முடியும். குழந்தையின் சிந்தனையிலும், செயலிலும் ஆக்கத்திறனை உருவாக்கி, குழந்தையின் முழு ஆளுமையையும் வளர்ப்பதாக ஆசிரியப் பணி அமையும் போதே, ஆசிரியர் 'இறைபணி நிற்றல்' எனும் ஒழுகலாற்றைச் சரியாக விளங்கிக் கொண்டவராகின்றார். அவ்வேளை, ஒரு சமூ கத்தில் ஆசிரியரின் பொறுப்பு உணரப்பட்டு, அவர் வாழ் சமூகம் 'ஆசிரியப் பணி'யின் மேன்மையை போற்றும்.

'உலகை உய்விக்கும்' பணியாற்றும் ஆசிரியர்கள் மேன்மையானவர்கள் என்பதை உணர்த்துவதே 'உதித்தனன் உலகம் உய்ய' என்று முருக வரலாறு கூறும் கந்தபுராண அடியின் சிறப்பாகும்.

**கலாநிதி த. கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



உ

ஓம்

# கோபுர தரிசனம்

மனிதன் தன் வாழ்க்கையில் பல பிரச்சினைகள், துன்பங்கள் ஆகியவற்றைச் சந்திக்கும் போது மனம் துவண்டு போகிறான். இவற்றிலிருந்து விடுபட்டு மனநிம்மதியைப் பெற மனிதன் ஆலயத்திற்குச் செல்கிறான். இறை வழிபாட்டில் ஈடுபடுகின்றான். அவன் விரும்பிய மனநிம்மதியோடு துன்பங்களை வெல்ல வேண்டிய இறைஅருளும் ஒருசேரக் கிடைத்து விடுகிறது. மனிதனுக்கு வேண்டிய ஆத்மசக்தியைத் தரும் நிலைக்களனாக விளங்குகிறது கோவில். அதனால்தான் "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியும் வந்தது போலும்! இத்தகைய சிறப்பு வாய்ந்த கோவிலை ஆன்றோர்கள் சாதாரணமாகக் கட்டி வைக்கவில்லை. மனிதன் எங்கிருந்து பார்த்தாலும் அவன் கண்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவும் அவனுக்கு நினைவுபடுத்தும் விதமாகவும் அமைய வேண்டும் என்பதற்காகவுமே வானுயர்ந்த கோவில் கோபுரங்களைக் கட்டினர்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது பழமொழி என்பதைவிட அதை ஒரு வாழ்வியல் தத்துவமாய்க் கருதிட வேண்டும். ஆலய வழிபாட்டுக்குச் செல்ல இயலாதவர்கள் கூட, தூரத்தே இருந்து கோபுரத்தை வணங்கிச் செல்வதை இன்றைக்கும் காண முடியும். கோபுரங்களை ஸ்தூலலிங்கமாகவும், இறைவனின் பாதங்களாகவும் பாவித்தனர். கோபுர வழிபாடு முழுமையான ஆலய வழிபாட்டுக்கு இணையானது என்ற நம்பிக்கை காலம் காலமாய் இருந்து வருகிறது.

சிற்பசாஸ்திரத்தின்படி கோவில்களின் அமைப்பானது மனித உடலின் வடிவத்தில் அமைய வேண்டுமென வரையறுத்திருக்கின்றனர். இதனை "ஷேத்திரம் சரீர பிரஸ்தாரம்" என்பர். ஞானிகள், முனிவர்கள், சித்தர்கள் சிறந்த கோயில்களையும், அதில் தெய்வ திருவுருவச்சிலைகளையும் ஏற்படுத்தும் முறைகளை வகுத்துக் கொடுத்து கோயில் திசை நான்கிலும் விண்ணை முட்டும் பெரிய கோபுரங்களை நிர்மாணித்து அவற்றின் சக்தியால் உயிர்கள் நல்ல முறையில் வாழும் அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

ஆகம விதிப்படி கோயில் நிர்மாணித்து, அபிஷேகிக்கப்பட்டு, காலம் தவறாது கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபாடு நடந்து கொண்டிருக்கிற கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல் தங்கத்தாலும், செம்பினாலும் செய்யப்பட்ட கலசங்கள் தனது கூரிய முனைவழியாக ஆகாயத்தில் உள்ள உயிர்சக்தி என்று அழைக்கப்படும் பிராண சக்தியைக் கிரகித்து வெளிவிடுகிறது. அந்த



சக்தியை நம் உடல் பெறுவதால் புதுஉணர்வு, உள்ளத்தூய்மை, ஆன்மீக ஈர்ப்பு, நோயின்மை, நோய் எதிர்ப்புசக்தி அடைகிறோம்.

கர்ப்பக்கிரக கோபுரத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள கலசங்கள் பிராணசக்தியை கிரகித்து கலசத்தின் நேர் கீழே உள்ள இறை பீடத்திற்கு இடையறாது அனுப்பிக் கொண்டிருக்கிறது. இந்த சக்தி பீடத்தின் அடியில் உள்ள தங்கத்தாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்ட மந்திர சக்கரங்கள், யந்திரங்களும் இந்த சக்தியை முழுவதும் ஈர்த்து விடுகின்றன.

இந்த பிராணசக்தியின் அளவை மேலை நாட்டு விஞ்ஞானி போவிஸ் கண்டுபிடித்துள்ளார். இதிலிருந்து வெளிப்படும் சக்தியை (14,000 போவிஸ்) நம் உடலில் உள்ள உயிர்அணுக்கள் தாங்க இயலாது. எனவே தான் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலை அந்த சக்தியை பிரித்து ஒன்பது முனைகள் வழியாக வெளியேறச் செய்கிறது. அந்த சக்தி கர்ப்பக் கிரகத்தின் வாயில் வழியாக வெளியே வருகிறது. அங்கு இறைவனை வணங்கும்போது நம்மீது படுகிறது. அப்போது தீபாராதனை காட்டப் படும்போது, அந்த சக்தி தூண்டப்பட்டு கைகளை இணைத்து, மேலே உயர்த்தி வணங்கும் போது விரல்கள் வழியே அந்த சக்தி நம் உடம்புக்குள் ஊடுருவுகிறது. இதனால் ஆன்மீக உணர்வு நம்மீது பரவி மனதில் உள்ள கவலைகள், குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள், உடல் நோய்கள் அனைத்தையும் போக்கி ஆனந்தத்தைக் கொடுக்கிறது. கர்ப்பக் கிரகத்தில் கிழக்கு அல்லது வடக்குத் திசைகளில் நீர் செல்லும் பொருட்டு ஒர் துவாரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் துவாரத்தின் வழியே செல்கின்ற நீரிலும் கலந்து பிராண சக்தி வெளிப்படுகிறது. அங்கு அமைக்கப்பட்டுள்ள சதுரவடிவத் தொட்டியில் விழும் நீரை கோயிலை வலம் வரும் நாம் அந்த இடத்தில் வந்தவுடன் எடுத்து கண்ணிலும் சிரசிலும் ஒற்றிக் கொள்கிறோம். அந்தச் சில நிமிடங்களில் நம்மீதும் பிராணசக்தி பரவுகிறது. இந்த பிராணசக்தி வெளிப்பட்டுக் கொண்டு இருப்பதால்தான் சிலையின் குறுக்கே செல்லக்கூடாது. சிலையின் பக்கவாட்டில் தான் செல்ல வேண்டும். சிலையை விட்டு விலகி நிற்பதுடன், அபிஷேகம் செய்யும்போது கைகள் சிலைக்கு மேல் செல்லக்கூடாது. ஒருகாலை வெளியிலும், மறுகாலை கர்ப்பக்கிரகத்தின் வாயிலிலும் வைக்கக்கூடாது. கர்ப்பக்கிரகத்திற்குள் இரும்பாலான எந்தப் பொருளையும் பயன்படுத்தக் கூடாது என முன்னோர்கள் விஞ்ஞானத்தின் அடிப்படையில்தான் கூறியுள்ளனர்.

கோபுர கலசத்தில் ஒன்பது வகை தான்யங்களும் வைக்கப்படும். இவ்வுலகம் அழிந்தாலும் மீண்டும் இவ்வுலகத்தை தோற்றுவிக்கும் விதையாக கோபுரம் திகழ்கின்றது. கோவிலுக்குச் செல்ல முடியாமல் வேலையாக உள்ளவர்களும் உடல்நிலை சரியில்லாதவர்களும் கோபுர தரிசனமாவது செய்து பலன் பெறலாம். இக்கோபுர தரிசனத்தை பார்க்கும் நேரத்தைப் பொறுத்து பலன்களும் அமைகின்றது.

**காலையில் கோபுர தரிசனம் - நோய் நீக்கும்.**

**மதியம் கோபுர தரிசனம் - செல்வ வளம் பெருகும்**


**மாலையில் கோபுர தரிசனம் - பாவம் போக்கும்.**

**இரவு கோபுர தரிசனம் - வீடுபேறு கிடைக்கும்.**

ஊரில் கோயில் கோபுரத்தைவிட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் இருந்தது. கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களிலும் அதில் இடம்பெற்றுள்ள தானியங்களும், உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை (Earth) கலசங்களுக்குக்

கொடுக்கின்றன. (நெல், கம்பு, கேழ் வரகு, தினை, வரகு, சோளம், மக்காச் சோளம், சாமை, எள்) ஆகியவற்றைக் கலசங்களினுள் வைத்துள்ளார்கள். குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாக வைத்தார்கள். காரணம் ஆச்சரியமாக இருக்கிறது. 'வரகு' மின்னலைத் தாங்கும் அதீத ஆற்றலைப் பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகின்றது. ஒரு இடத்தில் எது மிக உயரமாக உள்ளதோ அதுவே அந்த இடத்தின் இடிதாங்கி. அதுதான் முதலில் மின்னலின் தாக்கத்தை ஈர்க்கும். எனவே ஊரின் உயர்ந்த கட்டிடமாக திகழும் இக்கோபுரம் மின்னல் தாக்கத்தில் இருந்தும் ஊரைப் பாதுகாத்துக் கொள்கிறது.

எந்த ஊராயினும் மனிதன் கோவிலைத் தேடிச் செல்கையில். கோவிலை நெருங்கும் முன்பே கோபுரம் அவன் கண்ணில் பட்டு விடும். ஏனெனில், இறைவன் அங்கு குடி கொண்டுள்ளான் என்பதை கோபுரங்கள் எப்போதும் அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் மட்டுமல்லாமல் உலகில் எல்லா ஜீவராசிகளுக்கும் இடம் உண்டு என்பதையும் எல்லா உயிரினங்களிலும் இறைவன் இருக்கின்றான் என்பதை நமக்கு உணர்த்தும் விதமாகக் கோவில் கோபுரங்களில் எல்லா வகையான ஜீவராசிகளின் உருவங்களும் அடங்கியிருக்கும். பல கோவில்களில் கோபுரத்தின் மேலே உள்ள மாடங்கள் ஐந்து என்ற ஒற்றைப் படை எண்ணில் அமைந்திருக்கும். இதில்தான் மானுடப் பிறப்பின் அறிவுத் தத்துவம் அடங்கியிருக்கிறது. படைப்பில் உயர்ந்தவனாக விளங்குபவன் ஆறறிவு படைத்த மனிதனே. எவ்வளவோ பிறப்புக்களில் செய்த புண்ணியம் தான் நமக்கு இந்த மானுட உடல்கிடைத்திருக்கிறது. இந்தக் கருத்தை,





"நாலுவகை யோனியிலும் எழுவகை தோற்றத்
- திலும் ஈனினமாக

மேலுகந்த மானிடந்தா னெடுப்பவே அருமையாய்
-மெய்யனாகிப்

பாலுபோல் மனமுடைத்தாய்ப் புண்ணியமே
-மிருந்துபவங் கீழாய்த்தள்ளி

நூலணர்வதருமை நெஞ்சே! இருவினையிலொரு
-வினையை நொறுக்கித்தானே"

என்ற ஞானசார நூலின் வரிகள் அழகாக எடுத்துரைக்கின்றது. மனிதன் ஆறறிவு படைத்தவன். இந்த ஆறாவது அறிவின் துணை கொண்டே அவன் இறைவனை உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் ஐந்து அறிவு என்ற நிலையைத் தாண்டித்தான் ஆறாம் அறிவு வருகிறது. இதில், ஓரறிவுடையவை என்ற பட்டியலில் புல், மரம், செடி இவை அடங்கும். அடுத்து வரும் ஈரறிவு என்ற பிரிவில் சிப்பி, சங்கு, நத்தை முதலியவை உள்ளன. மூவறிவில் கறையான், எறும்பு இவையும் நாலறிவில் தும்பி, வண்டு ஆகியவையும், ஐந்தறிவு என்ற பட்டியலில் பறவை, மிருகங்களும் அடங்கும். இந்த ஐந்தறிவின் பிரதிபலிப்பாகத்தான் கோபுரத்தில் 5 மாடங்கள் உள்ளன. ஒவ்வொரு மாடமும் தாண்டி வரும் போது, இறைவனுக்கும் நமக்கும் உள்ள நெருக்கம் அதிகரிக்கின்றது. அறிவின் நிலை அதிகரிக்க அதிகரிக்க மாடத்தின் அளவும் பெரியதாகின்றது. ஆறாம் அறிவின் துணை கொண்டு மனிதன் இறைவனை அடைய முயற்சிக்க வேண்டும். ஆறாம் அறிவு உள்ள மனிதனாகப் பிறந்திருப்பது எவ்வளவு பெருமை? எவ்வளவு புண்ணியம்? இதை மனிதன் ஒவ்வொரு தடவையும் நினைவில் வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நம் முன்னோடிகள் உயர்வான கோவில் கோபுரத்தையும், அதன் மாடங்களையும் இணைத்து வைத்துள்ளனர்.

உயர்ந்தவை எல்லாம் தெய்வீகமே. உயர்ந்து நிற்கும் பிரமிட்டுக்கள் போல், கோவில் கோபுரங்களும் பிரமிடு தத்துவத்தில் தான் இயங்குகின்றது. எல்லை இல்லாமல் பரவி நிற்கும் பிரபஞ்ச ஆற்றலை ஓரிடத்திற்கு குவித்துத் தருவதற்கு கோபுரங்கள் பயன் படுகின்றது. அப்படி அமைக்கப்பட்ட கோபுரங்கள் வெறும் சக்தி மையங்களாக மட்டும் அல்லாமல் சமயச் சின்னங்களையும் அக்காலத்தில் நிலவிய பழக்க வழக்கங்களையும், பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் சிற்பங்களாக செதுக்கி வருங்கால சந்ததிக்கு வழங்கவும் கோபுரங்கள் பயன்படுத்தப் பட்டது.

அவனன்றி அணுவும் அசையாது என்பார்கள். அணுவுக்குள் அணுவாய் இருந்து அண்டமெல்லாம் ஆட்டிப்படைக்கும் இறைவனின் இருப்பிடம்தான் ஆலயங்கள்.

**திருமதி தர்ப்பணா சுதர்சன்** B.A. (Hons), MA.

உ

ஓம்



# துடக்கும் தொந்தரவும்

துடக்கு என்ற ஒரு விடயம் இந்துக்கள் மட்டுமே கவனிக்கின்ற ஒன்று. ஆசௌசம் எனக்கூறப்படும் இந்த விடயம் இந்துக்களின் அனுட்டானத்தில் இருப்பதால் அவர்கள் மிகவும் நுணுக்கமாகப் புனிதம் பேணு பவர்களாக விளங்குகிறார்கள். அதே நேரம், இன்று இந்தத் துடக்கு என்பது பலருக்குப் பெரும் தொந்தரவான ஒன்றாகும். புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகவும் உள்ளது.

துடக்கை யார் எந்தெந்த நேரத்தில் எவ்வளவு காலம் பேண வேண்டுமென்ற தெளிவு பலரிடம் இல்லாமல் உள்ளது. இது பலருக்குச் சிரமம் தருவதாக இருப்ப துடன், சிலருக்கு வசதியாகவும் உள்ளது. தேவைக்கேற்ப விரும்பிய படி துடக்கைப் பேணலாம். விரும்பிய நாளில் துடக்கைக் கழிக்கலாம் என்ற அளவிற்கு அது ஒரு கேலிக்கூத்தாகவும் ஆகி வருகிறது.

நமது சமய நம்பிக் கைகள், சடங் காசாரங்களின் நடைமுறை என்ப வற்றினை நமது அடுத்த தலை முறை யினரிடம் இயல்பாகவே கேள்விக்குறி தோன்றி வரும். இன்றைய நாளில் துடக்குப் பற்றிய அவர்களின் கேள்விகளுக்கு பதில் கூற முடியாமல் நம்மவர்கள் திகைக்கின்ற நிலைமை அவ தானிக்க முடிகின்றது. இதனால் துடக்கு என்பது தேவையற்ற ஒன்று என்றும் அலட் சியப் போக்கும் தோன்றக் காண்கின்றோம்.

எனவே, பழைய தலைமுறையினருக் கும் புதிய தலைமுறையினருக்கும் பலமாக நிற்கும் இடைநிலையினரான நாம் நன்கு சிந்தித்து ஒரு தெளிவைப் பெற வேண்டிய வர்களாக இருக்கிறோம். மரபுவழிப்பட்ட இதன் ஆரம்ப விளக்கங்களும், காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க நாம் மேற் கொள்ளக் கூடிய பொருத்தமான நடை முறைகளும், முடிந்த அளவில் அறிவியல் - விஞ்ஞான ரீதியாக இவ்விடயம் தொடர்பாக நாம் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் என்பனவும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

முதலில் ஒரு விடயத்தில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் வேதம், சிவாகமம், தர்மசாஸ்திரங்கள், இதிகாச புராணங்கள் முதலியவற்றை நாம் நம்பி அவற்றில் சொல்லப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற நிச்சயம் நமக்குள் ஏற்பட வேண்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் ஆன்மாக்கள் கடைத்தேற அருளுகிறார். அதற்கு இந்த நூல்கள் உதவுகின்றன என நம்பி முன்னோர்கள் வழியில் நாமும் நடந்து நல்லொழுக்க நெறியில் வாழ்ந்து தர்மம், பேணி, இவ்வுடலையும் மல அழுக்குகளையும் நீக்கி இறைவனுடன் ஐக்கியமாகவேண்டும் என்ற அசையாத நம்பிக்கையும் விசுவாசமும் இருந்தால்தான் நாம் தொடர்ந்து இவ் விடயங்களை ஆராய்வதில்



பயனுண்டு. அரை குறை நம்பிக்கையுடன் இவற்றிலீடுபட்டு ஐயங்கள் பலவற்றை வளர்த்துக்கொண்டு அக்கறையில்லாமல் ஆசாரங்களைக் கைக்கொள்வதை விட முற்றாக இந்த நம்பிக்கைகளைக் கைவிட்டு "பகுத்தறிவு வாதி" என்ற பெயருடன் நவீன வாழ்க்கையை முழுமையாக ஏற்றுக்கொள்வது மேல்.

பெண்ணானவள் தீட்டுக் காலங்களில் சேவைகளில் ஈடுபடுவதால் அவள் சேவையாற்றும் பல நிறுவனங்களில் உள்ள இயந்திரங்கள் முதலியவற்றில் கோளாறுகள் ஏற்பட்டிருப்பதையும், உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருப்பதையும் மேலைத்தேய விஞ்ஞானிகள் சிலர் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிந்துள்ளார்கள்.

தீட்டு, துடக்கு முதலிய ஆசாரக் குறைவுடையோர் கலந்துகொள்ளும் வைபவங்கள் பல ஏதாவது குழப்பங்களுடன் முடிந்துள்ளதை அனுபவத்தில் பலர் கண்டுள்ளனர். உடல் சம்பந்தமாக மட்டு மல்லாமல், மனம் சம்பந்தப்பட்டதாகவும் இவ்விடயம் இருப்பதால், மனோதத்துவ ரீதியாக இவ்விடயம் பல பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லது என்பதை மேலைத்தேய விஞ்ஞானிகள் பலர் இன்று ஒப்புக் கொள் கின்றனர். இவ்விடயங்களை நம்மவர்கள் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

துடக்குக் காலத்தில் ஆலயத்துக்குச் செல்லுதல், கிரியைகளில் பங்குகொள்ளுதல், விரதம் இருத்தல், சுப காரியங்களில் கலந்து கொள்ளல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

இங்கு மிக முக்கியமான ஒரு விடயம் கவனிடக்கப்பட வேண்டும்.

ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் நேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு சீரணிக்கும் வரை ஆசௌசம். அறிந்து புசித்தால் ஆசௌசியின் ஆசௌசக் கழிவுநாள்வரை அவ்வுணவு புசித்தவரும் ஆசௌசம் காக்க வேண்டும்.

சில ஊர்களில் மரணச்சடங்கு நிகழ்ந்த மறுநாள் உரிமைச்சோறு உண்ணுதல்" என்று அயலவர்கள் யாவரையும் வருந்தி அழைத்து உணவு கொடுப்பார்கள். "குறை நினைப் பார்களே" என்று அயலவர்களும் அங்கு சென்று வயிறு புடைக்கத்துடக்குச்சோறு உண்பார்கள். இதேபோல்"எட்டுச்செலவு" என்ற பெயரிலும் "மச்சப் படையல்' என்ற பெயரிலும் நடைபெறும் விருந்துபசாரங்களிலும் யாவரும் கலந்து கொள்வார்கள். ஆனால், அதனால் தங் களுக்கும் துடக்கல்லவா என்ற எண்ணம் சிறிது மின்றி அடுத்த நாளே ஆலயம் சென்று சங் கல்பம் செய்தல் முதல் சாமி காவுதல் வரை சகல சுப காரியங்களிலும் பங்குபற்றுவார்கள். இது அறியாமையின் விளைவா? அல்லது அலட்சியத்தால் வரும் ஆணவச் செயலா?

இங்கு மிக முக்கியமாக விளங்கிக் கொள்ளக்கூடிய சில விடயங்கள் உள்ளன.

1. உரிமைச்சோறு என்பது துடக்குரிமை உள்ளவர்ளுக்கு மட்டுமே உரியது. மற்ற வர்கள் அதில் கலந்துகொள்ளாமல் இருக்க வேண்டும். கலந்துகொண்டால் முப்பது நாளும் துடக்குக் காக்க வேண்டும்.
2. இறந்தவர்கள் தெய்வ நிலைக்குப் போய் விட்டார்கள் என்பதே நமது நம்பிக்கை. அவர்களுக்கு மச்சம், மாமிசம், படைப்பது என்பது சற்றும் பொருத்தமில்லாத ஒன்று. பிரேத நிலையிலிருக்கும் போது அவர் களுக்கேற்படும் பெரும்பசி, பெருந்தாகம் என்பன தீருவதற்காகப் பெரும் படையல் (பிரபூத பலி) ஒன்று அவசியம் செய்யப் பட வேண்டும் என்பதற்காக "எட்டுச் செலவு" நிகழ்கிறது. இந்தப் படையல் அனைத்து உணவுப் பொருட்களையும் கொண்டதாகவும் அதிகமாகவும் இருக்க வேண்டும் என்பதே முக்கியமல்லாமல்,

இறந்தவர்களுக்குப் பிரியமான அனைத்தையும் கொடுத்தல் எனப் பொருள் படாது. சுத்த போசனமே இங்கு படைக்கப்பட வேண்டும். அதனைத் தொழும்புக்காரர் (முன்னாளில்) எடுப்பது அல்லது கடலில் சேர்ப்பது என்பதே முறை. உறவினரும் அயலவரும் அதனை ஒரு விருந்தாக உண்டு மகிழ்வது பாப காரியம். இன்று பல இடங்களில் மச்ச மாமிசத்துடன் மதுவும் சேர்த்து அமைதியாக ஆன்மீக ரீதியில் நடத்த வேண்டிய நிகழ்வு பிறந்த நாள் கொண்டாட்டம் போலக் கேளிக்கைகளுடன் நடைபெறும் கேலிக் கூத்தைக் காணலாம். (அந்தணர்கள் வீடுகளில் நடக்கும் தசாகம் என்னும் கல்லெடுப்புக் கிரியையில் இறந்தவரை நினைத்துப் படைக்கப்படும் உணவு கல்லோடு சேர்த்துக் கடலில் போடப்படுகின்றது. அதை உறவினர்கள் உண்பதில்லை.)

3. ஜனன மரணம் நடந்த வீட்டிற்குள் செல்லுதலும் அவர்களுடன் கலந்து பழகுதல், அவர்களிடம், நீர் பருகுதல், உணவுண்ணல் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும்.

4. இன்று பலரும் தெரிந்துகொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விடயம் உண்டு. உரிமைச்சோறு சாப்பிடுதல் என முன்னர் குறிப்பிட்டதுபோல, துடக் குரிமையுடையோர் மட்டுமே வாய்க்கரிசி போடுதல், குளிப்பாட்டுதல், சவம் தூக்குதல் முதலியவற்றில் ஈடுபட வேண்டும். அச்செயல்களும் துடக்கு என நூல்கள் விதிக்கின்றன.

31ஆம் நாளில் வீட்டிற்குப் புரோகிதர் (குருக்கள்) வந்து துடக்குக் கழித்தல் என்ற கிரியை செய்த பின்பே எம்மை துடக்குக் கழிகிறது. இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, துடக்குக் கழிதலில் இரு அம்சங்கள் சரியாக அமைய வேண்டும். அதற்குரிய நாள் நிறைவு பெற வேண்டும். அதற்குரிய கிரியை நிறைவுபெற வேண்டும். உரிய நாளின்முன் கிரியை செய்து விட்டும் துடக்குக் கழிந்து விட்டது என நாம் திருப்தி கொள்ள முடியாது. உரிய நாள் கழிந்துவிட்டதுதானே என்பதால் கிரியை செய்யாமலே துடக்குக் கழிந்து விட்டது. என எம்மை நாம் ஏமாற்றிக் கொள்ள முடியாது. இரண்டும் சரியாக அமைய வேண்டும்.

இன்னும் சில தவறான நடை முறைகள் நம்மவர்கள் மத்தியில் இன்று காணப் படுகின்றது. “நான் இப்போது கொஞ்ச நாள் மச்சம் சாப்பிடுவதில்லை” என்றும் நான் தீட்சை கேட்டனான்' என்றும், 'தூரத்துச் சொந்தம் தானே' என்றும், “வெளிநாட்டில் தானே நடந்தது; கடல்கடந்தால் துடக்கில்லை தானே” என்றும் குறித்த நாளிற்குச் சில நாட்கள் முன்னதாகவே துடக்குக் கழிப்ப வர்கள் பலர் உள்ளனர். இவை யாவும் சாஸ்திர விதிப்படி பாப காரியங்களே. குறைந்த நாளில் துடக்குக் கழிக்கும் உரிமை பெற்றோர் பரம்பரை பரம்பரையாகச் சுத்த போசனராக உள்ள, சைவாசாரம் மிக்க தீட்சை பெற்ற குடும்பத்தவர் மட்டுமே.

ஆசௌசம் பற்றிய அடிப்படை நியதிகளை வீழிநாதர் இயற்றிய அகபஞ்சசஷ்டி நூல் வரையறுக்கிறது. வைத்திய நாத தீட்சி தீயம், ஆசௌச தீபிகை, யஜுர்வேதீய ஆபஸ் தம்ப அபரப்ரயோகம் முதலிய நூல்களும் காமிகாகமம், சுவாயம்புவ ஆகமம் என்பனவும் இந்த விபரங்களைத் தெளிவாகத் தருகின்றன.

காமிகாகமத்தில்,

விப்ரே சுத்திர் தசாஷஸ்யாத் ஷத்ரியெ த்வாதசர்நிகாத் த
தச பஞ்சாஷ்நிகாத் சுத்தி வைஸ்யே, சூத்ரே சமாசிகாத்”

என ஆசௌச நியமம் கூறுகிறது.



அந்தணர்களுக்குப் பத்து நாட்களிலும், க்ஷத்திரியர்களுக்கு 12 நாட்களிலும், வைஸ்யர்களுக்கு 15 நாட்களிலும், சூத்திரர்களுக்கு ஒரு மாதத்திலும் துடக்கு நீங்குகிறது. என்பது இதன் பொருள்.

இதே கருத்தைச் சுவாயம்புவ ஆகமமும் கூறுகிறது.

இந்நாளில் க்ஷத்திரியர், வைஸ்யர் என்ற வகுப்பினர் உரிய முறைப்படி காண்டலரிது. மாமிச போசனம் நீக்கிச் சமய, விசேட தீக்ஷைகளைப் பெற்று நித்ய சிவபூஜை வழிபாட்டுடன் இருக்கும் சைவக்குருமாரும் , வேறு சிலரும் வைசிய வகுப்பார் போல் நோக்கப்படலாம். ஏனையோர் யாவரும் அந்தணர் சூத்திரர் என்னும் இரு வகுப்பில் அடங்குவர்.

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்குப் பத்துநாள். மச்ச மாமிச போசனமின்றி சைவசமய ஆசாரப்படி ஒழுகும் சற்சூத்திரருக்கு 15 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசம் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் நியதிகள்.

ஆலயங்களில் தொண்டு புரியும் சிவகன்மருக்கு 20 நாளும், திராவிட கானம் பாடவல்லாருக்கு 15 நாளும் ஆசௌசம் என்ற ஒரு குறிப்பும் உண்டு. இவ்வெல்லை அவர்கள் சுத்த சைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இன்று ஆலயத்தில் தொண்டு செய்யும் பலர் காலையில் இறைச்சிக் கடையிலும், மாலையில் ஆலயங்களிலும் காணப்படும் நிலையில், பழைய வழக்கம் எனக் காரணம் காட்டி, அவர்கள் பதினாறு அல்லது இருபது நாளில் துடக்குக் கழிக்கலாமா என்பது அவர்கள் தம்மைத் தாமே கேட்க வேண்டிய கேள்வி.

பாரதத்தின் சில பிரதேசங்களில் 21ஆம் நாள் துடக்குக் கழிக்கும் வழக்கம் நிலவுகின்றது. யாழ்ப்பாணத்தில் சிலர் 16ஆம் நாள் துடக்குக் கழிக்கின்றனர். மேலே குறிப்பிட்ட விதிவிலக்கைத் தமக்குச் சாதகமாகச் சிலர் எடுத்துக்கொள்கின்றனர் அன்றி இதற்குச் சாஸ்திரப் பிரமாணம் இல்லை.

பிறப்பு, இறப்புத் தொடர்பாகத் துடக்குக் காத்தல் என்ற பாரம்பரிய மரபு உடல் சம்பந்தமாக மட்டுமன்றி, மன உணர்வு தொடர்பாகவும் கைக்கொள்ளப்படுவது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

உயிர் அல்லது ஆன்மா உடலோடு தொடர்புகொண்டு, பூமியில் பிறக்கின்ற நிகழ்வும், மறுதலையாக உடலை விட்டு உயிர் பிரிந்து போகின்ற நிகழ்வும் மிக முக்கிய மாமனவை. ஒன்று இன்பமானது. மற்றது துன்பமானது. இரண்டுமே மன உணர்வுகளை அதிகம் பாதிக்கத்தக்கவை. நேரெதிரான இவ்விரு சம்பவங்களிலும் ஒரு பொதுமை காணப்படுகிறது.

அடுத்துவரும் வாழ்க்கை நன்றாக அமையவேண்டும் என எதிர்பார்த்து நல்ல அடிப்படைகளை ஏற்படுத்தித் தெய்வீக நிலையில் ஆசிவேண்டுதல் என்பதே அந்தப் பொது இயல்பு.

இந்நிகழ்வுகள் அந்த சுற்றாடலிலும், மிக நெருங்கியவர்கள் தொலைவில் இருந்தாலும், அவர்களையும் பாதிக்கக் கூடியவை. நுண்மையான சில அதிர்வுகள் அல்லது அருட்டுணர்வுகள் தொடர்பானவை என இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு மாத காலம் இந்தத் துடக்கு நீடிக்கிறது. குழந்தை பிறந்தால் அக் குழந்தையின் தாய் தந்தையர்க்கும், தந்தையின் சகோதரர்கள், பெற்றோர் மற்றும் ஆண்வழி உறவினர்களுக்கும் இத்துடக்கு உண்டு.

இதேபோல ஒருவர் இறந்தால் இறந்தவரின் ஆண்வழி உறவினர்களுக்கு அத்துடக்கு உண்டு.

ஒரு பெண் திருமணமானபின் கணவன் வீடு செல்லுதல் என்ற பழைய முறை இன்று யாழ்ப்பாணத்தில் அதிகம் பின்பற்றப் படுவதில்லை. கணவன்தான் மனைவியின் வீட்டில் மாமன் - மாமியுடன் வாழ்கிறார்.

இந்நிலையில் துடக்குக் காத்தலை உரிய முறையில் பேணுவதிலும் சிக்கல் நேருகிறது. குழந்தை பிறந்ததும் ஒரே வீட்டில் வாழ்கின்ற காரணத்தால் குழந்தை பெற்ற பெண்ணின் பெற்றோர் ஆண்வழித்தொடர்பு இல்லா விட்டாலும் துடக்குக் காக்க நேருகிறது. ஆனால் குழந்தையின் தந்தையுடைய பெற்றோரும் சகோதரர்களும் உண்மையான துடக்குக் காரர்கள்.

இன்னொரு விதமாகப் பார்த்தால் அந்த ஆண்மகனது சகோதரனுக்குக் குழந்தை பிறந் தால், அந்தக் துடக்கு அவனுக்கு மட்டு மல்லாமல் அவனது மனைவிக்கும் உண்டு எனப் புரிந்து கொள்ள வேண்டும். என்ரை மனிசன்ரை தம்பிக்குத்தானே துடக்கு என எண்ணும் பெண்களும் தமது தந்தையின் துடக்கைக் காக்கும் பெண்களும் உள்ளனர்.

திருமணம் செய்த ஒரு பெண்ணுக்கு அவளது பெற்றோர் மற்றும் சகோதரர்களின் துடக்கு இல்லை என்பதும், அவளது கண வனுடைய பெற்றோர். சகோதரர்களின் துடக்கே உண்டு என்பதும் கவனிக்க வேண்டும்.

பெண்கள் ருதுவாகும்போதும் தீட்டு ஒன்று உண்டு. ஆனால், அது அந்தப் பெண்ணை மட்டுமே சாரும். பூப்புத்தீட்டு குடும்பத்தலைவரையோ உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாதவிலக்காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்குத் தீட்டு இல்லை.

ஆனால், அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும், மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும், ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்பு படுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

பெண் ருதுவாகி 7ஆம், 9ஆம், 11ஆம் நாள் அவளுக்குத் தோய வார்த்து வீட்டில் துடக்குக் கழித்தல் செய்ததும் துடக்கு நீங்கிவிடுகிறது.

மாதவிலக்குக் காலத்தில் ஒரு பெண் நான்கு நாட்களும பூரணமாக விலக்கப்பட்ட வளே. அந்த நாட்களில் அவள் சுப காரியங்கள் எதற்கும் தகுதியற்றவளாகின்றாள். அவள் தனியே ஒதுங்கி இருப்பது அவசியம். ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களில் கலந்து கொள்ளலாம்.

20ஆம் நாளின் மேல் பூப்பு வரின் மேற்கூறிய முறையில் கடைப்பிடிக்கலாம். 20ஆம் நாளின் முன் பூப்பு வரின் ஸ்நானத் தினால் சுத்தமாகும். அதை மாதவிலக்காகக் கொள்வதில்லை.

ஆசௌசம் பற்றிய மேலதிக விபரங்களையும் சிறப்பு விதிகளையும் விபரம் தெரிந்தோரிடம் கேட்டும். நூல்களில் படித்தும் நன்கு அறிந்து தவறின்றிக் கைக் கொண்டு நமது பாரம்பரிய ஆசார ஒழுக்கங்களைப் பேணுவோமாக.

**கோப்பாய் சிவம்.**

ஞானச் சுடர் பங்குனி 2008,
சந்நிதியான் ஆசிரம
கலை பண்பாட்டுப் பேரவையின் மாத வெளியீடு

## மூத்த உறுப்பினர்



## தொண்டர் சபை உறுப்பினர்கள்





உ
ஓம்

# யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு நிகழ்வுகளில் பொதுவாகத் தோன்றுகின்ற சில ஐயங்களுக்கான விளக்கங்கள்



**நமது இல்லத்தில் திருமணத்திற்கு நாள் வைத்தபின் இன்னொருவரின் திருமண விழாவிற்கு நாம் போகலாமா?**

தாராளமாகப் போகலாம். அதுவும் மங்கல காரியம். இதுவும் மங்கல காரியம். இரு பகுதியினரும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதும் போய் வருவதும் அவசியமான தொன்றே. எவ்வித தப்புமில்லை. ஆனால் திருமணத்திற்குப் பொன்னுருக்கல், பந்தற்கால் நடுதல் ஆகிய வைபவங்கள் நடைபெற்றால் அதன் பின் மணமகன், மணமகள் இருவரும் மட்டும் பொதுவாக எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருத்தல் வேண்டும் என்பது நடைமுறையிலுள்ளது. கண் திருஷ்டி முதலிய வற்றைக் கருத்திற் கொண்டு இவ்வழக்கம் வந்திருக்கலாம்.

**திருமணநாள் குறித்தபின் வீட்டில் முன்னோர் களின் திதி வந்தால் அந்த நாளில் திவசம் செய்யலாமா?**

அவசியம் செய்யவேண்டும். திவசம் முதலியன அமங்கலமானவை எனப் பலர் தவறாக நினைத் துக் கொண்டிருக்கி றார்கள். அப்படி யன்று, திருமண தினத்தில் ஆரம்பத்தில் அந்தணர்களுக்கு அரிசி காய்கறி தானமாக வழங்கும் நிகழ்வு ஒன்று நடைபெறுவதைப் பார்த்திருப்பீர்கள். அதனை நாந்தி சிரார்த்தம் என்பர். தமது வம்சத்தவர்களின் மங்கல நிகழ்வைக் காணவும் ஆசி வழங்கவும் ஆவலுடன் வருகின்ற நமது முன்னோர்களான பிதிர்களின் ஆசி வேண்டியே அந்த நிகழ்வு நடைபெறுகின்றது. எனவே மங்கல நாள் குறித்தபின்திவசம்நடத்துவதில்எவ்விததவறும் இல்லை. அதனைச் செய்யாமல் விடுவதுதான் மாபெரும் தவறு.

**புதுமணத் தம்பதிகள் திருமணத்தின்பின் எப்போது முதல்முதல் கோவில் வழிபாட்டிற்குப் போகலாம்?**

திருமணச் சடங்கு முடித்தவுடனேயே அருகிலுள்ள ஆலயத்திற்குச்செல்கின்றவழக்கம் சிலரிடம் உண்டு. அது வரவேற்கத் தக்கதே. அது தவறினால் அடுத்தநாள் போவதும் உண்டு. ஆனால், நாலாம் சடங்கு நாளில் தம்பதிகள் எண்ணெய் தேய்த்து முழுகுதல் பழைய வழக்கம். அவ்வாறு அதனைச் செய்தபின் ஆலயம் செல்வது மிகவும் பொருத்தமானது.

**புதுமணத் தம்பதிகள் எண்ணெய்க் காப்பு சாத்தலாமா?**

இது போன்ற புதுப்புது ஐயங்களைப் பலர் கிளப்பிவருவது சிரிப்புக்கிடமாயுள்ளது. அதைச் செய்யலாகாது. இதைச் செய்ய லாகாது என வீண் புரளிகளை எழுப்புவதற் கென்றே சிலர் அவதார மெடுத்துள்ளனர்.

புதுமணத் தம்பதிகள் தேர்த்திருவிழா பார்க்கக்கூடாது என்பது மட்டுமே பழைய வழக்கிலுள்ளது. தேர்த்திருவிழா, அழித்தல்

தொழிலுடன் சம்பந்தப்பட்டது என்பதால் நமது முன்னோர் அவ்வாறு தடுத்திருக்கலாம். அவ்வழக்கத்தினைத் தொடர்ந்து கைக் கொள்வது நலமே. ஆனால், புதுமணத்திற்கும் எண்ணெய்க் காப்பிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. தாராளமாக அவர்கள் சுவாமிக்கு எண்ணெய் சாத்தி வழிபடலாம்.

**இரு புதுமணத் தம்பதிகள் ஒருவரை ஒருவர் எதிர்கொள்வது ஆகாது என்கிறார்களே...**

இது தவறான ஒரு நம்பிக்கை. மயானத்திற்குச் செல்லும் மையம். இன்னொரு மையத்தை எதிர்கொள்ளக்கூடாது எனச் சொல்லப்படுவதுண்டு. அவ்வாறு நிகழின் அது இன்னும் துன்பங்களைத் தரும் எனப் பெரியோர் கூறுவர். இது சகுனத்தின் அடிப்படையில் கூறப்பட்டதாகலாம்.

ஆனால், இன்று பெரிய ஆலயங் களில் ஒரே நேரத்தில் பல திருமணங்கள் நடைபெறுவது வழக்கமாக உள்ளது. அத்தகைய நேரத்தில் பல புதுமணத் தம்பதியர் ஒருவரை ஒருவர் எதிர்கொள்வது மிகச் சாதாரணமாக நிகழ வாய்ப்புண்டு. எனவே இதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என எதிர்பார்ப்பது பொருத்தமானதாகப் பட வில்லை.

எண்ணெய்க் காப்பில் கலந்து கொள்வோர் எத்தனை நாட்களுக்கு சுத்த போசனராக இருக்கவேண்டும்? (மச்சம், மாமிசம் உண்டவர்கள் எண்ணெய்க் காப்பில் கலந்துகொள்ள முடியாதல்லவா?)

இது நகைப்புக்குரிய ஒரு கேள்வி. சைவ சமயத்தவர்கள் என்றாலே அவர்கள் எந்நாளும் சுத்த போசனமுடையவர்களாகத் தானே இருக்கவேண்டும். தவறு என்று நன்றாகத் தெரிந்துகொண்டு மச்சம், மாமிசம் உண்போர் அதைச்சாப்பிட்டுவிட்டு எதையும் செய்யலாம் தானே! இன்றைய சைவ அன்பர்களுக்கு முன்புபோல இவ் விடயங் களில் அதிக பயம் இல்லை. கூதல் விட்டுப் போய்விட்டது. காலையில் மச்சம் சாப்பிட்ட பலர் மாலையில் கோவில் சென்று சுவாமி காவுகிற சந்தர்ப்பங்களும் உண்டு. (அதனால் தான் இன்று நமக்கு இந்த நிலை)

பொதுவாக, எண்ணெய்க் காப்பிற்கு முதல்நாளும், அன்றும், அடுத்த நாளும் என மூன்று நாட்களாவது சுத்த போசனராக இருத்தல் அவசியம்.

**மனைவி மாதவிலக்காக இருக்கும் நாட்களில் கணவன் கோவிலுக்குப் போகலாமா?**

மாதவிலக்கு என்பது அந்தப் பெண்களுக்கு மட்டும் நான்கு நாட்களுக்கு உள்ள தீட்டு ஆகும். ஐந்தாம் நாள் எண்ணெய் தேய்த்து அல்லது பால் வைத்து முழுகியபின் அவள் சுத்தமாகிறாள். அதன்பின் அவளுக்கு எவ்வித விலக்கும் இல்லை.

அந்த நான்கு நாட்களும் அவள் வீட்டு விலக்கு என்ற சொல்லுக்கு இணங்க விலகி இருத்தல் வேண்டும். கோவிலுக்கு மட்டுமல்லாமல் பொது வைபவங்கள், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் வீட்டு வேலைகளில் ஈடுபடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும் என்பதே முறை. மற்றவர்கள் அவளுடன் தொடாமலும் (முட்டாமலும்), உடுப்புகள் சேர்த்துப் புழங்காமலும் இருக்க வேண்டும். அவ்வாறிருப்பின் கணவனுக்கோ மற்றவர்களுக்கோ எந்தத் துடக்கும் இல்லை. அவர்கள் ஆலயம் செல்லலாம்.

ஆனால், மாதவிலக்கான பெண்ணே வீட்டுக் காரியமனைத்தையும் செய்ய, அவளால் சமைக்கப்பட்ட உணவை மற்றவர் கள் சாப்பிடுகிற சந்தர்ப்பம் இருக்குமாயின் மற்றவர்களுக்கு அந்தத் துடக்கு உண்டு. அவர்கள் ஆலயம் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.



**விரதங்களை அனுஷ்டிப்போர் தலை தோய வேண்டும் என்பது அவசியமா? குளித்துவிட்டு அனுஷ்டிக்க முடியாதா?**

ஸ்நானம் என்றாலே தலைதோய்த்தல்தான். ஆலயம் செல்லுதல், வழிபாடு செய்தல், வீட்டில் பூஜைகள் முதலியவற்றில் ஈடுபடுதல் என எதனைச் செய்வதானாலும் நதிகள், குளங்களில் தலை முழுகி முழுமையாக நம்மைத் தூய்மை செய்தல் மிக அவசியம். நதி, குளம் இல்லாத இடங்களில் கிணற்று நீரை அல்லது குழாய் நீரை தலையில் ஊற்றி முழுமையாக உடல் முழுதும் நனையத் தோய்வது அவசியம். ஆனால் எண்ணெய் வைத்து முழுகுதல் ஆகாது. (சனி வார விரதத்திற்கும், பெண்கள் தீட்டு கழிவதற்கும் மட்டும் எண்ணெய் முழுக்கு அவசியம்)

அவ்வாறு ஸ்நானம் செய்வது மட்டுமன்றி தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டும். அவ்வுடுப்புக்கள் தோய்க்காத ஏனைய உடுப்புக்களுடன் அளையாதவையாக இருக்கவும் வேண்டும். மடி வஸ்திரம் என இவற்றைக் குறிப்பிடுவர். தெய்வ சக்தி வேண்டுமெனில் ஆசாரம் மிக அவசியம். ஆசாரம் என்பது தூய்மை, புனிதம், ஒழுக்கம் என்பவையே.

நோயாளர்கள், இயலாதவர்கள் மட்டும் தலைதோய முடியாவிட்டால் உடலைக் கழுவிக் கொண்டு அல்லது உடல் முழுதும் விபூதி பூசிக்கொண்டு (பஸ்ம ஸ்நானம்) வழிபாடுகளில் ஈடுபட சாஸ்திரங் கள் அனுமதிக்கின்றன.

**வீடுகளில் புதுமனைப் புகுதல் போன்ற நிகழ்ச்சிகளின்போது நடைபெறும் சாந்தி நிகழ்ச்சிகளில் பெண்கள், குழந்தைகள் கலந்துகொள்ளலாமா?**

புதுமனை புகுதலின்போதோ அல்லது கிரகதோஷம் நீங்கி நல்வாழ்வு கிட்ட வேண்டியோ வீடுகளில் சாந்திகள் நடத்தப்படுவதுண்டு. இதில் விநாயகர், இலக்குமி, முருகன், நவக்கிரகங்கள் ஆகியோருக்குக் கும்பங்கள் வைத்துப் பூஜை செய்வதோடு ஹோமங்கள் நடத்துவதே வழக்கம். இதில் பயப்படக் கூடிய கிரியைகள் எதுவும் இல்லை. யாவரும் கலந்துகொள்ளலாம்.

சாந்திக் கிரியைகளைச் செய்வினை, சூனியம் முதலியவை போன்று கழிப்புக் கிரியைகளாகக் கருதத் தேவையில்லை. சாந்தமான கிரியைகளே அவை.

**ஆலயங்களில் கொடியேற்று விழாவுக்கு முதல்நாள் நடைபெறும் கிராமசாந்தி முதலிய வற்றையும் கொடியிறக்கு வைபவத்தையும் சிறுவர்கள் பெண்கள் பார்க்கலாகாது என்கிறார்களே, உண்மையா?**

அப்படி எதுவுமில்லை. கிராம சாந்தி என்பது பூத பைசாசங்கள் எனும் துர்த்தேவதைகளைத் திருப்தி செய்து அவற்றின் தொந்தரவை இல்லாமல் செய்தலும் கிராமத்தின் காவல் தெய்வமான வைரவரை வழிபட்டுக் காவலை உறுதிப்படுத்துவதுமேயாகும்.

கொடியேற்றுவிழாவில் கொடித்தம்பத்தில் எழுந்தருளுமாறு ஆவாஹனம் செய்து பத்து நாளும் வழிபட்ட அனைத்துத் தெய்வங்களையும் அவரவர் இருப்பிடங்களுக்குத் திருப்பி அனுப்புவது கொடியிறக்க நாளில் நடைபெறுகின்றது. இதைப் புரிந்து கொள்ளாமல் வைரவரைக் கட்டுதலும் அவிழ்த்தலும் என்கிறார்கள் சிலர். யாவரும் அனைத்துக் கிரியைகளிலும் கலந்து கொள்ளலாம்.

**வீடுகளில் என்னென்ன சுவாமிப் படங்கள் வைத்திருக்கலாம், எவற்றை வைத்திருக்கக் கூடாது?**

விநாயகர், இலக்குமி, சக்திகளுடன் கூடிய சுப்பிரமணியர், சரஸ்வதி, வெங்க

டாஜலபதி படங்களும் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றும் அவசியமாக சுவாமி அறையில் வைக்கப்படவேண்டும். இவற்றைத் தவிர, தமது இஷ்ட தெய்வங்களின் படங்களை வைக்கலாம்.

பொதுவாக சாந்தமான முகத்துடன் கூடிய எந்தத் தெய்வங்களின் படங்களும் வைக்கலாம். கோர முகத்துடன் கூடிய வடிவங்களைத் தவிர்க்கலாம்.

ஆனால், குழலூதும் கண்ணன் படம் வைக்கக்கூடாது, நடராஜர் படம் வைக்கக் கூடாது என்றெல்லாம் சொல்லப்படும் அர்த்தமற்ற பயமுறுத்தல்கள் தவறானவை. கண்ணனும் நடராஜரும் நமக்கு மங்கலம் தரும் சக்தி வாய்ந்த தெய்வங்கள். ஆனால் நடராஜரை சிவகாமி அம்மனுடன் சேர்ந்த படமாக வைப்பதே நல்லது.

படங்களுக்குப் பதிலாகத் திரு வுருவங்களைச் சுவாமி அறையில் - வீடுகளில் வைத்து வழிபடுவது அவ்வளவு சிறப்பான தல்ல.

**சோமவார விரதத்திற்கு விளக்கு வைத்துச் சாப்பிடுதல் என்பது விதியாகச் சொல்கிறார் களே, அதன் விளக்கம் என்ன?**

பகல் முழுவதும் விரதமாக இருந்து இரவுப் பொழுது வந்ததும் அந்தி நேர வழிபாட்டை முடித்துக் கொண்டு அதன்பின் சாப்பிடவேண்டும் என்பது சோமவார விரதத்தின் நியதி. அந்தி நேர விளக்கு வைக்கப் படும். எனவே அந்தி நேரம் என்பதைக் குறிக்க விளக்கு வைத்துச் சாப்பிடுதல் என்றே சொற்பிரயோகம் வழக்கில் வந்துவிட்டது. இதனைப் புரிந்து கொள்ளாத சிலர், பசி தாங்க முடியாமல் பொழுது சாயுமுன் விளக்கு வைத்துச் சாப்பிடுவதையோ அல்லது சாப் பிடும் இடத்தில் விளக்கு ஒன்றை ஏற்றி வைத்து விட்டுச் சாப்பிடுவதையோ வழக்கமாகக் கொண்டால் அதனை எவ்வாறு விளக்குவது?

**சமய தீட்சை பெறாதோர் விரத அனுட்டானம் செய்யலாமா?**

சமய தீட்சை பெறாதோர் சைவரே அல்லர் எனவும் அவர்கள் எந்தவித சமய அனுட்டானங்களுக்கும் தகுதியற்றவர் என்றே சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதையே நாவலரும் சுட்டிக் காட்டுகிறார்.

ஆனால், காலதேச வர்த்தமானங் களுக்கேற்ப நமது பெரியோர் சிறிது விட்டுக்கொடுப்பின் மூலம் யாரும் விரதம் அனுட்டிக்கலாம் என அனுமதிக்கின்றனர். எனினும், விரதநாளிலும், அதற்கு முதல் நாளும், மறு நாளும் அவர்கள் பூரணமாக சைவ ஆசாரத்துடன் இருக்கவேண்டியது அவசியம்.

**விரதத்திற்கும் உபவாசத்திற்கும் என்ன வித்தியாசம்?**

ஒரு வேளை அல்லது இரு வேளை உணவுண்டு தூய்மையுடன் இறைவனை வழிபடுவது விரதம். உபவாசம் என்பது உணவே இல்லாமல் விரதம் இருப்பது.

உண்மையில் உபவாசம் என்பதன் பொருள் அருகில் வசித்தல் என்பதே. எனவே, உபவாச விரதம் அனுஷ்டிப்போர் முழு நாளும் ஆலயத்திலேயே தங்கியிருந்து மனம், மொழி, மெய்களால் இறைவனையே சிந்தித்து அவ னோடு இருப்பது அவசியம்.

**கந்தஷஷ்டி போன்ற விரதங்களை அனுட்டிக்கின்ற நாட்களில் தீட்டு அல்லது துடக்கு வந்தால் என்ன செய்யவேண்டும்?**

அந்த வருடம் விரதம் பங்கமாகி விட்டது என்றே கருதவேண்டும். அடத்த வருடம் மீண்டும் விரதம் அனுட்டிக்கலாம். மொத்த எண்ணிக்கையில் ஒரு எண்ணிக்கை



குறைந்துவிட்டதால் மேலதிகமாக இன்னொரு வருடம் அனுட்டிக்க வேண்டும்.

**பாரணை எவ்வாறு செய்யவேண்டும்?**

உபவாச விரதங்களுக்கு மறுநாள் பாரணைபண்ணுதல் அவசியம். விரதநாளின் மறுநாள் அதிகாலை துயில் நீத்து ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டானங்கள் செய்து ஆலயம் சென்று வழிபட்டு வந்து காலை எட்டரை மணிக்குமுன் அடியார்கள் உறவினர்களுடன் பாரணை செய்தல் நன்று.

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காகச் சமைத்த உணவைச் சாமிப்படத்திற்கு முன் படைத்து அதனை உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாராவதிலும் தாமதம் ஏற்படின் சாமிப்படத்திற்கு முன் ஒருசிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரில் இட்டுப் பூஜை வழிபாடுமுடிந்ததும் அந்தநீரை உரியகாலத்தில் அருந்திப் பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியானபோது சாப்பிடலாம்.

**ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் என்ன செய்யவேண்டும்?**

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விதம் வந்தால் முதலில் கூறிய முறையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும் உபவாசமாக இருந்தால் முதலாவது விரதத்தின் பாரணையைத் துளசி தீர்த்தம் அருந்தி நிறைவேற்றி, இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அனுட்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன் பின் மறுநாள் ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் அல்லது ஸ்கந்தஷஷ்டி விரத முடிவில் அதாவது பாரணையன்று சோமவாரவிரதம்வருவதுண்டு. இந்தச்சந்தர்ப்பத்தில் மேற்கூறிய விதிமுறையே அனுசரிக்கப்பட வேண்டும்.

சிலர் உதயத்திற்குமுன் முதல் விரதத்திற்குரிய பாரணையை முடித்து விடுவதுண்டு. ஆனால் சூரியோதயத்திற்கு முன் பாரணை செய்தல் விதியன்று.

உபவாசமாக இருப்பவர்கள் விரத்திற்கு முதல்நாள் ஒரு பொழுது உணவுடன் விரதமிருந்து உபவாசத்துக்கு மறுநாள் காலை எட்டரை மணிக்குள் பாரணை செய்ய வேண்டும். பாரணையிலன்று மறுபடி உணவு கொள்வதும் தகாது. இரவில் பால்பழம், பலகாரம் என்பன உண்ணலாம். இது உபவாச விரதங்கள் யாவற்றுக்கும் பொது விதி.

**விரத உத்யாபனம் எவ்வாறு செய்யவேண்டும்?**

குறிப்பிட்ட கால எல்லை முடிந்ததும் அதாவது தாம் கைக்கொள்வதாகக் கருதிய வருடம் நிறைவு பெற்றதும் முறைப்படி விரதத் தை முடித்து, விரத பலனைத் தருமாறு வேண்டுதல் செய்தலே விரதோத்யாபனமாகும்.

வீட்டிலே பூஜை வழிபாடுகள் செய்யும்போது தங்கம், வெள்ளி, செம்பு இவற்றில் ஏதாவதொரு உலோகத்தில் சுவாமி திருவுருவத்தைச் செய்து வைத்து ஆவாஹனம் செய்து பூஜை நடாத்த வேண்டும். அன்று உபவாசமிருந்து மறுநாட்காலை புனர்பூஜையின் பின் (மீண்டும் பூஜை செய்தல்) உத்வாசனம் செய்து அர்ச்சகருக்குரிய தக்ஷிணை தாம்பூலங்களுடன் உலோகப் பிரதிமையையும், கும்பப் பொருட்களையும், வேட்டி சால்வை, அரிசி, காய்கறி முதலிய தானங்களையும் வழங்கி இதன்பின் மாகேஸ்வரப் பூஜை

செய்து (சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல்) தாமும் காலை எட்டரை மணிக்கு முன்னதாகப் பாரணை செய்து விரத பூர்த்தி செய்யலாம்.

விரத பூர்த்தி காலத்தில் சாஸ்திரத்தில் கூறியபடி விரதத்திற்குரிய பலன்கள் எனக்குச் சித்திக்க வேண்டுமெனக் கருதி இந்தப் பூஜையைச் செய்கிறேன் என்று சங்கல்பத்துடன் ஆரம்பித்து முடிவில் அர்ச்சகருக்குரிய தானம் வழங்கும் போது, பிரதிமை, வஸ்திரங்கள், கும்பப்பொருட்கள் முதலிய தானங்களை மகிழ்ச்சியுடன் பிராம் மணோத்தமருக்கு வழங்குகிறேன். இவ்விரதத்திற்குச் சொல்லப்பட்ட பலன்கள் எனக்கு உண்டாகட்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

பூஜை முடிவில் கும்பத்தால் யஜமானனுக்கு அபிஷேகம் செய்வித்தலும் சொல்லப்பட்டிருக்கிறது. உலோகப் பிரதிமை செய்வதற்கு வசதியில்லாதவர்கள் களிமண்ணால் செய்து வழிபட்டபின் அதனை நீர்நிலையில் விட்டு விடலாம்.

விரதோத்யாபன காலத்தில் இவ் வாறு வீட்டில் பூஜைகள் செய்ய வசதியில்லாதவர்கள் ஆலயத்துக்குச் சென்று அபிஷேகம், பூஜை, அர்ச்சனை முதலியன செய்வித்தபின் - அல்லது குறைந்த பட்சம் விதோத்யாபனத்துக்குரிய சங்கல்பத்துடன் சஹஸ்ர நாமார்ச்சனையாவது செய்து அர்ச்சகருக்குரிய தாம் பூல தக்ஷிணைகள் அரிசி, காய்கறி முதலிய தானங்கள் வழங்கி முன்கூறியவாறு விரத பலனைத் தருமாறு பிரார்த்தித்து விரத பூர்த்தி செய்யலாம்.

**கர்ப்பிணிப் பெண்கள் கோவிலுக்குச் செல்லக் கூடாதா? கர்ப்பவதிகள் விரதம் அனுட்டிக்கலாமா? தாய்மையடைந்திருக்கும் போது ஆலயத்திற்குச் செல்லலாமா?**

கர்ப்பிணிகள் சுமார் நான்கு மாதம் நிறைந்து ஐந்து மாதம் ஆகியபின் கோவில் வாசலுக்குப் போவதும், அவசியமில்லாமல் வெளியிடங்களுக்குச் செல்லுதலும், அந்திப் பொழுதுகளில் வீட்டிற்கு வெளியே வருவதும் விரும்பத் தக்கதல்ல.

விரத அனுட்டானங்களிலிருந்தும் அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. குழந்தை என்னும் தெய்வத்தை ஊட்டி வளர்க்கும் கடப்பாடு அவர்களுக்கு இருப்பதால் கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மாரும் விரதம் அனுட்டிப்பது பெரியவர்களுக்குச் சம்மதமில்லை.

முப்பத்தொரு நாட்களில் தாயின் துடக்கு நீங்குவதில்லை. நாற்பத்தொரு நாட்களின் பின்னரே தாயும் குழந்தையும் கோவிலுக்கு முதல்முதல் செல்ல அனுமதிக்கப் படுகிறார்கள்.

**கர்ப்பிணிகளின் கணவன்மாருக்கும் இத்தகைய கட்டுப்பாடுகள் உண்டா?**

ஆலயம் செல்வதற்கு அவர்களுக்கு எவ்வித தடையுமில்லை. ஆனால், ஆறு மாதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களின் கணவர்கள் ஆலயத்தில் காப்புக் கட்டுதல், பவித்திரம் அணிந்து கிரியைகளில் கலந்துகொள்ளுதல் என்பவை தவிர்க்கப்படுவது நன்று.

**கர்ப்பிணிகள் மோதகம் பிடிக்கக் கூடாது என்று சிலர் சொல்கிறார்களே இதன் தாத்பர்யம் என்ன?**

அப்படி ஒரு கட்டப்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

**திருமணச் சடங்குகளில் மணமகனுக்குத் தலைப்பாகை வைத்தல் மற்றும் முக்கிய சந்தர்ப்பங்களில் தேங்காய் உடைத்தல் முதலிய செயற்பாடுகளில் யாருக்கு முக்கியத் துவம் உண்டு?**

பொதுவாக, மணமகன், மணமகள் இருவரதும் தாய் மாமனுக்கே இக்காரியங்களில் உரிமைப்பாடு உண்டு.



**நாமகரணம் என்னும் பெயர் சூட்டும் விழா எப்போது நடைபெற வேண்டும்? யார் அதனைச் செய்ய வேண்டும்?**

அந்தணர்கள் தமது குழந்தை களுக்குப் பதினோராம் நாள் ஆசௌசக் கழிவின்போது செய்வதுபோல, ஏனையோர் தமது முப்பத்தோராவது நாளில் துடக்குக் கழிவு வைபவத்தின்போது பெயர்சூட்டு தலைச் செய்வதே பொருத்தம். தாய்மாமன் முதலில் ஆரம்பித்து வைக்கப் பின்னர் ஏனையோர் வயது மற்றும் உரிமை அடிப் படையில் குழந்தையின் வலது காதில் அந்தப் பெயரை மும்முறை கூப்பிட்டு இந்த நிகழ்வை நடாத்துவர்.

**கருடபுராணம் நூலை வீட்டில் வைத்திருக்க லாமா? அதனைச் சாதாரணமாக யாவரும் படிக்கலாமா?**

கருடபுராணம் என்பது இறந்த உயிர்களுக்கு என்ன நடைபெறுகிறது என்ற மர்மத்தை அற்புதமாக விபரிக்கும் அரிய புராண நூல். நமது இவ்வுலக வாழ்க்கை முடிவடைந்தபின் நமது உடலுக்கு என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோம். ஆனால் நமது உயிருக்கு என்ன நடக்கும் என்பதை அறிய முடியாமலுள்ளது. அதனை நமது முன்னோர்களான முனிவர்கள் அறிந்து கூறியுள்ளனர். அதனை நாம் புராணங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

உயிர்கள் யம கிங்கரர்களால் அழைத்துப் போகப்படுதல், போகும் வழியில் ஏற்படக்கூடிய கஷ்டங்கள், அதனைத் தீர்ப்பதற்கு அவர்களது சந்ததியார் என்ன செய்ய முடியும் என்பதையெல்லாம் நாம் கருடபுராணத்தில் அறியலாம். பாபம் செய்தவர்களுக்கு என்னென்ன தண்டனைகள் வழங்கப்படுகின்றன, புண்ணியம் செய்தோர் என்ன அனுபவிப்பர் என்பதையெல்லாம் இந்நூல் விபரிக்கிறது.

இதனைப் படிப்போர் மனத்தில், "பாபம் செய்யக்கூடாது, புண்ணியம் செய்ய வேண்டும்" என்ற நல்லெண்ணம் தோன்ற வகை செய்கிறது கருடபுராணம். மேலும், பிதிர்கள் பற்றியும் பிதிர் காரியங்கள் பற்றியும் தெரிவிக்கப்படுவதால் திவசம் முதலிய பிதிர் காரியங்களை அக்கறையுடன் விஷயம் தெரிந்து செய்ய வாய்ப்புக் கிடைக்கிறது.

அதனால் யாவரும் கருட புரா ணத்தை அவசியம் படிக்கவேண்டும். எல்லோருடைய வீட்டிலும் அந்தப் புத்தகம் இருக்க வேண்டும்.

**மரண வீடுகளில் கலந்துகொள்வோர் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வ தால் ஏற்படும் தீட்டு (துடக்கு) எத் தனை நாட்களில் கழியும்?**

பொதுவாக நமது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரது துக்கங் களிலும் கலந்துகொள்ள வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு. மரணச் சடங்கின் போதும் அதற்குப்பின் நடைபெறும் கிரியை களிலும் கலந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அனைவரும் செய்ய வேண்டும். ஆனால், அதில் சில வரையறைகள் உண்டு.

புதிதாகத் திருமணம் செய்தோர், கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணின் கணவன், விசேஷ தீக்ஷை பெற்று நித்ய சிவபூஜை செய்வோர், வீட்டில் திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிக்கு நாள்குறித்தோர், அடுத்து வரும் நாட்களில் தமது வீட்டில் திவசம் முதலிய பிதிர்காரியம் செய்யவிருப்போர் முதலியவர்கள் மிக மிக நெருங்கிய உறவினர்கள் அல்லாதோரின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அடுத்துவரும் நாட்களில் அங்கு சென்று துக்கம் விசாரிப்பதன் மூலம் தமது கடப்பாட்டை இவர்கள் நிறைவேற்றிக் கொள்ளலாம். சமூகம் இதனை அவசியம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மரணச் சடங்கில் சவத்தை நெருங்கிக் கடமைகள் புரிவது, வாய்க்கரிசி, போடுவது, குளிப்பாட்டுவது முதலியவற்றிலும் அடுத்துவரும் நாட்களில் அங்கு நிகழும் உரிமைச் சோறு சாப்பிடுதல், எட்டச் செலவு முதலிய சடங்குகளிலும் மிக நெருங்கிய - ஆசௌச உரித்துடையோர் மட்டும் கலந்து கொள்ளவேண்டும். அவ்வாறு கலந்து கொள்ளுவோர் சம்பந்தப்பட்டவர்களின் துடக்கு கழியும்பரை (முப்பத்தொரு நாள்) தாமும் துடக்குக் காக்க வேண்டும். முக்கியமாக மரணம் நிகழ்ந்த வீட்டில் உணவருந்து தல், தேநீர் பருகுதல் முதலிய வற்றைச் செய்வோர் இவ்வாறு காக்க வேண்டும்.

சவத்தைக் காவுவோர் மூன்று நாட்களாவது ஆலயம் செல்லுதல், சுவாமி காவுதல், பூஜை வழிபாடுகளில் சங்கல்பம் செய்து நேரடியாகக் கலந்து கொள்ளுதல் முதலியவற்றைத் தவிர்ப்பது நலம்.

சாதாரணமாக மரண வீட்டிற்குச் சென்று துக்கம் விசாரித்துவரும் ஒருவர் அன்றைய தினம் மட்டும் அதாவது வீடு திரும்பியதும் ஸ்நானம் செய்யும்வரை அசுத்தமுடையவராகிறார்.

இறந்தவரின் ஆசௌச உரித்துடையோர் முப்பது இரவுகள் முழுமையாக ஆசௌசம் காக்க வேண்டும். முப்பத்தோராம் நாளில்தான் துடக்குக் கழிவும் வீட்டுக் கிருத்தியம் என்னும் கிரியையும் செய்யலாம்.

கர்த்தா (கொள்ளி வைத்தவர்) ஒரு வருட காலத்திற்கு ஆலயத்தினுள் செல்வ தில்லை என்பதும் கிரியைகளில் கலந்து கொள்வதில்லை என்பதும் பொதுவான ஒரு வழக்கு, ஆனால், சிவபூஜை, சிவாலய பூஜை செய்வோருக்கு இந்த வழக்கம் பொருந்தாது.

மரணக் கிரியையை நடாத்திய கர்த்தா வெளியூர் செல்ல வேண்டுமாயின் அந்தியேட்டியை எப்போது செய்யலாம்?

நமது தேவைகளுக்காக கிரியைகள் நடைபெறவேண்டிய நாட்களை மாற்றி வைக்கவோ, குறித்த நாளுக்குமுன் துடக்குக் கழிவைச் செய்யவோ நமக்கு அதிகாரமில்லை. சாஸ்திரங்கள் அதற்கு இடம் கொடா.

கர்த்தாவைப் பொறுத்தவரை பெற்றோர் உயருடன் இருக்கும்போது செய்ய வேண்டிய கடமைகள் செய்வது முக்கியம். அதன்பின் கொள்ளிவைப்பதை விட சபிண்டீகரணம், அந்தியேட்டி முதலிய வற்றில் கலந்துகொள்வது மிக முக்கியம். ஆகவே முப்பதாம் நாளின்பின் செய்யப்படும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் முதலிய வற்றை மாற்றாமல் பிரயாணத்தை மாற்றி வைப்பதே உசிதமானது.

**ஆண்மகன் பிதிர்க்கடன் செய்யாமல் விட்டால் அதனால் ஏற்படும் பிதிர் தோஷம் யார் யாரை எப்படிப் பாதிக்கும்?**

தமது பெற்றோருக்குரிய இறுதிக் கடன்களை நிறைவேற்றுவது எல்லா ஆண்பிள்ளைகளுக்கும் கட்டாயமாக விதிக்கப்பட்ட ஒன்று. அதனை நிறை வேற்றாமல் விடும்போது பிதிர்களின் சாபத்தினால் புத்திர நாசம், காரியத் தடைகள் முதலிய தோஷங்கள் பிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல் அவர்களது சந்ததியினருக்கும் ஏற்படும்.

உரிய காலத்தில் அவர்கள் இல்லா விட்டால் பெறாமக்கள், மருமக்கள், சகோதரர்கள் என்ற வகையில் உரித்துடையோர் அதனை முறைப்படி நிறைவேற்ற வேண்டும்.

ஒரு பெண் சாமர்த்தியப்படும்போது (இருது ஜனனம்) யார் யாருக்கு எத்தனை நாள் துடக்கு உண்டு?

ருதுவாகும் பெண்ணுக்கு மட்டுமே சாஸ்திரங்களில் துடக்கு சொல்லப்பட்டுள்ளது. அதுவும் அவள் சுத்தமாகி ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாளில் தலைக்குத் தண்ணீர் வார்த்ததும் அந்தத் துடக்கு நீங்கிவிடுகிறது.

ஆனால், துடக்கு இல்லாவிட்டாலும் ஆலயத்திற்கோ அல்லது வேறு பொது நிகழ்வு களுக்கோ செல்வதை சுமார் ஒரு மாதத்திற்குத் தவிர்ப்பது பெரியோர்களின் வழக்கம்.

அவளது தாய் தந்தையர்க்கோ ஏனையவர்களுக்கோ ஆசௌசம் சொல்லப் படவில்லை. ஆனால், சாமர்த்தியப்பட்ட பெண்ணைத் தனியாக வைத்திருந்து கவனிப் பவர்களுக்கு இவ்விதி பொருந்தும், அந்தப் பெண் வீடு முழுவதும் புழங்குபவளாக, அந்தப் பெண்ணின் தாயார் முதலியோர் அப் பெண்ணின் ஆடைகளைக் கையாள்பவர் களாக இருந்தால் அவர்களும் ஆசௌசம் காக்க வேண்டும். ஆனால் சாமர்த்தியத்திற்கு முப்பது நாள் துடக்கு இல்லை.

**நவராத்திரி காலத்தில் வரும் புரட்டாதிச் சனி விரதத்தில் எள் எண்ணெய் எரித்து வழிபட லாமா?**

தாராளமாக எள் எண்ணெய் எரித்து வழிபடலாம். அதனால் எந்தத் தவறும் இல்லை.

நவராத்திரி விரதம் கடினமான விதிமுறைகள் இல்லாத இலகுவான விரதம். சிறுவர்கள்கூட அனுட்டிப்பார்கள். குளித்தல், தோய்த்துலர்ந்த ஆடை அணிதல், சிவ சின்னங்களை அணிதல், அனுட்டானம் பார்த்தல், ஆலயம் சென்று வழிபடுதல், இயன்றவரை துதிப்பாடல்கள் பாடி வணங்கு தல், அம்பிகையின் சிந்தனையோடு தியானம் அல்லது செபத்தில் ஈடுபடுதல், விரத நாளில் மட்டுமல்லாமல் முதல் நாளும் மற்ற நாளும் சுத்த சைவ போசனமாக இருத்தல், ஒரு நேரமாவது உணவை விடுத்து விரதமாக இருத்தல் இவைதான் பொதுவான விரத நியதிகள்.

சனி வார விரதத்திற்கு இந்த நியதிகளுடன் தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்து முழுகுதல் ஒரு முக்கிய விதிமுறை யாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஏனைய விரதங்களுக்குத் தலை குளிக்க வேண்டுமென்பது (தோய்வது) முக்கிய மல்லாமல் எண்ணெய் தேய்த்து முழுகுதல் ஆகாது என்பது நியதி.

இதனால் புரட்டாதிச் சனியும் நவராத்திரியும் சேரும்போது நமக்குள்ள ஒரே பிரச்சினை, அன்று சாதாரணமாகத் தோய் வதா, முழுகுவதா என்பதே ஆகும். அறிவு ரீதியாகச் சிந்தித்தால் இரண்டு விரதமும் அனுட்டிக்கும் ஒருவர் ஒன்றையும் பாதிக் காமல் பொது விதியாக அன்று எண்ணெய் முழுக்கைத் தவிர்த்தல் உசிதமானது. ஏனெனில் செய் எனக் கூறிய ஒன்றைச் செய்யா மல் விடும் குற்றத்தைவிடச் செய் யாதே எனக் கூறிய ஒன்றைச் செய்யும் குற்றம் பெரிது என்பது தெளிவு.

அடுத்தது எள் எண்ணெய் எரித்தல் பற்றியது. ஆராய வேண்டிய எத்தனையோ சிக்கல்களை விட்டு அவசியமற்ற ஒன்றைப் போட்டுக் குழப்புவது நம்மவர்க்கு விருப்ப மான ஒன்று. விரத காலத்தில் செய்யத் தகாதவை எனப் பல விதிமுறைகள் கூறுவர். பொய்பேசக் கூடாது, வீண்வார்த்தை பேசக் கூடாது, மாமிசம் உண்ணக்கூடாது, (இவை யெல்லாம் சைவ சமயத்தவர்க்கு நாளாந்த நடைமுறைகள்தான். எனினும் விரத காலத்தி லாவது கடைப்பிடிக்கட்டும் என இவற்றை வலியுறுத்துவர்) இதேபோல எள் எண்ணெய் எரிக்கக் கூடாது என்று ஏன் கூற வேண்டும்? எங்கே அந்த விதிமுறை உண்டு? யார் கூறினார்கள்? எள் எண்ணெய் எரித்தல் விரத நியதியுடன் இணைந்த ஒன்றல்ல. அது சனி தோஷத்துக்குரிய ஒரு பரிகாரம். அதனை எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். சனிவாரத்தில் செய்தால் விஷேடம். புரட் டாதிச் சனியில் செய்தா இன்னும் விஷேடம். எல்லாரும் கட்டாயம் எள் எண்ணெய் எரிக்க

வேண்டும் என்பதும் இல்லை. புரட்டாதியில் வரும் எல்லாச் சனிக்கிழமையும் எரிக்க வேண்டும் என்பதும் இல்லை. தத்தமது தோஷத்திற்கேற்ப வேண்டியவர்கள் வேண் டிய அளவு அதனைச் செய்து கொள்ளலாம்.

நவராத்திரி விரதத்திற்கு அது இடையூறாக இருக்கும் என நினைப்பவர்கள் எள்எண்ணெய் எரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதனால் சனிபகவான் கோபித்துக் கொள்ளமாட்டார். பயத்தின் காரணமாக ஒன்றைச் செய்வதில் பயனில்லை. ஈடுபாட்டுடன் செய்யவேண்டும். இரண்டி லும் ஈடுபாடு உடையவர்கள் இரண்டையும் செய்யலாம். ஒன்றை ஒன்று பாதிக்காது.

இவ்விடயம் சம்பந்தமாகத் தெளிவான விளக்கம் ஒன்றைத் தரவிரும்பு கிறேன். மிக நீண்ட காலமாக இத்தகைய கேள்விகள் இருந்து வருகின்றன. நமது மதம் வளைந்து கொடுக்கும் இயல்புடையது என்பதால் எல்லோரும் மனம்போனபடி விளக்கங்கள் கொடுக்கின்றார்கள். விதிகளை மீறுவதும் புதிய விதிகளை அமைப்பதும் மிகச் சாதாரணமாக நடைபெறுகிறது.

தெளிவாக ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். ஆகம விதிமுறைகள், மரபு முறைகளை இயலுமானால் அதற்கான மூல நூல்களையோ வழிநூல்களையோ பார்த்துத் தெரிந்துகொள்ள முயலவேண்டும். அவற்றை முடிந்த அளவில் பின்பற்ற வேண்டும். இயலாத இடத்தில் படித்தவரிடத்தில் கேட்டு நன்கு விளங்கி அவற்றைப் பின்பற்ற வேண்டும். மற்றவர்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய தேவை ஒருவருக்கு வரும்போது தமது பதிலுக்குச் சரியான ஆதாரமோ அல்லது அறிவார்ந்த விளக்கமோ கொடுக்க முடிந்தால் மட்டும் பதில் சொல்ல வேண்டும். இல்லையேல் தெரியாது எனக் கூறிவிடுவது யாவருக்கும் நல்லது.

இன்று நமது சமயத்தில் தோஷ பரிகாரங்களுக்கான வழிபாட்டு முறைகள் பல புதிது புதிதாக வருகின்றன. அவற்றில் பல ஏற்கெனவே சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருந்து துறை சார்ந்த அறிஞர்களால் இப்போது கண்டறிந்து கையாளப்படுபவை. அவற்றைக் கைக்கொள்வதில் தவறில்லை. வேறுசில, அத் துறை சார்ந்தவர்களின் யுக்திப் பிரகாரம் புதிதாக யூகித்துச் சொல்லப் படுபவை. அவற்றுக்கு அறிவார்ந்த விளக்கம் கொடுக்க முடிந்தால் மட்டும்தான் கைக்கொள்ளவேண்டும். யுக்தியான செயற் பாடுகள் சுருதிப் பிரமாணத்துக்கு மாறுபடா மல் இருக்கவும் வேண்டும்.

விரத வழிபாடுகள் பல ஒன்றுக்குள் ஒன்று கலந்து வருவது தவிர்க்க முடியாதது. ஒரேகடவுளை நாம் பலவிதமாக வழிபடுகி றோம் என்பதையும் அவற்றுக்கிடையே பேதங்கள் இருக்கலாகாது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். விநாயகருக்குச் சிறப்பு வழிபாடு நடத்தும்போது முருகன் கோபிப்பாரென்றோ முருகனுக்குச் சிறப்பு வழிபாடு நடத்தும்போது விநாயகர் கோபிப் பாரென்றோ நினைப்பது மடமை.

**விநாயகருடைய விரத வழிபாட்டு நாளில் ஏனைய தெய்வங்களைவிட அவருக்கு முக்கியத்துவம் உண்டு என்பதையும் அது போல முருகனுடைய விரத வழிபாட்டு நாளில் முருகனுக்கு முக்கியத்துவம் உண்டு என்ப தையும் தெரிந்து கொள்ளும் அதே நேரத்தில் விநாயகருடைய சிறப்பு வழிபாட்டு நாளில் முருகனை வழிபடக் கூடாது என்றோ முரு கனுக்குரிய விரத நாளில் விநாயகரை வழிபடக் கூடாது என்றோ யாராவது சொல்லலாமா?**

அந்த அந்த விதிமுறைப்படி விரதங்களை அனுட்டிக்க வேண்டும். இரண்டு விரதங்கள் ஒன்றாக வரும்போது ஒன்று மற்றதைப் பாதிக்காமல் இரண்டையும் அனுட்டிக்க வேண்டும்.



விரதங்களைத் தொடங்கும்போது தமக்கு எந்த விரதம் தேவை என்பதைச் சரியான முறையில் தேர்ந்தெடுத்து அதை எவ்வாறு எவ்வளவு காலம் அனுட்டிக்க வேண்டும் என்பதை விளக்கமாக அறிந்து கொண்டு தொடங்க வேண்டும். தொடங்கும் போது அதை மனத்தில் சங்கல்பித்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, மகப்பேறில்லாத ஒருவர் குழந்தைப் பேற்றினை விரும்பி அதற்குரிய விரதமாகிய கந்த ஷஷ்டியைத் தேர்ந்தெடுக்கிறார். உரிய முறைப்படி ஆறு நாளும் உபவாசமாக இருந்து ஏழாம் நாள் பாரணை பண்ணுவதாகவும் ஆறு வருடங்கள் இப்படித் தொடர்ந்து அனுட்டித்தபின் விரத உத்தியாபனம் (விரதத்தை முறைப்படி நிறுத்துதல்) பண்ணுவதாகவும் சங்கல்பிக் கிறார். அதன்பின் மாறுபாடில்லாமல் அதே முறைப்படி ஆறு வருடமும் தொடர்ந்து அனுட்டித்தபின் பாரணை தினத்தில் நான் விரதத்தை முடிக்கிறேன் என்று சங்கல்பித்து அர்ச்சனை செய்து இறைவனிடத்தில் ஒப்புக் கொடுக்கிறார்.

இதேபோல் திருமணத்தை விரும்புவோர் கேதார கௌரி விரதம், கல்யாண சுந்தர விரதம் போன்றவற்றையும் செல்வத்தை விரும்புவோர் வரலட்சுமி விரதம், சௌபாக்கிய கௌரி விரதம் போன்றவற்றை யும் தர்ம நெறியிலமைந்த வாழ்வையும் முத்திப் பேற்றையும் விரும்புவோர் சிவராத் திரியையும் அனுட்டிக்கலாம்.

இதுவே விரதம் அனுட்டிக்கும் முறை. மனம்போனபடி எல்லா விரதங் களையும் அனுட்டிக்க முற்படு வோருக்கே தேவையற்ற சந்தேகங்களும் சங்கடங்களும் தோன்றுகின்றன. எல்லா விரதங்களையும் தொடங்கிவிட்டு முறையாக அனுட்டிக்க முடியாமல் மனம் சலிப்பதைவிட தனக்குத் தேவையான சில விரதங்களைத் தேர்ந் தெடுத்து அவற்றைச் சரியாக அனுட்டிப் பதே சிறந்தது.

**கோப்பாய் சிவம்,**

**மறுபிரசுரம் முருகு**



# வாழ்வு மிகுத்து வரும்!

உலகின் வினையகற்றி ஆள்பவர் நம் விநாயகர்
நம் சைவத்தில் கணபதி வணக்கமே முதல் வணக்கமாம்
எக்காரியம் செய்யப்புகுவாரும்,
விநாயகரை வணங்கியே,
தம்வினைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பது சைவமரபு.
முப்புரம் எரிக்க இரதமேறிய சிவனார்,
கணபதியைக் கைதொழாமற் புறப்பட்டதால்,
அவர் இரதத்தின் அச்சு முறிந்ததாய்ப் புராணம் உரைக்கும்.
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
பின்னர் கணபதியை வழிபட்ட பின்பே,
சிவனார் முப்புரம் எரித்தனராம்.
சைவத்தின் மூல தெய்வமாகிய,
சிவனாலும் வழிபடப்படும் தகுதி,
நம் கணபதிக்குரியது.

முப்பத்தாறு தத்துவங்களில்,
முதல் ஐந்தாய் அமைந்த,
நாதம், விந்து, ஈஸ்வரம். சதாசிவம், சுத்தவித்தை எனும்,
ஐந்து தத்துவங்களும் சிவ தத்துவங்களாம்.
இவற்றுள் நாதம் சிவத்தையும்,
விந்து சக்தியையும் குறிப்பன.
இந் நாதவிந்துவினுடைய சேர்க்கையே பிரணவமாம்.
இப்பிரணவத்தின் வடிவமே நம் கணபதி வடிவமாம்.



மூல தத்துவங்கள் இரண்டினதும்,
இணைப்பால் அமைந்ததாற்தான்,
முதல் வணக்கம் கணபதிக்குரியதாயிற்று.

நாத தத்துவத்திற்கு குறியீடு
விந்து தத்துவத்தின் குறியீடு
இவ்விரு குறியீடுகளும் சேர வருவதே,
(உ) உகரமாம்.
அதனாலேயே,
அப் பிரணவ வடிவான கணபதியைக் குறிக்க,
பிள்ளையார் சுழி எனும் பெயரில் உகரம் இடப்படுகிறது.
நம் கணபதியின் துதிக்கை இவ் உகரவடிவமானது.
இங்ஙனம் தத்துவ நிலையில் உயர்ந்து நின்று,
முதல் வணக்கம் பெற்றுப் போற்றப்படும் கணபதி,
எளியார்க்கு எளியாராயும் நிற்கிறார்.
கணபதியை எவரும் எங்கும் எப்படியும் தொழலாம்.
கிரியைகளை வகைசெய்யும் நம் ஆகமங்களும்,
கணபதி வழிபாட்டிற்கான கட்டுப்பாடுகளை விதித்தில.
சாதாரண மரத்தின் கீழும்,
கணபதியை ஸ்தாபிக்க முடியுமாம்.
ஆச்சாரம் முதலானவை அனுஷ்டிக்கப்படாமலும்,
கணபதி வணக்கத்தை இயற்ற அனுமதியுண்டு.

இவ் உலகப் பொருட்களை,
உயிரில் பொருள், உயிருள் பொருள் என,
இரு வகையாய்ப் பிரிக்கலாம்.
இவையே சடம், சித்து எனப்படுகின்றன.
உயிர்ப்பொருட்கள் ஆறு வகையாய்ப் பிரிக்கப்படுகின்றன.
அப்பிரிப்புக்கு அவற்றின் அறிவே அளவுகோலாம்.
ஓரறிவிலிருந்து ஆறறிவுவரை பிரிவு பட்டதால்,
உயிர்ப்பொருட்களின் வகை ஆறாயிற்று.
இவ் அறுவகை உயிர்களுள்,
ஆறறிவு பெற்ற மனிதன் முதல் நிலையையும்,
ஓரறிவு பெற்ற தாவரங்கள் கடைநிலையையும் பெறுகின்றன.

அவ் ஓரறிவு பெற்ற தாவரங்களுள்,
மிகத் தாழ்ந்தது புல்லாம்.
உயிர் இல் பொருட்களாகிய சடப்பொருட்களுள்,
மிக இழிவாய்க் கருதப்படுவது மலமேயாகும்.

உயிர், சடப்பொருள்களில்.
இழிநிலையுற்றவைகளான புல்லையும், மலத்தையும் சேர்த்தே.
கணபதியை ஆவாகனம் செய்ய முடியும்.
பசுவின் மலத்தையும், அறுகம்புல்லையும் ஒன்று சேர்த்து,
கணபதி என வழிபடுவது நம் வழக்கம்.
நம் கணபதியின் எளிமை நிலைக்கு.
இவ்வழிபாடு தக்க சான்றாகிறது.
இதனால்
சமூகத்தின் மிகக் கீழ் நிலையுற்ற ஒருவரும் கூட,
நம் கணபதியை,
எளிமை பட வழிபடலாம் எனும் உண்மை அறிகிறோம்.

உயர்வினும் உயர்ந்து நின்றும்,
தாழ்வினும் தாழ்ந்து நின்றும்,
அருள் செய்யும் ஐங்கரன் தன் கருணை மிகப் பெரிதாம்.
வேழ முகத்து விநாயகனை,
மனம், மொழி, மெய்களால் வணங்க,
வாழ்வு மிகுத்து வருமாம்.

**கம்பவாரிதி**
**இ. ஜெயராஜ்**

# முன்னாள் தலைவர்கள்




திரு. இ. சண்முகநாதன்
ஆசிரியர்



திரு. மூ. வைரவநாதன்
ஓய்வுபெற்ற அதிபர்



திரு. கு. குருநாதன் J.P.
கட்டிட ஒப்பந்தகாரர்



திரு. ச. அண்ணாமலை
ஆசிரியர்



திரு. இ. கதிரமலைநாதன்
லிகிதர்



திரு. இ. ஆனந்தன் J.P.
ஓய்வுபெற்ற பிரதி அதிபர்



திரு. ச. இரத்தினவடிவேல் J.P.
ஓய்வுபெற்ற மின்சாரசபை அத்தியேட்சகர்

# ஆலய வளர்ச்சிக்கு பங்காற்றியோர்



முன்னாள் ஆலய பரிபாலனசபை உபதலைவர்
திரு. மு. நாகலிங்கம்
சமாதான நிதிவான்



முன்னாள் உறுப்பினர்
திரு. ஆ. இராசு
அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரர்



முன்னாள் ஆலய பரிபாலனசபை பொருளாளர்
திரு. ஐ. கதிரவேலு
கட்டிட ஒப்பந்தகாரர்



முன்னாள் உறுப்பினர்
திரு. சி. குணசிங்கம்



முன்னாள்
ஆலய பரிபாலனசபை பொருளாளர்
திரு. ஆ. சாமிநாதன்



முன்னாள் பரிபாலனசபை கணக்கு ஆய்வாளர்
திரு. கெ. பாலசிங்கம்
உதவி அரசாங்க அதிபர்



முன்னாள் உறுப்பினர்
திரு. சீ. அப்புத்துரை



முன்னாள் ஆலய பரிபாலனசபை பொருளாளர்
திரு. கா. விமலநாதன்
ஓய்வுநிலை எழுதுவவினைஞர்



முன்னாள் உறுப்பினர்
திரு. சி. பாலசிங்கம்



முன்னாள் உறுப்பினர்
திரு. வெ. கந்தையா



முன்னாள் உறுப்பினர்
திரு. மு. சிதம்பரநாதன்



முன்னாள் உறுப்பினர்
திரு. க. பசுபதி



முன்னாள் உறுப்பினர்
திரு. மு. கதிரவேலு

# ஆலய வளர்ச்சிக்கு பங்காற்றியோர்



முன்னாள் செயலாளர்
திரு. த. தவராசா
லிகிதர் கட்டிட திணைக்களம்



முன்னாள் உறுப்பினர்
திரு. சீ. முத்துலிங்கம்



முன்னாள் உறுப்பினர்
திரு. பொ. கதிரவேலு



முன்னாள் உறுப்பினர்
செ. குணசேகரம்



முன்னாள் உறுப்பினர்
திரு. த. இரத்தினம்



முன்னாள் உறுப்பினர்
திரு. இராசரத்தினம்



முன்னாள் உறுப்பினர்
திரு. சு. சந்திரன்



முன்னாள் உறுப்பினர்
திரு. ப. மகாலிங்கம்
கட்டிட ஒப்பந்தகாரர்



முன்னாள் உறுப்பினர்
திரு. ப. சர்வானந்தன்



முன்னாள் உறுப்பினர்
திரு. அன்னலிங்கம்



முன்னாள் உறுப்பினர்
திரு. த. சற்குருநாதன்



முன்னாள் உறுப்பினர்
திரு. இ. மகாதேவன்



திரு. இ. மனோகரன்
இராஜ கோபுரத்திற்கு முதல்
நிதிவழங்கிய அங்கத்தவர்



உ

ஓம்

# தமிழ்க் கடவுள் முருகன்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவர் முருகப் பெருமான். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய பரம சிவனின் ஒரு மூர்த்தமே கலியுக வரதன் கந்தனாவான்.

முருகன் என்றால் அழகன் என்று பொருள். ஆதலால் அந்த அழகுத் தெய்வம் முருகன் அலங்காரக் கந்தனாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கிறான். கந்தனைக் கைதொழக் கடுவினை அகலும். நெஞ்சக் கனகல்லை நெகிழ்ந்துருக வைத்துத் தம்மை வழிபடும் அடியார்களுக்கு ஆனந்தத்தை அள்ளித் தரும் அழகன் முருகனின் அருட்திறம் சொல்லி முடியாது.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முரகன். தமிழ்க் கடவுள் முருகன் என்ற வகையில் அவனுடைய அருட்திரு வடிவம் தமிழ்மொழியாகவே விளங்குகின்றது. "தமிழ் தமிழ்" என்று கேட் கும். ஆகவே அழகான முரு கனின் நாமமும் அமிழ்தாக இனிக்கின்ற தமிழ் போன்ற ஒன்றே.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமி ழும் முருகனுக்கே உரியனவாகும். தமிழ்தான் முருகன்; முருகன்தான் தமிழ். அந்த வகையில் இனிதான தமிழ் மொழி போல வேறு ஒன்றையும் காணோம் என்று கூறப்படுகிறது. ஆனால், சற்றுச் சிந்தித்துப் பார்க்கும் இடத்தில் தமிழ்வேறு முருகன் வேறு அல்ல; இரண்டும் ஒன்று தான். அமிழ்தினும் இனிய தமிழ் மொழிக்கு ஒப்பான முருகப் பெருமானுடைய பெருமை சொல்லில் அடங்காது என்பது புலப்படுகின்றது. மேலும் தமிழ் எனும் இனிய மொழி பேசப் பேசப், பழகப் பழக, நாளாக ஆக, சுவை கூடிக்கொண்டேயிருக்குமே தவிரக் கொஞ்சமும் குறையாது. அதுபோலவே முருகப்பெருமானது அருட் பெருங்கருணை. நாம் அவரை வணங்க வணங்க, பத்தியோடு வழிபட வழிபட இனம் புரியாத ஓர் இன்பம் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

முருகப்பெருமானுக்கு "குமாரன்" என்றும் ஒரு பெயர் உண்டு "கு" என்றால் உலகம்; "மா", என்றால் லக்குமி "ர" என்றால் தருபவன் முருகன். அத்துடன் குமாரன் என்றால் இளமையானவன் என்றும் பொருள். அதுபோலவே தமிழ்மொழியும் நாம் வாழ்வதற்கு செல்வம் தருகிறது. என்றும் இனிமையான இளமையுடன் திகழ்கின்றது.

மேலும் தமிழும் முருகனும் பல ஒற்றுமையுடன் திகழ்வதையும் நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. தமிழில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. முருகனின் கரங்கள் பன்னிரண்டு. முருகனுக்குத் திருமுகம்

ஒவ்வொன்றிலும் மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டுக் கண்கள். தமிழில் மெய்யெழுத் துக்கள் பதினெட்டு. சூரியன் ஆறுகண்கள், சந்திரன் ஆறுகண்கள்; அக்கினி ஆறுகண்கள்; இப்படி முருகனின் பெருமை சொல்லிக் கொண்டே போகலாம். தமிழ்மொழியும் அழகானது. முருகனும் அழகானவன். கலியுக வரதனான கந்தன் ஆறுமுகங்களோடு ஆறு எழுத்துக்களையும் உடையவன். "சரவணபவ" ஆறெழுத்து. தமிழில் இன எழுத்து ஆறு. வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடை யினம் ஆறு இந்தப் பொருத்தங்களை விட எல்லாவற்றுக்கும் மேலாக ஆயுத எழுத்து ஃ இந்த அகேனம் வேல் போன்ற வடிவத்தையு டையது.

அத்துடன் "முருக" என்ற எழுத்துக் களில் ஒவ்வொன்றும் ஒவ்வோர் இனத்தைச் சேர்ந்துள்ளது. கந்தவேளின் கைவேல் மகா சக்தி வாய்ந்தது. அதற்கு ஈடுஇணை கிடை யாது. அதேபோலவே ஃ என்பதும் தனித்து வமான ஒரு பெருமையையுடையது. எனவே தமிழ் வேறு, முருகன் வேறு அல்ல இரண்டும் ஒன்றுதான். அதுதவிர - முருகன் தமிழ்த் தெய்வம் என்று தொன்றுதொட்டே போற்றப் பட்டு வருகிறான். 'இறையனார் அகப் பொருள்' என்ற நூலில் முருகனின் பெருமை யும் தமிழின் அருமையும் மிக அழகாகக் கூறப் பட்டுள்ளது. குறிஞ்சிக் கடவுள் என்றும் தமிழ்க் கடவுள் என்றும் போற்றப்பெறும் முருகன் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம். முத்தமி ழால் வாழ்ந்து வருகின்ற ஆயகலைகள் அறுபத்து நான்கும் தனிப்பெருமையை யுடையன. இதில் முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன் என்று கூறப்படுகின் றது. இயல், இசை, நாடகம் எனப்படுகின்ற முத்தமிழ் மூலம் முருகனை வணங்கியவர்கள் நமது மூதாதையர்கள். ஆகவே, முருகனும் தமிழும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தே தான் காணப்படுகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மேலும், முருகப்பெருமான் தோன்றி யது எதற்காக? என்று ஆராயுமிடத்து சூரபன் மனாதியோரை அழிக்கவே என்று தெரியவரு கிறது. சூரன் ஆணவம், சிங்கமுகன் கன்மம், தாரகன் மாயை. எனவே, மும்மலங்களையும் அழித்தொழிக்க முத்தமிழ் முருகன் வந்து உதித்தான்.

"அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்
- கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

என்பது கச்சியப்பர் திருவாக்கு. சூரியன் என்றும் இருக்கின்றான். தினமும் வந்து தோன்றிப் பின் மறைகிறான். முருகனும் ஆதி யும் அந்தமும் இல்லாதவன். அவன் தொடக் கமும் முடிவும் இல்லாதவன். தமிழும் ஆதியும் அந்தமும் இல்லாதது; தொடக்கமும் இறுதி யும் இல்லாதது.

முருகனை ஆறு குழந்தைகளாக எடுத்து அன்பு காட்டி அரவணைத்து ஆதரவு செய்து வளர்த்தவர்கள் கார்த்திகேயப் பெண்கள். கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையால் முருகனுக்கு கார்த்திகேயன் என்றும் ஒரு பெயருண்டு. இவ்வாறு தமிழுக்கும் முருகனுக் கும் பல ஒற்றுமைகளுண்டு.

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகனும் தமிழ் மக்களால் போற்றி வணங்கப் பெறும் தமிழ்த் தெய்வமே. அந்த முருகனுக்கு இராஜகோபுரம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் உதயமானதே பெரும் பாக்கிய மாகும். நல்ல எண்ணங்களாயிருந்தால் முருகன் மெல்லநிறைவேற்றி வைப்பான். அந்தவகையில் மல்லாகம் வாழ்மக்களின் நல்ல இனிய தூய எண்ணம்தான் இப்போது இராஜகோபுரமாக



மலர்ந்துள்ளது. மொத்தத் தில் இந்த உயரிய அரிய கைங்கரியத்தை நிறைவேற்றிய அன்பர் கள் பாராட்டுக்குரியவர்கள். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதை உணர்ந்து செயற்றிட்டத்தை நிறை வேற்றியிருக்கும் அடியவர்கள் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்த வர்களேயாவர். அவர்களது அளப்பரிய விடா முயற்சியால் இன்று வானளாவ உயர்ந்த கம்பீர மான இராஜகோபுரத்தை நாம் தரிசிக்கின் றோம்.

எல்லாம்வல்ல சாளம்பை முருகன் இந்தத் திருப்பணியை நிறைவேற்றிய அன்பர் கள். அனைவருக்கும் அருள்புரிந்து காப்பாற்ற வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து வழிபாடியற்றிச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.

சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்
சீர்திருத்தப் பிணசெய்த இராஜகோபுரப் பணியாளர்கள்
கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் களிப்புடனே வாழ
சாளம்பை முருகன் திருவருள் புரிந்திட வேண்டும்
உந்தனை வாழ்த்துவதில் நாம் உவகையே கொள்கின்றோம்.
ஊர்போற்றப் பார்போற்ற உன்னதமாய் வாழ்கவென
வந்தனை செய்தே வணங்கி நாம் பிரார்த்திக்கின்றோம்
வளமுடனே வாழ்க! பல்லாண்டு வாழ்க!வாழ்க!!!

**'தெய்வத் தமிழ்ச் சுடர்'**
**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.



உ

ஓம்

# ஓம் எனும் மந்திரத்தின் அற்புத சக்தி

"என்னை நன்றாக இறைவன் படைத் தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" (திருமந்திரம் 81)

என்னை நன்றாக இறைவன் படைத்த தன் நோக்கம் தன்னைப் பற்றி நன்றாக தமிழில் கூற வேண்டும் என்பதற்காகவே என்று திரு மந்திரத்தில் அழகாக திருமூலர் கூறுகிறார். அந்த வகையில் இறைவனின் ஒரு அற்புத விடயத்தை நன்றாகத் தமிழில் கூறவே நானும் முனை கிறேன்.

மெய்ஞானத்தைப் பார்த்து விஞ்ஞானம் இகழ்ந்ததும் இந்துமதத்தையும் இந்து மத நம்பிக்கைகளையும் உலகம் முட்டாள் தனம் என்றும் மூட நம்பிக்கைகள் என்றும் கூறி வந்த காலம் போய், மெய்ஞானத்தைப் பார்த்து வியந்து அதற்குள் ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறது இன்றைய விஞ்ஞானம். எமது மதத்தையும் மத நம்பிக்கைகளையும் உணர்ந்து அதன் உன்னதங்களைக் கடைப் பிடிக்கத் தொடங் கியிருக்கிறது. உல கம். அப்படி விஞ்ஞானம் ஆராய்ந்து ஆச்சரியப்பட்ட விடயம், இன்று உல கத்தில் பெரும் பாலானோர் கடைப் பிடிக் கும் ஒரு அற்புத சக்தி வாய்ந்த விடயம்தான் இந்த ஓம் எனும் மந்திரம்.

ஓம் எனும் ஒற்றை வார்த்தை தொடர் பாக மெய்ஞானம் என்னென்ன கதைகள் விடயங்கள் கூறுகின்றன. விஞ்ஞான ஆராய்ச்சி கள் என்னென்ன முடிவுகளை இந்த உலகத் திற்குப் பரிந்துரைக்கின்றன என்பதை நாமும் சரியாகத் தெரிந்து கொண்டோமானால் நாங் களும் சரியாகப் பயன்படுத்தி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

கைலாயத்தில் சிவனைப் பார்ப்பதற்குப் பிரம்மன் போகிறான். அங்கே நிற்கும் முரு கனை இவன் சிறுவன்தானே என எண்ணி கண்டும் காணாதவன் போலே போகிறான். இதை உணர்ந்து கொண்ட முருகன் பிரம னுக்குப் பாடம் புகட்ட வேண்டுமென நினைக்கிறான். பிரம்மனைக் கூப்பிட்டு "பிர ணவ மந்திரத்தின் பொருள் என்ன" என்று கேட்கிறான். பிரம்மனும் தெரியாமல் முழிக்க அவனின் தலையில் குட்டி அவனை சிறையில் அடைக்கிறான். பின்னர் எல்லோரும் சிவனி டம் முறையிட சிவனின் வேண்டுகோளிற்கு இணங்க சிறையில் இருந்து பிரம்மனை விடுவிக்கின்றான். அத்துடன் சிவனுக்கு அதன் பொருளையும் கூறினான்.

இவ்வளவு விடயமும் நம் எல்லோருக் கும் தெரியும். சிறுவயதிலேயே படித்திருக்கி றோம். ஆனால் பிரம்மனை சிறையில் அடைக் கும் அளவுக்கு இது என்ன பெரிய குற்றம்? சிறையில் அடைப்பது என்பது சாதாரண விடயம் அல்ல. அதுவும் படைத்தல் தொழில்



செய்யும் தேவலோகத்தில் மிகப் பெரிய கௌரவத்தில் இருக்கும் பிரம்மதேவனை சிறையில் அடைப்பது என்பது மிகவும் சிந்திக்க வேண்டிய விடயம். இதை யாராவது என்றாவது யோசித்திருக்கிறோமோ? அந்தப் பிரணவ மந்திரத்தின் பொருள் தான் என்ன இந்தக் கதைக்குள் பொதிந்திருக்கும் உண்மை தான் என்ன? எம்மில் யாராவது யாரிடமாவது இது பற்றி ஏதாவது வினாவியிருக்கிறோமா என்றால் இல்லை என்றே சொல்லலாம். சிறு வயதிலேயே எமக்குச் சொல்லப்பட்டதன் முக்கியத்துவம் என்ன? கொஞ்சம் ஆழ மாகவே பார்ப்போமானால் உன்னதம் புரியும்.

எல்லோரும் துன்பங்களுக்குள்ளும் துயரங்களுக்குள்ளும் துவண்டு கொண்டிருக்கிறோம். அதை நிவர்த்தி செய்யும் நிவாரணி தான் இந்த பிரணவ மந்திரம். அதைப் படைத்தல் தொழில் செய்யும் பிரம்மனுக்கே தெரியவில்லை என்றால் பிரம்மனால் படைக்கப் பட்டவர்கள் எவ்வளவு தூரம் தெரிந்து கொள்வார்கள். அதனாலே முருகன் பிரம்மனைத் தண்டித்தான். தண்டித்தபடியால் தெரிந்து கொள்ளும் தன்மை தானாகவே பிறக்கும் என்ற நிதர்சனமும் கூட. சரி இப்போ பொருள் என்ன பலன் என்ன என்பதைப் பார்ப்போம்.

"ஓம்" என்பது எல்லாத் தடைகளையும் தகர்க்கும் தன்மை வாய்ந்த ஒரு சொல். இதை உச்சரித்தால் எந்தத் தீமையும் உன்னைத் தீண்டாது. எந்த நோயோ நோயை உண்டாக்கும் எந்த கிருமியோ உன்னிலோ உன் அருகிலோ தங்காது. இந்த மந்திரத்தை உச்சரிக்கும் போது ஏற்படும் மின்னதிர்வுகள் உன் உடம்பின் அனைத்துக் கலங்களையும் உறுப்புக்களையும் சரியாக வேலை செய்யவைக்கும். உன்னை நோக்கி வரும் எந்த எதிர்ப்பையும் அடியோடு அழிக்கும் வல்லமை வாய்ந்தது.

எல்லா மந்திரங்களுக்கும் ஒரு சக்தி இருக்கிறது அதை உச்சரித்தால் ஒரு பலன் இருக்கிறது. அந்த மந்திரத்தை உச்சரிக்கும் போது ஏற்படும் தடைகளை தகர்க்கவும் அதன் பலன்களை அப்படியே பெற்றுக்கொள்ளவும் உதவும் மந்திரம் தான் இந்த "ஓம்" இது ஒரு படையை நகர்த்தி செல்லும் தலைவன் போன்றது. கொண்டுபோய் சேர்க்க வேண்டிய இடத்தில் சரியாக கொண்டுபோய் சேர்ப்பது.

கடவுள் நம்பிக்கை இருப்பவர்கள் தங்கள் இஷ்ட தெய்வத்தை வேண்டும் போது முதலில் ஓம் என்று சொல்லி வேண்ட வேண்டும் என்று சொல்வதற்கும் இதுவே காரணம். அதாவது "ஓம் சரவண பவ ஓம் கணபதியே, ஓம் நமசிவாய", ஓம் பராசக்தியே, ஓம் நமோ நாராயணா என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

வேதாந்தம், சித்தாந்தம், ஆகமங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை என எல்லாவற்றிலும் ஓம் என்பதன் அர்த்தம் அதன் பலன் நன்றாகக் கூறப்பட்டிருக்கிறது. வேதரிஷிகள் மகரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் என எல்லோரும் ஓம் என்பதன் உன்னதம் அதன் அற்புதம் பற்றி மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதை எல்லாம் சொன்னால் இந்த கட்டுரை மிகவும் நீண்டு விடும்.

ஓம் எனும் மந்திரத்தைப் பற்றி திருமூலர் திரு மந்திரத்தில் அழகாக இப்படிக் கூறுகின்றார்.

"ஓமெனு ஓங்காரத் துள்ளே ஒரு மொழி
ஓமெனு ஓங்காரத் துள்ளே உருவம்
ஓமெனு ஓங்காரத் துள்ளே பல பேதம்
ஓமெனு ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே"

ஓம் என்பது முதலில் ஒரு சொல்லாகவும் பின் உருவமாகவும் அதன் விளக்கங்கள் பலவாகவும் அதை உச்சரித்தால் முத்தியும் சித்தியும் கிட்டும் என்று அழகாகக் கூறுகிறார். ஓம் என்பதை உச்சரித்தால் தான் விரும்பிய அனைத்தையும் அடையலாம் என்பதை இந்து மதம் சொல்லி நிற்கின்றது.

விஞ்ஞான ஆராய்ச்சியில் கண்ட சில உண்மைகளைக் கூறுவது நம்புவதற்கு சாலப் பொருந்துமென நினைக்கிறேன். பத்தொன் பதாம் நூற்றாண்டில் 25 வயதிற்கும் 40 வயதிற் கும் இடைப்பட்ட சில ஆண்களை ஆராய் சிக்கு உட்படுத்தினார்கள். ஓம் மந்திர தியானத் தில் ஈடுபடும் கொஞ்ச நபர்களையும் அதே வயதை ஒட்டிய ஓம் தியானத்தில் ஈடுபடாத கொஞ்ச நபர்களையும் தேர்ந்தெடுத்து டல் லஸ் என்ற ஆராய்ச்சியாளர் தன் ஆராய்ச்சியை செய்தார். அதன் முடிவாக ஓம் எனும் மந்திரத்தை உச்சரிப்பவர்களின் சுவாசம் சீராக இருப்பதையும் இருதயம் நன்றாக இருப்பதை யும் அவர் கள் ஆரோக்கியமாக இருப்பதையும் கண்டு பிடித்தார்கள்.

அதைப்போல இன்னொரு ஆராய்ச்சி யில் அஜஜ் அணில் குர்ஜார் என்ற பேராசிரி யரும் சித்தார்த்லடகேயும் இணைந்து மூளை யிலும் நரம்பு மண்டலத்திலும் ஏற்படும் மாறு தல்களைக் கண்டுபிடித்தார்கள். இதன் முடி வாக ஓம் என்று உச்சரித்து தியானிப்பதன் மூலம் மன அழுத்தம் குறைகிறது. கவலைகள் நீங்குகிறது. கவனக்குவிப்பு அதிகரிக்கிறது என்று கூறினார்கள். மேலும் மன அழுத்தத்திற் கான மாமருந்து ஓம் தான் எனவும் தமது ஆராட்சியின் முடிவில் கூறினார்கள். இப்படி நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். அத்தோடு இன்றும் ஓம் என்னும் மந்திரமும் அது ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் விஞ்ஞா னம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

சில சித்தர்கள் கூறும் ஓம் எனும் மந்தி ரம் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள் பயன்படுத்தி நல்ல பலனையும் பெறுங்கள்.

ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பெரு மையைப் பலர் சரியாக இன்னும் உணர வில்லை என்று தான் கூற வேண்டும். இந்த மந்திரத்தைக் கொண்டு பல விஷயங்களைச் சாதிக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ளதைச் சரியாக கடைப்பிடித்தோமானால் வெற்றி நிச்சயம்.

இரவு தூங்க முன் கண்மூடி 72 முறை "ஓம்" என மனதிலேயே தியானித்துக் கொண்டு மூச்சு விட வேண்டும். அதாவது மூச்சிழுத்து வெளி விடும்போது சொல்லி முடிக்க வேண்டும். அப்படி உள்ளிழுத்து வெளிவிடுவது ஒன்று என கணக்கில் 72 முறை கூறவேண்டும்.

பண பிரச்சனைகளுக்கு 48 முறை
உடல் நலம் பெற 58 முறை
வம்பு, வழக்கு சரியாக 78 முறை
நல்ல வேலை கிடைக்க 80 முறை
கடன் பிரச்சனைகளுக்கு 84 முறை
குழந்தையின்மை 52 முறை

மூச்சு எண்ணிக்கை மிக முக்கியம் மேலும் இதை இரவு உறங்குமுன் கூறுவது நல்ல பலனளிக்கும்.

எமது ஆயுளுக்கும் நாம் சுவாசிக்கும் முறைக்கும் ஓம் எனும் மந்திரத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. இந்த கணக்கை கொஞ்சம் பாருங்கள் ஒரு மனிதன் ஒரு நிமிடத் திற்கு 15 முறை சுவாசித்தால் அவனுக்கு விதித்த ஆண்டு 100. ஒரு நிமிடத்திற்கு ஒரு மனிதன் 18 முறை சுவாசித்தால் அவன் வயது 83 ஆண்டுகள். 2முறை சவாசித்தால் அவன் வயது 750 ஆண்டு. 1முறை சுவாசித்தால் அவன் வயது 1500 ஆண்டு. 0 முறை சுவாசித்தால் முடி வேயில்லை.

ஒரு மனிதன் ஓம்காரம் சொன்னால் அவனுடைய சுவாசத்தின் நீளம் குறைந்து சுவாசம் மிச்சப்படுகிறதாம். ஆகையால் பிரணவ மந்திர (ஓம்) ரகசியம் அறிந்தவர் களும் நீண்ட நாள் வாழலாம்.

இன்னொரு சித்தர் இப்படிக் கூறுகிறார்.

ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம்



இதில் ஒன்பது ஓம் உள்ளது. இதை உச்சரிக்கும் முறை மிகவும் முக்கியமானது. முதலில் ஓம் ம் ம் ம் ம் என்று ம் ஐ மிக அழுத்தி உச்சரித்து பின் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் என்று உச்சரித்து பிறகு ஓம் ம் ம் ம் ம் ம் ம் ம் என்று ம் ஐ அழுத்தி உச்சரிக்க வேண்டும். இப்படி மூன்று முறை சொல்ல வேண்டும். நீங்கள் நினைத்த காரியம் அப்படியே நடக்கும் என்று சொல்லப்படுகிறது.

திருமூலர் சொல்கிறார் "ஓம் ஐஸ்வ ரேஸ்வராய நம" என்று தினமும் உச்சரித்துக் கொண்டு வந்தால் உங்களுக்கு சகல ஐஸ்வர் யமும் கிடைக்கும். உங்கள் இல்லங்கள் என்றும் செல்வ செழிப்பாக விளங்கும்.

"ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொலி ஞானம் தோன்றும்,
ஒம் ஒலி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்,
ஒளியொளிர் உருவந்தானே ஆடலன் ஆடலன்றோ."

என்று மய விஞ்ஞானத்தில் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓம் என்ற ஒளியை கேட்டாலே ஞானம் வரும். அப்படி மிகவும் சிறப்பு வாய்ந்தது இந்த ஓம் எனும் மந்திரம்.

யார் எது கேட்டாலும் இல்லை என்று கூறா மல் ஓம் என்றே கூறுங்கள் அதுவே உங்களை உயர் நிலைக்கும் சிறப்பாய் இருப்பதற்கும் வழி வகுக்கும்.

பகவத்கீதையில் கிருஷ்ணர் கூறுகிறார். எவனொருவன் பரம்பொருளாகிய 'ஓம்' என்ற ஓரெழுத்துச் சொல்லை உச்சரித்துக் கொண் டும், என்னை மனதில் நினைத்துக் கொண்டும் இப்பூத உடலை விட்டுப் புறப்படுகின்றானோ அவன் எல்லாவற்றிற்கும் மேலான கதியை அடைகிறான்.

அத்தோடு ஆலயங்களில் கூட்டாக அமர்ந்து "ஓம்" என்று எல்லோரும் உச்சரிப் பீர்களேயானால் அந்த இடம் மிகவும் சக்தி வாய்ந்த இடமாக மாற்றம் அடையும். அந்த இடத்திற்கு வந்தாலே தானாகவே மன சங் கடம் அகல்வதையும் கவலை நீங்குவதையும் சக்தி உங்களுக்குக் கிடைப்பதையும் கண் கூடாகவே காண்பீர்கள்.

இந்த 'ஓம்' மந்திரம் உச்சரிப்பவர்களின் உள்ளத்திற்கு அமைதியையும், அறிவிற்குக் கூர்மையையும் ஏற்படுத்தும், நன்மை தரும் மின் அதிர்வுகளை உண்டாக்குகிறது. ஒன்று மட்டும் மிக உண்மைச் "ஓம்" என்பது உடலி லும் உள்ளத்திலும் உங்களை சுற்றி உள்ள சூழ லிலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்து கிறது. இதை உச்சரித்து நீங்களே அனுபவித்துப் பாருங்கள்.

இன்று எல்லோரிடமும் "Phone, Laptop, I Pad, Internet என்று உள்ளது. லுடிரவரநெ இல் டீஅ உாயவேபை என்று தேடி அதைத் தரவிறக்கம் செய்து Head Phone அல்லது Ear Phone இலோ கேட்டு நீங்களும் ஒரு நாளைக்கு குறைந்தது 10 நிமிடம் அமைதியாக இருந்து செய்து பாருங்கள் உங்கள் நோய்கள் நீங்கு வதை, உங்கள் கவலைகள் பறப்பதைத் தெரிந்து சொல்வீர்கள் உங்களுக்கு வேண்டியதை அடைய முடியும் என்பதையும் அதற்குரிய சூட்சுமம் இதுதான் என்பதையும் உணர் வீர்கள்".

**உசாத்துணை:**
http://tamilarkalinsinthanaikalam.blogspot.com
http://enganesan.blogspot.com
http://korakkar-sankar.blogspot.com

**எந்திரி.ச. சர்வராஜா**
நீர்ப்பாசனப் பொறியியலாளர்.
நீர்ப்பாசனத் திணைக்களம், (வ.மா).

உ

ஓம்

# நாம் வழுத்தும் படிக்கே வரமானாய் எம் வாசலிலே !

# சாளம்பைப் பதிகம்

**வேலணையூர் தாஸ்**

## காப்பு

நெஞ்சம் நெகிழ்ந்து நீள நினைந்துருகி
தஞ்சமென்றிரங்க தமிழ் தருவான் - சாளம்பை
தண்பதியான் முருகன் தனைப்பாட
அண்ணன் கணபதியே காப்பு.

1. பொங்குபுகழ் மல்லாகம் சேர்ந்த சாளம்பை
   பதி அமரும் சுந்தரனே!
   எங்கும் அருள் நிறைந்தாய்!
   எம் மக்கள் மனம் நிறைந்தாய்
   பங்கமில்லா பெருவாழ்வு தந்தாய்!
   தெய்வயானை சேர்! எழில் குமரா!
   சங்கம் வளர்த்த தமிழ்த் தலைவா!
   என் தன் தமிழினிலே வா!

2. சந்தித்தோம் சாளயம்பதியினில்
   முருகா உள் அருளுன்னி
   சிந்தித்தோம் சிவன் சுதனே!
   எந்நாளும் வந்துன்னடிகள்
   வந்தித்தோம் நாளும் வரம் தரும்
   வள்ளல் பெருமானே பல பிறவி
   பந்திக்கும் பாவ வினையறுப்பாய்
   பன்னிருகரமுடைய பாலகனே.



3. ஆலமர நிழலமர்ந்தாய் அடியார்க்கு
நல்லருளை தினமும் தானமிட்டாய்
கோல எழில் குமரா! குளிர்கண் வள்ளி
நாயகனே! வண்ணமயிலோனே
காலம் கடந்த கற்பகமே! திருகோண
திதி தன்னில் தீர்த்தமாடும் திருவே
நீலமிடற்று நிர்மலனின் நன்மகனே
நின் பாதம் கதியென்றே பணிந்தோம்.

4. வேகம் நிறைந்த வினை வாழ்வில்
விழுந்து துயருழன்றோம்
மேகமென அருள் பொழியும் எழிலூர்
சாளம்பை நாயகனே நல்குமரா
தாகம் கொண்டலைந்தோம் தவித்தோம்
உன் அருள் நீரால் பேறடைந்தோம்
ஏகம் நிறை பொருளே எம்மனதில்
என்றும் நிறைந்திருக்கும் இன்னருளே!

5. தேடி வந்தோர் நின் தலம் சேர
பாவவினை மாளும் முகம்
வாடி நிற்போர் வலம் செய்ய
வந்த வினை ஓடும்! நிதம்
பாடி பணியும் பக்தர்கள் சூழ்
சாளம்பை பதியில் மணித்தேர்
ஓடி புகழ் கொண்டாய்
ஒளியிருக்கும் வேலவனே.

6. ஆனி உத்தரத்திலே கொடியேறியாடும்
உன் அழகு காண மனம் கவிபாடும்
வானில் வரு மழையெனவே வேல்
அருளள்ளி வீசும்! அடியார்
கானமெழுந்து கனகவெளி நிறைக்கும்
எம் கவலைகளும் பறக்கும்
தேனில் விழும் பழச்சுவையே
சாளம்பை பதியமர்ந்த தேசிகனே.

7. வேத மொழி விண்ணவர்கள்
தாள் பணியும் வேலவனே
போதமிகு ஞான சுடர்வேலாய்
வந்தணைந்தாய்! நின் பக்தர்
ஓதுகின்ற பாசுரங்கள் பரவும் எழில் குமரா
புனிதம் நிறை புஸ்கரணித்தீர்த்தமுடன்
மேகம் தொடு இராசகோபுரமும் கண்டாய்
மிகவுயர்ந்தாய் நுண்ணியனே.

8. எழுந்தும் விழுந்தும் கிடந்தும்
எந் நாளும் உனை நினைந்தோம்
அழுந்தும் பிறவிக்கடல் நீங்க
துணை நீ! குமரா நாம்
வழுத்தும் படிக்கே வரமானாய்
எம் வாசலிலே! அறம்
பழுத்த ஞானக்கனியே முருகா
சாளம்பை தேசிகனே.

9. தீர்க்காதோ புஸ்கரணி தீர்த்தம்
எம் பாவ வினை யெல்லாம்
வேர்க்காதோ மேனி உன் தல முருண்டு
விழியது கைதொழுது ஏந்தி
ஈர்க்காதோ எம்மவரை இன்னருளின்
சக்தி உமைபாலா உன் புகழை
ஆர்க்காதோ உன் ஆலயத்தின்
அருள் தங்கும் சங்கம்..

10. போற்றி எம் நெஞ்சம் குழைத்தாய்
எம் விழியுமானாய்
போற்றியுன் புஸ்கரணை தீர்த்தம் எம்
வாழ்வின் பொருளுமானாய்
போற்றி சுடர் விடும் வேல்
அறிவின் முழுமையானாய்
போற்றி சாளம்பை முருகனே
எம் வாழ்வாய் வந்தாய்.



உ
சிவமயம்

# சாளம்பையான் கோபுரமே!

கோபுரமே இராஜ கோபுரமே
கோபுரமே சாளம்பைக் கோபுரமே!

அருணகிரி கிளியாய் அமர்ந்த கோபுரமே
அருளை ஒளியாய் வழங்கும் கோபுரமே
அனைவரும் வணங்கிட அழகிய கோபுரமே
அனைத்தையும் வழங்கிட அமைந்த கோபுரமே

முத்திதரும் முருகானந்த கோபுரமே
சித்தி தரும் சிவானந்த கோபுரமே
பக்தி தரும் பரமானந்த கோபுரமே
புத்தி தரும் பிரமானந்த கோபுரமே

சிறகடித்து சேவல் கூவும் கோபுரமே - மெய்
சிலிக்க மயில் வந்தாடும் கோபுரமே
சிற்பங்கள் சிறந்து விளங்கும் கோபுரமே
சிலைகளில் கலைகள் மிளிரும் கோபுரமே

ஆல் உடனும் அரசுடனும் அமைந்த திருக்கோபுரமே
வேல் ஆட வினையோடும் வேல் முருக கோபுரமே
நாள் தோறும் நாம் போற்றும் கோபுரமே
வாழ் வாங்கு வாழ வழி ஆற்றும் கோபுரமே

அவதாரம் கொண்டு அசுரர்கள் அழித்தவன் கோபுரமே
அசரீரியாய் வந்து அழகர்க்கு மொழிசொன்னவன் கோபுரமே
அகிலம் ஆளும் அழகன் அருள்க்கோபுரமே
அமைந்த நம் சாளம்பையான் கோபுரமே.

**சி. இராசரத்தினம்**

உ
சிவமயம்

# ஏழாலை
# சாளம்பை வேல்முருகப் பெருமான்
# திருவூஞ்சல்

## காப்பு

சீராருஞ் சைவவியல் தெளிந்து தேர்ந்து
    சிவம்பெருக்கும் ஏழாலை திகழத் தோன்றித்
தாராரும் மார்பழகர் தவம்போலோங்குஞ்
    சாளம்பைத் தலமேவித் தமியேம் புன்மை
வேராரும் பிறவிமயல் வீட்டி யாளும்
    வேல்முருகப் பெருமான்மே லூஞ்சல் பாட
ஆராரும் அரசநிழ லமர்ந்து காக்கும்
    ஐங்கரனை எம்பரனை அகத்துள் வைப்பாம்.

## ஊஞ்சல்

எண்ணமரும் மேருவென இருதூண் நாட்டி
    இமயமென மணிச்சட்டம் இடையே பூட்டித்
தண்ணமருங் கங்கையிரண் டெனவீர் பாலுந்
    தனியொழுகும் முத்துவடந் தளிர்ப்ப மாட்டிக்
கண்ணமரும் பெருநிலம்போற் கவினத் தோன்றும்
    கனகமணிப் பலகைபொலி யூஞ்ச லேறி
விண்ணமரும் புகழ்மலிசா ளம்பை மேவும்
    வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல்    (1)

பாசமெனும் பழங்கயிற்றிற் பயிலச் சேர்த்திப்
    பண்டைவிதி தொடுத்தமனப் பலகை யேறி
ஊசல்மகிழ் சிறுவரென உவப்புற் றாடும்
    உயிராட்டம் உனதருளில் ஒடுங்க நீங்கா
நேசமுடன் யாமடியோம் நினைவாற் செய்த
    நித்திலப்பொன் னூசலொளி நிகழ வேறி
வீசுபுகழ் மிக்குயர்சா ளம்பை மேவும்
    வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல்    (2)



வேதமெனும் பாதபத்தின் மிசைக்கொண் டோங்கும்
வியன்கிளையாம் ஆகமத்தி லரும்பித் தோன்றிப்
போதமலி சரியையொடு கிரியா யோக
புகழ்ஞான மெனமலரும் புதுப்பூங் கொத்தில்
நீதகலக் காய்த்துமுதிர்ந் தமுத மூறுஞ்
செழுங்கனியே! கனிரசமே! ரசத்தீம் பாகே!
மேதமிகுமின் சுவையே! சாளம்பை மேவும்
வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (3)

சேயவுத யாசலத்திற் செவ்வே தோன்றுஞ்
செங்கதிர்கள் பலகோடி சேர்ந்தொன் றாகிப்
பாயவுல கிருட்படலங் கிழித்துப் பார்மேற்
படர்ந்தனைய பொற்சோதிப் பரனே! சாருந்
தீயபுலப் பதைப்பொடுங்கத் தெரிந்துன் பாதச்
செழுநிழலே ஒதுக்கிடமாய்த் தேடு மன்பர்
மேயதுயர் களைந்துயர்சா ளம்பை மேவும்
வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (4)

பால் மருவும் மொழிவள்ளி தெய்வ யானை
பாங்கமர்நம் பரனமரும் பதியீ தென்றே
நீல்மருவுந் தோகையினம் விண்மேற் சூழ்ந்து
நிழற்றிடுமோர் நெடும்பீலிப் பந்த ரென்ன
ஆல்மருவும் பொழிற்பந்தர் அமைய, ஓர்பால்
அலரிசிரித் தெனவலரும் அழகு நோக்கி
மேல்மருவும் விண்மகிழ்சா ளம்பை மேவும்
வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (5)

குஞ்சரமா முகற்கிளைய கோவே! அன்பாற்
கொஞ்சியுமை முத்தமிடும் பூவே! இன்பக்
கஞ்சமலர்த் திருவனையாள் தெய்வ யானை
காதலியாள் வள்ளிமகிழ் தேவே! பொற்பார்
செஞ்செவிய கடம்புமலர் காவே! தேவர்
சிறப்புறவிண் குடியேற்றுந் தேவ தேவே!
விஞ்சுபுகழ் மிக்கெழுசா ளம்பை மேவும்
வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (6)

சிற்பரஞா னப்பொருளைச் செவிவா யொன்றிச்
    சிவனார்தம் மனங்குளிர உபதே சித்த
அற்புதனே அருள் ஞானக் குறியில் நின்று
    அயலறியா ஆதரவில் அழிந்தொன்றாகி
நிற்பரவு மன்பர்மனக் குகைக்குள் மேவும்
    நிகரில் சுகபூரணமே! நினைவார் பேறே!
விற்பொலிநன் னுதலார்சா ளம்பை மேவும்
    வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (7)

பீடாரும் வயிரமணிக் கிரீடந் தாங்கிப்
    பிறங்குமெழில் பொலிதங்கக் கவசம் பூண்டு
சேடாரும் நவமணிவேல் திருக்கை யேந்திச்
    சிவராஜ ராஜனெனத் திகழ்கெம் பீர
நாடாளும் நாயகனே! நயனில் சூர
    நாசகனே! பாசவினை தவிர்த்தோர்க் கின்ப
வீடாளும் நலமருள்சா ளம்பை மேவும்
    வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (8)

மஞ்சுதழைத் தெனமிளிரும் மயின்மீ தேறி
    வள்ளிதெய்வ யானையிரு மருங்கும் வைக
எஞ்சலிலா தெவ்வுயிர்க்கு மிடர்தீர் வைவேல்
    எழில்தோன்ற அபயமொடு வரதந் தோன்றச்
செஞ்சரணத் தொளிதோன்றத் திகழு மன்பர்
    திரள்தோன்றத் திருவீதி பொலியத் தோன்றி
விஞ்சுமருள் வரந்தருசா ளம்பை மேவும்
    வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (9)

ஈரமிகு செந்தமிழ்ப்பித் தேறி அத்தால்
    இறைவனருள் கவியினுமோர் குறையேசொன்ன
கீரனிடம் முருகாற்றுப் படையுங் கேட்டுக்
    கேழில்புக ழருணகிரிக் கருளிப் பக்தி
சாரமெனுந் திருப்புகழுந் தகவிற் கேட்ட
    தமிழறியும் பெருமாளே! தரணி போற்றும்
வீர! வர தாமணி! சா ளம்பை மேவும்
    வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (10)



அன்பூறும் மனத்தகத்தே அமுதா யூறும்
    ஆனந்த வாழ்முதலே யாடீ ரூஞ்சல்
துன்பறியாப் பரமசுக சூழல் காட்டுந்
    தூயசுட ரொளிவிளக்கே யாடீ ரூஞ்சல்
மன்பெருமா மறைப்பொருட்குள் மறைந்து வைகும்
    மகாமோன ரகசியமே யாடீ ரூஞ்சல்
மின்பொலிநல் லார்பயிர்சா ளம்பை மேவும்
    வேல்முருகப் பெருமானே யாடீ ரூஞ்சல். (11)

## வாழ்த்து

அந்தணரும் நான்மறையும் அறமும் வாழி!
    ஆகமநன் னெறிவாழி ! அறிஞர் வாழி!
வந்துதிரண் டுலகோம்பும் பசுக்கள் வாழி!
    வான்வாழி ! மழைவாழி ! பயிர்கள் வாழி!
சிந்தைமலர் சிவனடியார் கூட்டம் வாழி!
    திருநீற்றுப் பேரன்பு சிறந்து வாழி!
விந்தைமிகு சிவானுபவ விளக்கம் வாழி!
    வேல்முருகப் பெருமான்ற னருளும் வாழி!

## எச்சரீக்கை

**பல்லவி**

தனதானன தனதானன தனதானன தான
சாளம்பைநன் னகர்மேவிய சாமீயெச்ச ரீக்கை.

**சரணம்**

திருமாமறைப் பொருளாய்வரு திருவேயெச்ச ரீக்கை.
சிவனாரருட் பொறியேசிவக் கனலேயெச்ச ரீக்கை.
மருவார்குழ லுமையாள் விழி மணியேயெச்ச ரீக்கை.
மறவாதடி நினைவாரக வாழ்வேயெச்ச ரீக்கை.
(தன தானன)

திருவேரக மிசைசேர்சிவ குருவேயெச்ச ரீக்கை.
சிவனார்க்குமொ ருபதேசமுன் செய்தாயெச்ச ரீக்கை.
பொருசூரனும் பெருவாழ்வுற வளித்தாயெச்ச ரீக்கை.
புவனம் முழு துடையாள் மகிழ் புதல்வாயெச்ச ரீக்கை.
(தன தானன)

அறிவற்றறி அறிவில்வரும் அறிவேயெச்ச ரீக்கை.
அடியாருளங் குடியாக்கொளும் அடிகேளெச்ச ரீக்கை.
நெறியற்றவர் செலும்பாதையில் நில்லாயெச்ச ரீக்கை.
நெறிமேல்வரு சிறியேமெமை நினைவாயெச்ச ரீக்கை.
(தன தானன)

## பராக்கு

**பல்லவி**

தானந்த னாதனன தானா தனான
சாளம்பை வேல்முருக சாமீ பராக்கு

**சரணம்**

சொக்கவெழில் மிக்கசிவ சுடரே பராக்கு
சூர்மாள வேல்விடுத் துரையே பராக்கு
சிக்கல்வரு சிங்கார வேலா பராக்கு
செந்தூரி லாறுமுக தேவே பராக்கு.
(தானந்த)

வையமுழு துய்யவருள் வாழ்வே பராக்கு
வள்ளிதெய்வ யானைமண வாளா பராக்கு
வெய்யபகை வீட்டுதிறல் வேந்தே பராக்கு
வேங்கடசுப் பிரமணிய வேளே பராக்கு.
(தானந்த)

முதிர்ஞான நலமருளும் மூர்த்தி பராக்கு
மூவாத பேரின்ப முதலே பராக்கு
கதிர்காம மேவிமகிழ் கந்தா பராக்கு
காண்பினிய துரைசாமி நாதா பராக்கு.
(தானந்த)

# ஏலப்பாட்டு

ஏலேலோ - ஏலிலலோ - தத்தெய்யா
ஏலேயெலோ
சீராரும் அரசநிழல் - சிறப்புறவே எழுந்தருளும்
காராரும் மதயானை - தத்தெய்யா
கணபதிதன் திருவருளால் (ஏலேலோ)

சாளம்பை மேவியுறை சமரரண தீரன்
சாரவரு பாவபடை சங்கரித்த வீரன்
வேளென்று கொண்டாடும் மிகவினிய பேரன்
வேல்முருக னருளதனை மிகவேண்டிப் போற்றி (ஏலேலோ)

பேறுதரு பிரணவத்தின் வடிவான கப்பல்
பீழைதரு பிறவியெனுங் கடல்கடந் தப்பால்
கூறுமதி வேகமுட னோட்டவகை யுன்னி
குறைவறவே பலசரக்குங் கொள்ளமிக வேற்றி. (ஏலேலோ)

ஆடுவோம் - பாடுவோம்
தேடுவோம் - அடி- கூடுவோம் (ஏலேலோ)

திங்களொளிர் செய்யசடைச் சிவபெருமா னடிபரவி
அங்கயல்சேர் தேவியையும் - தத்தெய்யா
அநவரதம் தெண்டனிட்டு.
திசைமேவு புகழுறுமே மாலைநகர் தனிலே
செம்மைதிகழ் சாளம்பை மேவுமுரு கேசன்
இசைமேய ஆறெழுத்தை இதயத்தி லெண்ணி
இம்மெனுமுன் தொழில்கேட்க ஐம்புலனை நிறுத்தி. (ஏலேலோ)

விசைமேவு மணியத்தில் விட்டுணுவை வைத்து
வீறான கடையத்திற் பிரமாவை நிறுத்தி
நசைமேவு பாயிழுத்துச் சுக்கானைத் திருப்பி
நன்மைதரு மருளாழி நடுவே செலுத்தி

ஆடுவோம் - பாடுவோம்
தேடுவோம் - அடி - கூடுவோம் (ஏலேலோ)
வாசனையாம் பெரும்புயலும் வருதுன்பச் சுழியுமென
மாசுறுதல் தடைகளினால் - தத்தெய்யா
மதிமோசம் உறாதவகை
சத்திவடி வேலோடு சாளம்பை மேவிச்
சாலம்ப மாயும்நி ராலம்ப மாயும்
எத்திறமும் நமையாளு மேந்தல்முரு கேசன்
இணையடிகள் நன்றாக இதயத்தில் வைத்து (ஏலேலோ)

சுத்தஅத்து வாக்களையுந் துரிதமொடு கடந்து
'சோஹ மெனும் தீவினைச் சுற்றிவழி கண்டு
சத்திபுவ னக்கடலைத் தாண்டியதற் கப்பால்
சலியாத மோனமெனும் பாய்மாறி யிழுத்து (ஏலேலோ)

முத்தியெனும் பெருங்கரையை நோக்கிமுடு முடுகி
முகிழ்ந்துவரு பரஞான மூர்த்தமே யாகி
பத்த 'ரர ஹர வென்னு மொருநாத மோங்கப்
பரவெளிக் கப்பாலே போகுதே கப்பல். (ஏலேலோ)

ஆடுவோம் - பாடுவோம்
தேடுவோம் - அடி - கூடுவோம் (ஏலேலோ)



# மங்களம்

**பல்லவி**

மங்களம் மங்களம் - நித்யசுப

மங்களம் மங்களம்.

**சரணம்**

சாளம்பை முருகனுக்கு

சர்வசக்தி உருவனுக்கு

வேளென்று திகழ்பவற்று

வீரவிறல் நிகழ்பவற்கு

- மங்களம்

பார்வதியாள் பாலனுக்கு

பரமசுக சீலனுக்கு

போர்கருதும் வேலனுக்கு

புண்யவெழிற் கோலனுக்கு

- மங்களம்

சத்தியச னாதனற்கு

தங்கமயில் வாகனற்கு

நித்தியவுல் லாசனுக்கு

நிகரிலருள் நேசனுக்கு

- மங்களம்

சுபம்.

# 1978இற்கு முன் ஆரம்பகால பரிபாலன சபையை முன் நின்று வழி நடாத்திய வரிசையில் மூத்த உறுப்பினர்கள்

**ஸ்தாபகர் அழகர் சுவாமி , சு.சூ சிவப்பிரகாசம், (சட்டத்தரணி) ஐ. பேரம்பலம் (வைத்தியர்) சின்னப்பு, கு. இளையவி, கு. மூத்தவி வைரமுத்து, அப்புத்துரை, கிருஸ்ணர், கார்த்திகேசு, குட்டித்தம்பி கிருஸ்ணா, நாகமுத்து.**

| | | |
|---|---|---|
| *1971வரை* | தலைவர்கள் | இ. சண்முகநாதன் |
| | | மூ. வைரவநாதன் |
| *1978 - 1979* | தலைவர் | கு. குருநாதன் |
| | உப தலைவர் | ச. அண்ணாமலை |
| | செயலாளர் | பொ. சிவலிங்கம் |
| | உபசெயலாளர் | த. தவராசா |
| | பொருளாளர் | கா. விமலநாதன் |
| | கணக்குப் பரிசோதகர் | கி. மகாதேவன் |
| | போசகர்கள் | த. சின்னப்பு |
| | | கெ. பாலசிங்கம் |
| *1979-1982* | தலைவர் | கு. குருநாதன் |
| | உப தலைவர் | இ. ஆனந்தன் |
| | செயலாளர் | இ. மகாதேவன் |
| | உப செயலாளர் | த. தவராசா |
| | பொருளாளர் | கா. விமலநாதன் |
| | கணக்குப் பரிசோதகர் | கெ. பாலசிங்கம் |
| | போசகர்கள் | பொ. கந்தசாமி |
| | | கெ. பாலசிங்கம் |
| | | தா. பேரின்பநாதன் |
| *1982-1984* | தலைவர் | மூ. வைரவநாதன் |
| | உப தலைவர் | ச. அண்ணாமலை |
| | செயலாளர் | கி. மகாதேவன் |
| | உப செயலாளர் | பொ. சிவலிங்கம் |
| | பொருளாளர் | ச. இரத்தின வடிவேல் |
| *1982-1984* | நிர்வாக சபை உறுப்பினர்கள் | க. முருகுப்பிள்ளை |
| | | கா. விமலநாதன் |
| | | இ. ஆனந்தன் |
| | | மு. நாகலிங்கம் |



| | | |
|---|---|---|
| | | க. கருணாகரன் |
| | போசகர் | பொ. கந்தசாமி |
| | | கெ. பாலசிங்கம் |
| | | தா. பேரின்பநாதன் |
| *1984-1985* | தலைவர் | மூ .வைரவநாதன் |
| 57 ஆவது | உப தலைவர் | ச. அண்ணாமலை |
| | செயலாளர் | கி. மகாதேவன் |
| | உப செயலாளர் | இ. ஆனந்தன் |
| | பொருளாளர் | ச. இரத்தினவடிவேல் |
| | கணக்குப் பரிசோதகர் | நா. கணேச மூர்த்தி |
| | போசகர்கள் | போ. கந்தசாமி |
| | | கெ. பாலசிங்கம் |
| | | தா. பேரின்பநாதன் |
| *1985-1986* | தலைவர் | மூ . வைரவநாதன் |
| 58ஆவது | உப தலைவர் | கா. விமலநாதன் |
| | செயலாளர் | இ. ஆனந்தன் |
| | உப செயலாளர் | தா. பேரின்பநாதன் |
| | பொருளாளர் | இ. சிவராசா |
| | கணக்குப் பரிசோதகர் | க. குலசேகரம் |
| | போசகர்கள் | பொ. கந்தசாமி |
| | | கி. சுப்பிரமணியம் |
| | | கெ. பாலசிங்கம் |
| *1986-1987* | தலைவர் | மூ . வைரவநாதன் |
| 59 ஆவது | உப தலைவர் | இ. கதிரமலை நாதன் |
| | செயலாளர் | இ. ஆனந்தன் |
| | உப செயலாளர் | தா. பேரின்நாதன் |
| | பொருளாளர் | இ. சிவராசா |
| | கணக்குப் பரிசோதகர் | வீ. விமலாம்பிகைபாகன் |
| | போசகர் | பொ. கந்தசாமி |
| | | ப. நவரத்தினம் |
| *1987-1988* | தலைவர் | இ. கதிரமலைநாதன் |
| 60ஆவது | உபதலைவர் | ச. இரத்தினவடிவேல் |
| | உப செயலாளர் | த.தவராசா |
| | பொருளாளர் | இ. சிவராசா |
| | கணக்குப் பரிசோதகர் | நா. கணேசமூர்த்தி |
| | நிர்வாகசபை உறுப்பினர்கள் | சி. பாலசிங்கம் |

| | | |
|---|---|---|
| | | ஆ. இராசு |
| | | சி. அப்புத்துரை |
| | | மு., நாகலிங்கம் |
| *28. 01. 1989* | தலைவர் | இ. ஆனந்தன் |
| | உப தலைவர் | மு. நாகலிங்கம் |
| | செயலாளர் | ச. இரத்தினவடிவேல் |
| | உப செயலாளர் | த. தவராசா |
| | பொருளாளர் | இ. சிவராசா |
| | உப பொருளாளர் | சு. ஈவரதாஸ் |
| | நிர்வாக சபை உறுப்பினர்கள் | ஆ. இராசு |
| | | சி. அப்புத்துரை |
| | | ஐ. கதிர்வேலு |
| | | கு. குருநாதன் |
| | | கா. விமலநாதன் |
| | | இ. இராசரத்தினம் |
| | | இ. கதிரமலைநாதன் |
| | | ஆ. இரகுபதி |
| | கணக்குப் பரிசோதகர் | மு. கதிரவேலு |
| | | நா. கணேசமூர்த்தி |
| *1989-1999* 74ஆவது | தலைவர் | இ. ஆனந்தன் |
| | உப தலைவர் | அ. சிவராசா |
| | செயலாளர் | ச. இரத்தினவடிவேல் |
| | உப செயலாளர் | கு. தெய்வேந்திரன் |
| | பொருளாளர் | நா. கணேசமூர்த்தி |
| | உப பொருளாளர் | வே. லோகராஜன் |
| | நிர்வாக சபை உறுப்பினர்கள் | கி. சிவசுப்பிரமணியம் |
| | | வ. இராசரத்தினம் |
| | | சி. இராசரத்தினம் |
| | | சு. ஈஸ்வரதாஸ் |
| | | பூ. கந்தசாமி |
| | கணக்குப் பரிசோதகர் | செல்வி அ. சயந்தினி |
| *1999- 01.08. 2001* 75ஆவது | தலைவர் | இ. ஆனந்தன் |
| | உப தலைவர் | அ. சிவராசா |
| | செயலாளர் | ச. இரத்தினவடிவேல் |
| | உப செயலாளர் | கு. தெய்வேந்திரன் |



| | | |
|---|---|---|
| | பொருளாளர் | நா. கணேசமூர்த்தி |
| | உப பொருளாளர் | வே. லோகராஜன் |
| | நிர்வாக சபை உறுப்பினர்கள் | கி. சிவசுப்பிரமணியம் |
| | | வ. இராசரத்தினம் |
| | | சி. இராசரத்தினம் |
| | | வை. யோகேந்திரன் |
| | | மு. நாகலிங்கம் |
| | | சு. ஈஸ்வரதாஸ் |
| | | பூ. கந்தசாமி |
| | | வே. ஜெயக்கொடி |
| | (தொண்டர் சபைத் தலைவர்) | நா. தம்பிராசா |
| | கணக்குப் பரிசோதகர் | செல்வி அ. சயந்தினி |
| *2001-2003* | தலைவர் | இ. ஆனந்தன் |
| | உப தலைவர் | கு. தெய்வேந்திரன் |
| | செயலாளர் | ச. இரத்தினவடிவேல் |
| | உப செயலாளர் | வை. யோகேந்திரன் |
| | பொருளாளர் | நா. கணேசமூர்த்தி |
| | உப பொருளாளர் | வே. லோகராஜன் |
| | நிர்வாக சபை உறுப்பினர்கள் | மு. நாகலிங்கம் |
| | | நா. தம்பிராசா |
| | | வே. ஜெயக்கொடி |
| | | க. குலசேகரம் |
| | | ஆ. இராசு |
| | | மா. தேசிங்கராசா |
| | | செ. குணசேகரம் |
| | கணக்குப் பரிசோதகர் | செல்வி அ. சயந்தினி |
| *21. 11. 2004* 76ஆவது | தலைவர் | இ. ஆனந்தன் |
| | உப தலைவர் | கு. தெய்வேந்திரன் |
| | செயலாளர் | ச. இரத்தினவடிவேல் |
| | உப செயலாளர் | வை. யோகேந்திரன் |
| | பொருளாளர் | நா. கணேசமூர்த்தி |
| | உப பொருளாளர் | ச. பரராசசிங்கம் |
| | நிர்வாக சபை உறுப்பினர்கள் | வே. லோகராஜன் |
| | | சு. ஈஸ்வரதாஸ் |
| | | கி. சுப்பிரமணியம் |
| | | மு. பாக்கியநாதன் |

| | | |
|---|---|---|
| | | அ.சிவராசா |
| | | சு. இராசநாயகம் |
| | | மா. தேசிங்கராசா |
| | | த. கதிரமலை |
| | | அ. கனகலிங்கம் |
| | | க. குலசேகரம் |
| | | மா. செல்வம் |
| | | செ.குணசேரம் |
| | | ச. அருணாசலம் |
| | | நா. தம்பிராசா |
| | | வ. செல்லத்துரை |
| | | ஆ. இராசு |
| | | சி. இராசரத்தினம் |
| | கணக்குப் பரிசோதகர் | செல்வி . ச. சயந்தினி |
| | போசகர் | பொ. கந்தசாமி |
| *2.03.2008 -* | | |
| *04.12.2011* | தலைவர் | ச. இரத்தினவடிவேல் |
| 77ஆவது | உபதலைவர் | கு. தெய்வேந்திரன் |
| | செயலாளர் | வை. யோகேந்திரன் |
| | உபசெயலாளர் | நா. கணேசமூர்த்தி |
| | பொருளாளர் | வே. லோகராஜன் |
| | உபபொருளாளர் | தா.பேரின்பநாதன் |
| | நிர்வாக சபை அங்கத்தவர்கள். | சந்திரகுமார் |
| | | த. கதிரமலை |
| | | நா. தம்பிராசா |
| | | க.முருகானந்தன் |
| | | ச. பரராசசிங்கம் |
| | | சி. மகேஸ்வரன் |
| | | ந.தர்மகுலசிங்கம் |
| | | பூ. கந்தசாமி |
| | | அ. சிவராசா |
| | | மு. பாக்கியநாதன் |
| | போசகர் | பொ. கந்தசாமி |
| | கணக்குப் பரிசோதகர் | ச. அருணாசலம் |

| | | |
|---|---|---|
| *04.12.2011-2014* | தலைவர் | திருமதி. லோ. இரகுபதி |
| 80ஆவது | உபதலைவர் | தா. பேரின்பநாதன் |
| | செயலாளர் | நா. கணேசமூர்த்தி |
| | உப செயலாளர் | மா. செல்வம் |
| | பொருளாளர் | ம. இராசநாயகம் |
| | உப பொருளாளர் | சி. இன்பராசா |
| | நிர்வாக சபை அங்கத்தவர் | த. கதிரமலை |
| | | சி. கண்ணன் |
| | | வை. யோகேந்திரன் |
| | | கு. தெய்வேந்திரன் |
| | | ஈ. சுந்தரேஸ்வரன் |
| | | இ.கதிரமலைநாதன் |
| | | இ. சகாதேவன் |
| | | நா. தம்பிராசா |
| | | ச. பரராசசிங்கம் |
| | | கி. மகாதேவன் |
| | | பூ. கந்தசாமி |
| | | கு. சுகுமாரன் |
| | (தொண்டர் சபைத் தலைவர்) | வே. ஜெயக்கொடி |
| | போசகர் | பொ. கந்தசாமி |
| | ஆலோசகர் | இ. ஆனந்தன் |

## இராஜகோபுர திருப்பணிச் சபை - 2014

1. திருமதி லோ. இரகுபதி
2. சு. இராசநாயகம்
3. த. கதிரமலை
4. ஈ. சுந்தரேஸ்வரன்
5. நா. தம்பிராசா
6. கு. தெய்வேந்திரன்
7. ச. பரராசசிங்கம்
8. ச. சர்வராஜா
9. மா. செல்வம்
10. சு. சுகிர்தராஜா
11. நா. கணேசமூர்த்தி
12. வே. ஜெயக்கொடி

## மலர் வெளியீட்டுக்குழு

1. திருமதி லோ. இரகுபதி
2. நா. கணேசமூர்த்தி
3. ஈ. சுந்தரேஸ்வரன்
4. கு. தெய்வேந்திரன்
5. ச. பரராசசிங்கம்
6. ச. சர்வராஜா
7. இ. சகாதேவன்
8. திருமதி கோ. சதீஸ்குமார்
9. வே. லோகராஜன்



**1978ஆம் ஆண்டுக்குப் பின் பரிபாலன சபையில் தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், உப பொருளாளர், போசகர், கணக்குப் பரிசோதகர் மற்றும் அங்கத்தவர்களாக இருந்து அமரத்துவம் அடைந்தவர்கள் வரிசையில்**

1. இ. சண்முகநாதன்
2. மூ. வைரவநாதன்
3. ஆ. இராசு
4. ஐ. கதிரவேலு
5. கு. குருநாதன்
6. மு. நாகலிங்கம்
7. சி. குணசிங்கம்
8. சி. குணசிங்கம்
9. சி. பாலசிங்கம்
10. வெ. கந்தையா
11. சி. அப்புத்துரை
12. சீ. முத்துலிங்கம்
13. அ. சிவபாதம்
14. க.பசுபதி
15. ஆ. சுவாமிநாதன்
16. மு. சிதம்பரநாதன்
17. கெ. பாலசிங்கம்
18. மு. கதிரவேலு
19. கா. விமலநாதன்
20. த. இரத்தினம்
21. ப. நவரத்தினம்
22. சு. சந்திரன்
23. பொ. கதிரவேலு
24. இ. மகாதேவன்
25. செ. குணசேகரம்
26. ப. மகாலிங்கம்
27. த. தவராசா
28. ப. சர்வானந்தம்
29. செ. அன்னலிங்கம்
30. கி. செல்வரத்தினம்
31. இ. மனோகரன்

## சாளம்பை முருகன் ஆலயத்தில் நடைபெறுகின்ற விசேட விழாக்களின் உபயகாரர்களின் பெயர்ப் பட்டியல் - 2014

| விசேட தினங்கள் | உபயகாரர் பெயர் |
|---|---|
| 1. வருட அபிஷேகம் | திரு. து. ரமேஸ் |
| 2. பரணி அபிஷேகம் | திரு. புரட்சிதாசன் |
| 3. கார்த்திகை அபிஷேகம் | சா. புஸ்பராணி |
| 4. தைப்பொங்கல் / சங்கிராந்தி | திரு. சி. சந்திரகுமார் |
| 5. தைப்பூசம் | திரு. மா. செல்வம் |
| 6. பரணி அபிஷேகம் | திருமதி. அ. அஜந்தா |
| 7. கார்த்திகை அபிஷேகம் | திரு. ப. குழந்தைவேல் |
| 8. சங்கிராந்தி தீர்த்தம் | திரு. நா. சூரியகுமார் |
| 9. மாசிமகம் | திருமதி வி. பவிராஜ் |
| 10. மகாசிவராத்திரி - 1ஆம் பூசை | திரு. மா. தேசிங்கராசா |
| 11. மகாசிவராத்திரி - 2ஆம் பூசை | திரு. தா. பேரின்பநாதன் |
| 12. மகாசிவராத்திரி - 3ஆம் பூசை | திரு. ச. தவநாதன் |
| 13. மகாசிவராத்திரி - 4ஆம் பூசை | திரு. அ. திருச்செந்திவேல் |
| 14. மகாசிவராத்திரி - 5ஆம் பூசை | திரு. செ. குணசேகரம் |
| 15. கார்த்திகை அபிஷேகம் | திரு. தெ. பரணி |
| 16. சங்கிராந்தி தீர்த்தம் | திரு. சி. வரதராஜன் |
| 17. வைரவர் அபிஷேகம் | திரு. சி. உதயகுமார் |
| 18. கார்த்திகை அபிஷேகம் | திரு. ச. ஸ்ரீகாந்தன் |
| 19. பங்குனி கடைசித் திங்கள் | திரு. க. நதீஸ் |

| | |
|---|---|
| *20.* அபிஷேகம் | திரு. கு. சுகுமாரன் |
| *21.* புதுவருடப்பிறப்பு / சங்கிராந்தி தீர்த்தம் | திரு. வி. தர்மகுலசிங்கம் |
| *22.* சித்திரை பூரணை விரதம் | திருமதி. நா சர்வானந்தம் |
| *23* சங்காபிஷேகம் (சித்திரை உத்தராடம் ) | திரு. தி. சுபேந்திரன் |
| *24.* பரணி அபிஷேகம் | திரு. சி. நவரத்தினம் குடும்பம் |
| *25.* கார்த்திகை அபிஷேகம் | திரு. இ. உதயமனோகரன் |
| *26.* சங்கிராந்தி தீர்த்தம் | திருமதி கோசலா சதீஸ்குமார் |
| *27.* கார்த்திகை அபிஷேகம் | திருமதி வதனி சந்திரகாந்தன் |
| *28.* பரணி அபிஷேகம் | திரு. தி. யமுனேஸ்வரன் |
| *29.* வைகாசி விசாகம் | திரு. ம. தயாபரன் |
| *30.* சங்கிராந்தி தீர்த்தம் | திரு. சி. பகீரதன் |
| *31.* கர்த்திகை அபிஷேகம் | திரு. மு. சடாச்சரலிங்கம் |
| *32.* கொடியேற்றம் | திருமதி செ. சந்திரன் |
| *33.* 2ஆம் திருவிழா (வசந்த உற்சவம்) | திரு. ச. இரத்தினவடிவேல் |

| **விசேட தினங்கள்** | **உபயகாரர் பெயர்** |
|---|---|
| *34.* 3ஆம் திருவிழா | திரு. ஈ. சுந்தரேஸ்வரன் |
| *35.* 4ஆம் திருவிழா | திரு. இ. சிவராசா |
| *36.* 5ஆம் திருவிழா (மாம்பழத் திருவிழா) | திருமதி பே. கதிரவேல் |
| *37.* 6ஆம் திருவிழா (கைலாசவாகனம்) | திரு. சி. இராசரத்தினம் |
| *38.* 7ஆம் திருவிழா (வேட்டைத் திருவிழா) | திருமதி சு. மங்கையற்கரசி |
| *39.* 8ஆம் திருவிழா | திரு. கு. தெய்வேந்திரன் |
| *40.* 9ஆம் திருவிழா (சப்பறத் திருவிழா) | திரு. வை. யோகேந்திரன் |
| *41.* 10ஆம் திருவிழா (தேர்த்திருவிழா) | திரு. இ. சகாதேவன் |
| *42.* தேரடித் திருவிழா | திரு. வே. ஜெயக்கொடி |
| *43.* தீர்த்தம் | திரு. இ. கதிரமலைநாதன் |
| *44.* கொடியிறக்கம் | திருமதி அ. இந்திராதேவி |
| *45.* பூங்காவனம் | திரு. கி. மகாதேவன் |
| *46.* பிராயச்சித்த அபிஷேகம் | திருமதி இ. சந்திராணி |
| *47.* சங்கிராந்தி அபிஷேகம் (ஆடிப்பிறப்பு) | திரு. அ. இரத்தினசிங்கம் |
| *48.* வைரவர் பொங்கல் | திரு. செ. சுந்தரலிங்கம் |
| *49.* ஆடிப் பரணி அபிஷேகம் | திருமதி மைதிலி அருண் |
| *50.* கார்த்திகை அபிஷேகம் | திருமதி இ. தவராசா |
| *51.* ஆடிமுதல் செவ்வாய் | திருமதி பே. லோகேஸ்வரி |
| *52.* வைரவர் 8ஆம் மடைப் பொங்கல் | திரு. செ. தர்மலிங்கம் |
| *53.* கதிர்காமக் கொடியேற்றம் | திரு. ச. சர்வராஜா |
| *54.* ஆடிப்பூரம் | திரு. பூ. கந்தசாமி |

| | |
|---|---|
| 55. வரலஷ்மி பூசை | திரு. பு. ஞானசுந்தர் |
| 56. கதிர்காமத் தீர்த்தம் | திரு. ம. சுந்தசாமி |
| 57. கடைசி ஆடிச் செவ்வாய் | திரு. வெ. கருணைநாதன் |
| 58. சங்கிராந்தி தீர்த்தம் | திரு. சு. இராசநாயகம் |
| 59. ஆவணி முதல் ஞாயிறு | திரு. மா. தேவராசா |
| 60. பரணி அபிஷேகம் | திரு. சி. நடராசா |
| 61. கார்த்திகை நட்சத்திரம் | திரு. ச. பரராசசிங்கம் |
| 62. ஆவணி சதுர்த்தி | திருமதி அ. கனகேஸ்வரி |
| 63. ஆவணி கடைசி ஞாயிறு | திரு. ச. அருணாசலம் |
| 64. கார்த்திகை அபிஷேகம் | திரு. க. மணிவண்ணன் |
| 65. சங்கிராந்தி தீர்த்தம் | திரு. சா. ஜெகசோதி |
| 66. புரட்டாதி சனி | திரு. பொ. நாகராசா |
| 67. நவராத்திரிப் பூசை ஆரம்பம் | திரு. க. குலசேகரம் |
| 68. நவராத்திரி 2ஆம் பூசை | திருமதி இராசரத்தினம் |
| 69. நவராத்திரி 3ஆம் பூசை | திரு. இ. சிவலிங்கம் |
| 70. நவராத்திரி 4ஆம் பூசை | திரு. க. சுதாகரன் |

| **விசேட தினங்கள்** | **உபயகாரர் பெயர்** |
|---|---|
| 71. நவராத்திரி 5ஆம் பூசை | திரு. க. முருகானந்தன் |
| 72. நவராத்திரி 6ஆம் பூசை | திரு. சி. நிறைபவன் |
| 73. நவராத்திரி 7ஆம் பூசை | திரு. ம. துரைராசா |
| 74. நவராத்திரி 8ஆம் பூசை | திரு. சி. மகேஸ்வரன் |
| 75. நவராத்திரி 9ஆம் பூசை | திரு. மு. பாக்கியநாதன் |
| 76. விஜயதசமி 10ஆம் பூசை | திரு. வே. லோகராஜன் |
| 77. புரட்டாதி கடைசிச் சனி | திரு. நா. நித்தியரஞ்சன் |
| 78. நாகதம்பிரான் கார்த்திகை | திரு. இ. பாலசிங்கம் |
| 79. சங்கிராந்தி தீர்த்தம் | திரு. ந. கதிரமலைநாதன் |
| 80. தீபாவளி | திருமதி கி. தவராசா |
| 81. கேதார கௌரி விரதம் | செல்வி சி. சிவகௌரி |
| 82. ஸ்கந்த ஷஷ்டி விரதம் 1ஆம் பூசை | திரு. இ. ஆனந்தன் |
| 83. ஐப்பசி முதல் வெள்ளி | திருமதி சி. மனோகரன் |
| 84. ஸ்கந்த ஷஷ்டி விரதம் 2ஆம் பூசை | திரு. ந. நவராஜா |
| 85. ஸ்கந்த ஷஷ்டி விரதம் 3ஆம் பூசை | திரு. அ. கனகலிங்கம் |
| 86. ஸ்கந்த ஷஷ்டி விரதம் 4ஆம் பூசை | திரு. நா. தம்பிராசா |
| 87. ஸ்கந்த ஷஷ்டி விரதம் 5ஆம் பூசை | திரு. ந. குணபாலசிங்கம் |
| 88. சூரன்போர் | திரு. பா. சுரேஸ்வரன் |
| 89. திருக்கலியாணம் | திரு. ஆ. இரகுபதி |
| 90. ஐப்பசி 2ஆம் வெள்ளி | திருமதி ச. பூமணி |
| 91. ஐப்பசிப் பரணி அபிஷேகம் | திரு. வீ. ஜெகதாம்பிகைபாகன் |

| | |
|---|---|
| 92. ஐப்பசி 3ஆம் வெள்ளி | திரு. த. ரவிச்சந்திரன் |
| 93. ஐப்பசி அச்சுவினி பார்வதிபரமேஸ்வரன் அபிஷேகம் | திருமதி அ. புவனேஸ்வரலிங்கம் |
| 94. கார்த்திகை அபிஷேகம் | |
| 95. சங்கிராந்தி தீர்த்தம் | திரு. சி. பழனி |
| 96. கார்த்திகை 1ஆம் திங்கள் | திருமதி சீ. தங்கமலர் |
| 97. கார்த்திகை 2ஆம் திங்கள் | திருமதி பா. நாகம்மா |
| 98. கார்த்திகை சதயம் அழகர் சுவாமி குரு பூசை | திருமதி லோ. இரகுபதி |
| 99. கார்த்திகை 3ஆம் திங்கள் | திரு. க. செல்வரத்தினம் |
| 100. குமாராலயதீபம் | திருமதி வி. பவானந்தராணி |
| 101. கார்த்திகைத் தீர்த்தம் | திரு. சி. கோபிகிருஸ்ணா |
| 102. சங்கிராந்தி தீர்த்தம் | திரு. சி. கோபிகிருஷ்ணா |
| 103. பிள்ளையார் கதை முடிவு | திரு. க. வசீகரன் |
| 104. திருவெம்பாவை 1ஆம் நாள் | திரு. சி. இன்பராசா |
| 105. திருவெம்பாவை 2ஆம் நாள் | திரு. நா. கணேசமூர்த்தி |
| 106. திருவெம்பாவை 3ஆம் நாள் | திரு. த. நடராசா |


| **விசேட தினங்கள்** | **உபயகாரர் பெயர்** |
|---|---|
| 107. திருவெம்பாவை 4ஆம் நாள் | திரு. ந. தர்மகுலசிங்கம் |
| 108. திருவெம்பாவை 5ஆம் நாள் | திரு. மு. திருமேனி |
| 109. திருவெம்பாவை 6ஆம் நாள் | திருமதி வா. உதயகுமார் |
| 110. திருவெம்பாவை 7ஆம் நாள் | திரு. த. கதிரமலை |
| 111. கார்த்திகை அபிஷேகம் | திருமதி சா. புஸ்பராணி |
| 112. திருவெம்பாவை 8ஆம் நாள் | திரு. சு. சுபேந்திரன் |
| 113. திருவெம்பாவை 9ஆம் நாள் | திரு. மு. தம்பிராசா |
| 114. திருவெம்பாவை 10ஆம் நாள் | திரு. கு. சிவனொளிபாதம் |

# நன்றியுரை

வரலாற்று சிறப்பு மிக்க சாளம்பைப் பதியிலே வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கந்தப்பெருமானின் இராஜகோபுர திருப்பணி நிறைவுபெற்று கும்பாபிஷேகம் காணும் இந் நாளில் இத்திருப்பணிக்கு முதன்முதலாக ரூபா பத்துலட்சம் அன்பளிப்புச்செய்து இத்திருப்பணியை ஆரம்பித்து வைத்த அமரர் இராசையா உதயமனோகரனை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறோம். அதனைத் தொடர்ந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்கின்ற அன்பர்களின் பேருதவியினால் இப்பாரிய திருப்பணி நிறைவு பெற்றுள்ளது. அந்த வகையில் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே.

சிற்ப வேலைகளைத் தத்ரூபமாகவும், உயிரோட்டமாகவும், அழகுற அமைத்துத் தந்த கலாவித்தகர் தவவீரசிங்கம் அவர்களுக்கும், அவர் குழுவினருக்கும், குடமுழுக்குக் கிரியைகளைச் சிறப்புற ஆற்றிய அந்தணச்சிவாச்சாரியார்களுக்கும், அக்கிரியைகளுக்கு வேண்டிய மாலை, பால், சமித்து, முதலியவற்றைத் தந்துவிய அடியவர்களுக்கும், மங்கல இசை வழங்கிய கலைஞர்களுக்கும் இன்று வெளிவரும் கும்பாபிஷேக மலருக்கு ஆலோசனைகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள் சிறப்புக் கட்டுரைகளையும் தத்துதவிய பெரியோர்களுக்கும், மலர் சிறக்க ஒத்துழைத்த மலர்க் குழு உறுப்பினர்களுக்கும், இம்மலரை அழகுற அச்சுப்பதிப்பு செய்து தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும், ஒலி அமைப்பாளர்களுக்கும், புகைப்பட வீடியோ கலைஞர்களுக்கும் இராஜகோபுரத்திருப்பணி வேலைகளின்போது முழு நேரத்தொண்டனாக இருந்து பணிபுரிந்த திரு. ச.பரராஜசிங்கம் அவர்களுக்கும், ஆலய வளர்ச்சிக்கும் பங்காற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**சாளம்பை முருக மூர்த்தி தேவஸ்தானம்**



சிவமயம்




மல்லாகம் - கோட்டைக்காடு

# சாளம்பை முருகமூர்த்தி ஆலய இராஜகோபுர அடிக்கல் நாட்டு வைபவம்

முருகன் அடியார்களே!


மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் நிகழும் மங்களகரமான நந்தன வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள் (28.10.2012) ஞாயிற்றுக் கிழமை பகல் 12.00 மணிக்கு இராஜ கோபுர அடிக்கல் நாட்டு வைபவம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இராஜகோபுர அடிக்கல் நாட்டு வைபவத்தின் ஆரம்ப நிகழ்வாக மண்ணெடுத்தல் வைபவம் ஐப்பசி மாதம் 8ம் நாள் (24.10.2012) புதன் கிழமை இரவு 8.00 மணிக்கு நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.



இவ் வைபவத்தில் அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு முருகன் அருள் பெற்றுயுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

**ஆலய பரிபாலன சபை**
**இராஜகோபுர திருப்பணிச்சபை**
**இந்து இளைஞர் தொண்டர் சபை**




கோட்டைக்காடு - மல்லாகம்

## அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்

# சாளம்பை முருகன் ஸ்கந்த புஸ்கரணி அங்குரார்ப்பண வைபவம்

திருச்சிற்றம்பலம்

"ஆறிரு தடந்தோள் வாழ்க! ஆறுமுகம் வாழ்க வெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க! வாழ்க சீர் அடியார் எல்லாம்."

திருச்சிற்றம்பலம்

## சாளம்பை தீர்த்த மண்டப தூபி அபிஷேகமும், தீர்த்தக்கேணி திறப்பு விழாவும்

**(04.07.2011 திங்கட்கிழமை)**

முருகன் அடியார்களே!

ஸ்ரீமத் லங்காபுரியிலே தட்சண கைலாயம் என அழைக்கப்படும் வடபால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மல்லாகம் எனும் புனித பதியில் அமைந்துள்ள சாளம்பை முருகனுக்கு நிகழும் மங்களகரமான கர வருடம் ஆனி மாதம் 19ம் நாள் 04.07.2011 திங்கட்கிழமை ஆயிலிய நட்சத்திரமும், சதுர்த்தி திதியும், சித்த யோகமும் கூடிய மு.ப 11.58 முதல் 12.05 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஸ்கந்த புஸ்கரணி தடாகத் திறப்பு வைபவம் நடைபெற முருகன் திருவருள் பாலித்துள்ளார்.

### கிரியா கிரமம்

காலை 9.00 மணிமுதல் 11.30 மணிவரை ஸ்கந்த புஸ்கரணி தீர்த்தக்கேணியில் கிரிகைகள் வாஸ்து சாந்தி, தூபி அபிஷேகம், கங்காபூஜை நடைபெற்று அதனைத் தொடர்ந்து தடாக திறப்பு விழா நடைபெறும்.

மேற்படி அங்குரார்ப்பண வைபவம் ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு.ச.இரத்தினவடிவேல் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

### நிகழ்ச்சி நிரல்

1) தேவாரம்
2) தலைமையுரை
3) ஆசியுரை **திரு.இ. ஆனந்தன் J.P**
(முன்னாள் தலைவர், சாளம்பை முருகன் தேவஸ்தானம்)
**செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்**
(அதிபர், யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி)
**சிவஸ்ரீ.இ.சுந்தரரேஸ்வரக்குருக்கள்**
(ஆதீனகர்த்தா, ஆஞ்சநேயர் தேவஸ்தானம் மருதனார்மடம்)
**சிவானந்தவாரிதி சிவத்திரு குமாரசாமி ஐயா**
4) காணி, கட்டிடம் அன்பளிப்புச் செய்தோரை கௌரவித்தல்
5) நன்றியுரை

அடியவர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து முருகன் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்

தேவஸ்தான பிரதம குரு
**சிவப்பிரம்மஸ்ரீ ச.து.நந்தகுமாரசர்மா**

அங்குரார்ப்பண குரு
**தத்புருஷ சிவாச்சாரியார்**
**கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள்**

மங்கள வாத்தியம்
**எஸ்.ராமதாஸ் குழுவினர்**
(இணுவில்)

ஒலி ஒளி அமைப்பு
**யமுனா சவுண்ட்ஸ்**
(கோட்டைக்காடு)

விழா உபயம்: **திரு.அப்புத்துரை கனகலிங்கம் குடும்பத்தினர்**

அனைவரும் வருக! கந்தன் அருள் பெறுக! ஓம் சரவணபவ!!!

சுபம்

**திரு.ச.இரத்தினவடிவேல் J.P** (தலைவர்) **திரு.வே.லோகராஜன்** (பொருளாளர்) **திரு.வை.யோகேந்திரன்** (செயலாளர்)

கோட்டைக்காடு,
மல்லாகம்,
27.05.2010

**ஆலய பரிபாலன சபை,**
**இந்து இளைஞர் தொண்டர் சபை**



வெளியீடு

மல்லாகம்

சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்

ஜய வருடம் ஆனித்திங்கள் 16ஆம் நாள்

30.06.2014

Email : salampaimurugan@gmail.com

www.facebook.com/salampai.murugan

Salampai Murugan - Mallakam

Harikanan, Jaffna. 021 222 2717